
உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ்,

உமா மஹால் :: மசூலிப்பட்டணம்

உமா கோல்டு கவரிங் போஸ்டாபீஸ்

ஓர் உயர்ந்த உலோகத்தின் மேல் அசல் தங்கத் தகட்டினால் சுற்றப்பெற்று வெல்டிங் செய்தது. அப்படி இல்லை என்று நிரூபிப்பவர்களுக்கு 500 ரூபாய் இனாம். நாங்கள் தயார் செய்யும் தங்க கவரிங் நகைகளின் மேல் UMA என்ற எழுத்துக்களைப் பார்த்து வாங்குங்கள். பொன் நிறம். 10 வருஷம் உத்தரவாதம்.



பரீக்ஷை செய்ய வேணும் என்பவர் உமா ஆபரணங்களை நைட்ரிக் ஆஸிட் என்கிற திராவகத்தில் போடவும். போட்டு 5 நிமிஷத்திற்கு கவரிங் செய்த பொன் வரும். இப்படி பரீக்ஷை செய்தவர் அநேகம் பேர்கள் எங்களுக்கு சர்டிபிகேட் கொடுத்தார்கள். 800 டிசைன் கொண்ட கேட்லாக் இனாம். உள் நாடுகளைவிட இதர தேசங்களுக்கு கேட்லாக் விலையைவிட 25% அதிகம். N. B:—ஆபரணங்கள் வி. பி. சார்ஜ் 0-15-0 அணா மாத்திரம்

Telegrams: "U M A" MASULIPATAM


விளையாடும் கைகளில் அழுக்குப்படிகின்றது...
எங்கு அழுக்கிருக்கிறதோ அங்கு கிருமிகளாலான
அபாயம் ஏற்படும்!
அடிக்கடி லைப்பாயினால் சுத்தம்
செய்துகொள்ளுங்கள்!
லைப்பாய்
சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைக்காப்பாற்றுகிறது
L. 108-172 TM

கல்கி
பொருளடக்கம்

மலர் 8 | இதழ் 52 — ஜூலை 24 — விரோதி ஆடி 9உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 52

என்ன செய்தி?

கல்கத்தா விஜயம்

சில தினங்களுக்கு முன் கல்கத்தாவிலே நடந்த உபதேர்தல் முடிவைப் பற்றிக் "கல்கத்தா தோல்வி" என்ற தலைப்பின் கீழ் முந்திய இதழ் ஒன்றில் எழுதியிருந்தோம். அதற்கு எதிரிடையாக இவ்வாரத்தில் "கல்கத்தா விஜயம்" என்ற தலைப்பில் எழுதக் கூடியதாயிருப்பது நமக்கு அளவில்லா மகிழ்ச்சி தருகிறது. பண்டித ஜவாஹர்லால் நேரு கல்கத்தாவுக்குச் சென்று திரும்பியதைத் "திக் விஜயம்" என்று குறிப்பிட்டாலும் மிகையாகாது. கல்கத்தா மக்கள் சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரிக்கு அத்தகைய மாபெரும் வரவேற்பை அளித்தார்கள். கல்கத்தாவின் சரித்திரத்திலேயே இல்லையென்று சொல்லும்படி பத்து லட்சம் ஜனங்கள் அமைதியாகக் கூடியிருந்து பண்டிதஜியின் சொற்பொழிவைக் கேட்டார்கள். விஷமக்காரர்கள் சிலர் வெடிகுண்டு எறிந்து கூட்டத்தைக் கலைப்பதற்குச் செய்த முயற்சி பலிக்கவில்லை. இதிலிருந்து "கல்கத்தா தோல்வி"க்குக் காரணம் என்னவென்பதும் தெளிவாயிற்று. காங்கிரஸ் மகா சபையின் பேரிலோ இந்திய சர்க்காரை நடத்தும் மாபெரும் தலைவர்கள் மீதோ கல்கத்தா மக்களுக்கு வெறுப்பு ஒன்றும் கிடையாது என்பதும், மேற்கு வங்காள மந்திரி சபை, மேற்கு வங்காள காங்கிரஸ், — இவற்றின் மீதுதான் கல்கத்தா ஜனங்களுக்குக் கோபம் என்பதும் வெட்ட வெளிச்சமாயிற்று.

வழக்கம்போல் ஜவாஹர்லால்ஜி தம் மனதில் எழுந்த உணர்ச்சிகளைப் பட்டவர்த்தனமாக வெளியிட்டார். மூடி மறைக்கவும் இல்லை; மெழுகிப் பூசவும் இல்லை. குறைகள் உள்ள இடத்தைத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

"வங்காள காங்கிரஸில் கட்சிப் பிணக்குகளும் ஊழல்களும் ஏற்பட்டுவிட்டன. தன்னலமின்றித் தியாகம் செய்து ஜனங்களுக்குத் தொண்டு செய்ததால்தான் காங்கிரஸ் மகத்தான பெருமையை அடைந்தது. எனவே, ஜனங்களுக்குத் தொண்டு செய்யக் காங்கிரஸ் தவறிவிடுமாயின், அது மறைந்து ஒழியவேண்டியதுதான். காங்கிரஸின் உயிர், செல்வம் எல்லாம் மக்களுக்கு அதன்மீதுள்ள நம்பிக்கையேயன்றி வேறு எதுவுமல்ல. பழைய செல்வாக்கை வைத்துக்கொண்டு மாத்திரம் எந்த ஸ்தாபனமும் உயிர் வாழ முடியாது. காங்கிரஸ் அப்போதைக்கப்போது எழும் பிரச்னைகளைச் சமாளித்து, ஜனங்களின் கஷ்டங்களுக்குப் பரிகாரம் தேடி அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும்" என்று கல்கத்தாவில் நடந்த மாபெரும் கூட்டத்தில் ஜவாஹர்லால்ஜி கூறினார். ஒரு குறிப்பிட்ட கட்சியில் இருப்பதிலும், ஒரு குறிப்பிட்ட கொள்கையை அனுஷ்டிப்பதிலும் தவறு எதுவும் இல்லை. ஆனால் டிராம்களுக்குத் தீ வைத்தல், கூட்டத்தில் வெடி குண்டுகளை வீசுதல், எதிர்க்கட்சியினரை இரக்கமின்றித் தாக்குதல் முதலிய காரியங்களில் ஈடுபடுவது கொடியவர்களும், கொலைகாரர்களும் செய்யும் காரியமேயன்றி, அதில் கட்சியோ கொள்கையோ எதுவுமில்லை என்பதையும் இந்தியாவின் பிரதம மந்திரி விளக்கிக் கூறினார்.

பரிகாரம் தேடுக!

"ஏதோ சில காங்கிரஸ் வாதிகள் செய்யும் தவறுக்காகக் காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பொது ஜனங்கள் வெறுக்கக்

கூடாது. ஜனங்களின் கஷ்ட நஷ்டங்களைத் தீர்த்து நாட்டில் சமாதானமும் சுபிட்சமும் சந்தோஷமும் நிலவும்படி செய்வதே காங்கிரசின் இலட்சியம். ஜனங்களின் பரிபூரணமான ஆதரவும் ஒத்துழைப்புமின்றி அந்த இலட்சியம் பூர்த்தி பெருது'' என்பதாகப் பொது மக்களின் கடமை என்ன என்பதையும் ஜவாஹர்லால்ஜி சுட்டிக் காட்டினர். காங்கிரஸ் இழந்த செல்வாக்கை, நமது அருமைத் தலைவர் விஜயம் செய்ததன் பலனுக மீண்டும் அடைந்து புதிய பலத்துடன் விளங்கும் என எதிர்பார்ப்போமாக.

கல்கத்தாவில் பண்டித ஜவாஹர்லால் நேரு கூறிய பொன் மொழிகளை மற்ற மாகாணங்களிலுள்ள மந்திரிகளும் காங்கிரஸ் வாதிகளும் மனதிற் கொண்டு தங்களுடைய தவறுகளுக்குப் பரிகாரம் தேடிப் புனித ஸ்தாபனத்தின் பெருமைக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். ஜனங்களின் சுக துக்கங்களை ஆராய்ந்து அவர்களுடைய க்ஷேமத்திற்கான தகுந்த முறைகளைக் கைக் கொள்ளாமல் "காங்கிரசுக்குப் பதில் கிடையாது" என்று சொல்லிக் கொண்டிருப்பதால் மாத்திரம் காங்கிரசின் பலத்தையும் செல்வாக்கையும் பாதுகாக்க முடியாது.

கதிமோட்சம் பிறந்தது!

"இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தால் இந்திய மகா ஜனங்களின் துன்பம் தீரலாம்; ஆனல், மூன்ருவது வகுப்புப் பிரயாணிகளின் கஷ்டங்கள் இந்த ஜன்மத்தில் தீருமா?" என்று சந்தேகப்பட்டவர்கள் உண்டு. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் அலங்கோலத்துக்கு இந்திய ரயில்வேக்களின் மூன்ருவது வகுப்பு வண்டிகள் எடுத்துக் காட்டாக இருந்து வந்தன. அவர்கள் பல பல வருஷங்கள் கதறினர்கள். யாதொரு வசதியுமின்றி ஆடுமாடுகளைப் போல் அடைக்கப்படும் அக்கிரமத்துக்கு முடிவுகாலம் இல்லையா என்று ஏங்கினர்கள். அப்போதெல்லாம் அவர்களுடைய கூக்குரல் யாருடைய காதிலும் விழவில்லை. ஆனல் சுதந்திர இந்தியாவில் மூன்ரும் வகுப்புப் பிரயாணிகளின் ஜாதகம் அதிர்ஷ்ட ஜாதகமாயிருக்கலாமென்று தோன்றுகிறது. அவர்களுடைய கஷ்டங்களுக்குக் கதிமோட்சம் பிறந்து வருகிறது.


எல்லாப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கின்றன. புதிய வரிகள் பல விதிக்கப்பட்டிருக்கின்றன. தபால் கார்டு விலைகூட அதிகமாகிவிட்டது. ஆனல் மூன்ரும் வகுப்பு ரயில் விகிதம் மட்டும் உயரவில்லை என்பதை நினைத்து நாம் சந்தோஷப்படாமல் இருக்க முடியாது. விகிதம் உயரவில்லையென்பதுடன், மூன்ரும் வகுப்புப் பிரயாணத்துக்கு முன் எப்போதுமில்லாத பல வசதிகள் இப்போது ஏற்பட்டு வருகின்றன. புதிதாக வரப்போகும் எல்லா மூன்ரும் வகுப்பு வண்டிகளிலும் மின்சார விசிறிகள் போடப்பட்டு வருகின்றன. இதுவரையில் நித்திய அமாவாசையாக இருந்த பல சில்லறை ஸ்டேஷன்களிலும் விளக்குகள் ஜொலிக்கின்றன. ஸ்டேஷன்களிலுள்ள மூன்ரும் வகுப்புப் பிரயாணிகளின் 'வெயிடிங் ரூமி'ல்கூட விசிறிகள் ஓடப்போகின்றன! எழும்பூர், திருச்சினுப்பள்ளி, மதுரை போன்ற முக்கிய ஸ்டேஷன்களிலுள்ள பிளாட்பாரங்களிலும் விசிறிகள் போட உத்தேசித்திருக்கிருர்கள். ஒலி பெருக்கிக் கருவிகளின் மூலம் முக்கிய தகவல்களை அறிவித்தல், எல்லா ஸ்டேஷன்களிலும் வண்டிகளிலும் குடி தண்ணீர் வசதி செய்தல், புதிய வண்டிகளைத் தயாரித்து ஜன நெருக்கத்தைக் குறைத்தல்,—இவை போன்ற இன்னும் பல சௌகரியங்கள் பிரயாணிகளுக்குச் செய்யப்பட்டு வருகின்றன.

பதினைந்து கோடி நஷ்டம்

மேற்படி விவரங்களையெல்லாம் எம். எஸ். எம்., எஸ். ஐ. ஆர்., ரயில்வேக்களின் பொது ஜனத் தொடர்பு அதிகாரி ஸ்ரீ எஸ். ஆர். சர்மா பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிருர். ரயில்வே அதிகாரிகள் அளித்து வரும் வசதிகளைக் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ சர்மா, பொதுஜனங்களும் தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிருர்.

சுதந்திர இந்தியாவில் ரயில்வேக்கள் பொது ஜனங்களின் சொத்துக்கள் என்றும், எனவே டிக்கெட் வாங்காமல் பிரயாணம் செய்வோரால் இறுதியில் நஷ்டத்துக்கு உள்ளாவோர் பொது ஜனங்களே என்பதை மீண்டும் ஞாபகப் படுத்தியிருக்கிருர். டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வோரால், இந்திய ஜனங்கள் வருஷா வருஷம் பதினைந்து கோடி ரூபாயை இழக்கிருர்கள் என்றும் ஸ்ரீ சர்மா கூறியிருக்கிருர். டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வதை அடியோடு ஒழிக்கும் விஷயமாகப் பொது ஜனங்கள் ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிருர். எனவே, பொது ஜனங்கள் தங்களுடைய சொத்தைப் பாதுகாக்கும் விஷயத்தில் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க முன் வராமலிருப்பார்களா?

சோதனை தொடருமா?



இங்கேயும் வந்து சோதனை போட்டு மானத்தை வாங்கி விடுவார்களோ?
சென்னை சர்க்கார்
பீகார் சர்க்கார்
மேற்கு வங்காள சர்க்கார்
SHASTRY

கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி

நம் தேசத்திலுள்ள கல்வி முறை நோய் பிடித்துப் போயிருக்கிறது. இதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். அந்த நோயைத் தீர்க்க வேண்டும் என்பதையும் அனைவரும் அங்கீகரிக்கிறார்கள். இந்த இரண்டு விஷயங்களிலும் அநேகமாக எல்லோருக்கும் ஏகோபித்த அபிப்பிராயம் இருக்கிறது; கருத்து வேற்றுமையே கிடையாது. அதாவது: (1) நமது கல்வி முறை நோய் பிடித்த கல்வி முறை; (2) அந்த நோயைத் தீர்த்து நமது கல்வி முறையை ஆரோக்கியப் படுத்த வேண்டும்.

ஆனால் நோய் என்ன நோய் என்பதிலும் அதைக் குணப்படுத்தும் வழி என்ன என்பதிலும் அளவில்லாத அபிப்பிராய பேதம் இருக்கிறது. நோய்க்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயர் சொல்லுகிறார்கள். குணப்படுத்துவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வைத்திய முறையைச் சொல்கிறார்கள். கணக்கில்லாத மருந்து வகைகளையும் சிபார்சு செய்கிறார்கள்.

நாமும் ஒரு வைத்திய முறையைக் குறிப்பிடுகிறோம். நாமும் ஒரு மருந்தைச் சொல்கிறோம். நாம் சொல்லும் முறை இயற்கை வைத்திய முறை. நாம் சொல்லும் மருந்து இயற்கை மருந்து. நமது கல்வி முறையிலுள்ள சகல நோய்களையும் தீர்க்கக்கூடிய மருந்து. ஆகையால் அதைச் 'சஞ்சீவி' என்று அழைக்கிறோம்.

* * *

நோய் இத்தகையது என்பதை முதலில் கவனித்துக் கொள்ளலாம்.

நமது கல்வி முறை அன்னியர்களாகிய ஆங்கிலேயர்களால் இந்த நாட்டில் புகுத்தப் பட்ட கல்வி முறை.

அன்னிய அரசாங்கத்தின் கீழ் குமாஸ்தாக்களையும் வக்கீல்களையும் மற்ற உத்தியோகஸ்தர்களையும் சிருஷ்டிப்பதற்காக ஏற்பட்ட கல்வி முறை.

நமது தேச நிலைமைக்கும் பண்பாட்டிற்கும் பொருந்தாத கல்வி முறை.

சிறுவர்-சிறுமிகளின் மூளைக்கு அதிகமாக வேலை கொடுத்து மூளை வறளும்படி செய்யும் கல்வி முறை.

தேக நலத்தைக் கெடுத்து உடலை மெலியச் செய்யும் கல்வி முறை.

பேனாப்பிடித்து எழுதுவதைத் தவிர மற்றப்படி கைவிரல்களுக்கு வேலையில்லாமலும் கைத் திறமை வளராமலும் அடித்த கல்வி முறை.

சமூகத்தில் ஒரு சிறு பகுதியாரை அதிகம் படித்தவர்களாயும் மற்றப் பெரும்பாலான ஜனங்களை எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயும் ஆக்கி விட்ட கல்வி முறை.

நமது நாட்டின் பொருளாதார நிலைமைக்குச் சற்றும் பொருத்தமில்லாதபடி ஏராளமான பணச் செலவு செய்ய வேண்டியிருக்கும் கல்வி முறை.

இத்தகைய எல்லா வியாதிகளையும் தீர்க்கக்கூடிய ஒரே சஞ்சீவி மருந்து உண்டா என்பது கேள்வி.

"உண்டு" என்பது நமது பதில்.

* * *

நமது கல்வி முறையின் நோயைப் பற்றி முன்னேயெல்லாம் பொது ஜனத் தலைவர்களும் மக்களால் மதிக்கப்பட்ட அறிஞர்களும் பேசுவது வழக்கம். சுவாமி விவேகானந்தர் முதல் காந்தி மகான் வரையில் அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்; எழுதியிருக்கிறார்கள். பல யோசனைகளும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் முற்காலத்திலெல்லாம் அரசாங்க பீடங்களில் இருந்தவர்களும் அதிகார வர்க்கத்தினரும் நம் கல்வி முறையின் சீர்கேட்டைப் பற்றிப் பேசுவதில்லை; சீர்திருத்தும் அவசியத்தைப் பற்றியும் பேசுவதில்லை.

சுதந்திர இந்தியாவில் கல்வி மந்திரிகள் கல்வி முறையைப் பற்றிப் பேசுகிறார்கள்; பேச வேண்டியதுதான். ஆசிரியர்கள், உபாத்தியாயர்கள் அதைக் குறித்துப் பேசுகிறார்கள்; பேசிவிட்டுப் போகட்டும்.

ஆனால் கவர்ன்மெண்ட் காரியதரிசிகளும் கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பேசத் தொடங்கும் போது நம்முடைய கல்வி முறைக்கு இன்னும் என்ன கேடு நேரப் போகிறதோ என்று நாம் பயப்பட வேண்டியதாயிருக்கிறது.

சென்னை அரசாங்கத்தின் கல்வி இலாகாக் காரியதரிசி ஸ்ரீ லோபோ பிரபு என்பவர் அகில இந்திய ரேடியோவில் சென்ற 16உ இரவு ஒரு பிரசங்கம் செய்தார். அதில சென்னை சர்க்கார் கல்வி அபிவிருத்தி விஷயமாகவும் கல்வி முறையைச் சீர்திருத்தும் விஷயமாகவும் என்னென்ன திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள் என்று எடுத்துக் கூறினார். அவர் கூறியதிலிருந்து ஒரே ஒரு விஷயம் மிகத் தெளிவாகத் தெரிய வந்தது. அதாவது கல்விப் பிரச்னை ரொம்ப ரொம்ப ரொம்பக் கஷ்டமானது என்று. "ஐயோ! மெத்தக் கடினம்! ஐயையோ! மெத்தக் கடினம்!" என்று லோபோ பிரபு லபோ லபோ என்று அலறினார்.

"கல்விப் பிரச்னை சாமான்யமான பிரச்னை அல்ல. மிக மிகப் பெரிய பெரிய பிரச்னை. முப்பத்தெட்டு லட்சம் குழந்தைகளைப் படிப்பிக்க வேண்டும். 185 லட்சம் பெரியவர்களைப் படிப்பிக்க வேண்டும். இந்தக் காரியத்திற்கு வேண்டியிருக்கும் பணத்தை நினைத்தால் கதி கலங்குகிறது. அதைச் சமாளிக்கலாமென்றால், இன்னும் எத்தனை எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. உபாத்தியாயர்களின் சைன்யம் ஒன்று வேண்டும். பயிற்சி பெற்ற அத்தனை உபாத்தியாயர்களுக்கு எங்கே போவது? கட்டடங்களின் பிரச்னையை நினைத்தாலும் உள்ளம் பிரமிக்கிறது. தற்காலத்தில் அவ்வளவு கட்டட சாமான்கள் எங்கே கிடைக்கும்? கட்டடத் தொழிலாளிகள்தான் கிடைப்பார்களா? எல்லாவற்றிலும் மகத்தான பெருங் கஷ்டம் பெற்றோர்களும் குழந்தைகளும் கல்வி விஷயத்தில் கொண்டிருக்கும் மனப்பான்மைதான். பெற்றோர்கள் கல்வியின் அவசியத்தை உணர்வதில்லை. தாங்கள் செய்யும் தொழில்களிலேயே தங்களுடைய குழந்தைகளையும் ஈடுபடுத்தி விடுகிறார்கள்! குழந்தைகளுக்கோ படிப்பில் ருசி இருப்பதில்லை. ஆகையால் (நாங்கள்) எவ்வளவு கஷ்டப்பட்டு முயன்றாலும் படிக்க ஆரம்பிக்கும் குழந்தைகளில் 100-க்கு 29 பேர்தான் ஐந்தாவது வகுப்பை எட்டிப் பார்க்கிறார்கள்!"

இதைப் படித்ததும் நமக்கு என்ன தோன்றியது என்பதைச் சொல்லிவிடுகிறோம். கல்வி இலாகாவின் தலைமை அதிஷ்டான பீடத்திலுள்ள காரியதரிசியிலிருந்து கல்வி இலாகாவின் டைரக்டர், உதவி டைரக்டர்கள், மற்றும் பற்பல உத்தியோகஸ்தர்கள், அடிப்படையிலுள்ள குமாஸ்தாக்கள் - பியூன்கள் வரையில் வேறு இலாகாக்களுக்கு மாற்றித் தொலைத்துத் தலை முழுகி விட்டு, மேற்படி உத்தியோகங்களில் எல்லாம் புதிய ஆட்களைப் போட வேண்டும் என்பதுதான். ஐயோ பாவம்! இவ்வளவு மகத்தான பிரம்மாண்டமான மிக மிகக் கஷ்டமான பிரச்னைகளின்மேல் மோதிக் கொண்டு அவர்கள் மட்டும் ஏன் கதி கலங்க வேண்டும்? மற்ற இலாகா உத்தியோகஸ்தர்கள் ஒரு கஷ்டமான பிரச்னையும் தீர்த்து வைப்பதற்கு இல்லாமல் எதற்காகக் 'கயால்' பாடிக்கொண்டு குஷாலாகத் திரிய வேண்டும்?

கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு அத்தகைய உதவியைச் செய்யும் அதிகாரம் நம்மிடம் இல்லை. ஆகையால் ஸ்ரீ லோபோ பிரபு குறிப்பிட்டிருக்கும் கஷ்டங்களைப் பற்றி ஆராயவேண்டியிருக்கிறது. அப்படி ஆராயும் போது அந்தக் கஷ்டங்களில் பல அவராகச் சிருஷ்டித்துக் கொண்ட கஷ்டங்கள் என்று ஏற்படுகிறது.

* * *

பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகள் படிப்பதில் சிரத்தை கிடையாது என்று ஸ்ரீ லோபோ பிரபு குற்றம் சாட்டுகிறார். அழகாயிருக்கிறது அல்லவா? பிள்ளைகளைப் படிக்க வைக்க வசதி இல்லையே என்று கண்ணீர் விடும் பெற்றோர்கள் எத்தனை ஆயிரம், பதினாயிரம், லட்சம் பேர் நாட்டில் இருக்கிறார்கள்? பெற்றோர்களுக்குக் குழந்தைகள் படிப்பதில் சிரத்தையில்லையாம்! நல்ல குற்றச் சாட்டு!

அப்புறம், பெற்றோர்கள் தங்களுடைய தொழில்களில் தங்கள் பிள்ளைகளும் ஈடுபட வேண்டும் என்று விரும்புகிறார்களாம்! வேறு என்ன விரும்ப வேண்டுமாம்? சென்னை மாகாணத்தில் எழுபது லட்சம் குழந்தைகள் படிக்கத் தகுந்த வயதில் இருக்கிறார்கள். இவ்வளவு குழந்தைகளும் லோபோ பிரபுவைப் போல் சர்க்கார் காரியதரிசிகளாகி மாதம் இரண்டாயிரம்—மூவாயிரம் சம்பளம் வாங்க முடியுமா? அந்த எழுபது லட்சம் குழந்தைகளும் படித்த பிறகு குமாஸ்தா வேலை தருவதாகவாவது ஸ்ரீ லோபோ பிரபு உத்தரவாதம் கொடுக்க முடியுமா? அவ்வளவு பேருக்கும் டபேதார் வேலை, பியூன் வேலை கொடுக்கிறதாகவேனும் உறுதி சொல்ல முடியுமா? அவ்வளவு பேரும் பெற்றோர்களின் தொழிலைச் செய்யாமல் வேறு என்ன செய்ய வேண்டும்? வேறு என்ன செய்ய முடியும்? ஓ லோபோ பிரபுவே!

உண்மையில், நம்முடைய கல்வி முறையில் உள்ள மகத்தான குறை என்ன தெரியுமா? குழந்தைகள் கொஞ்சம் படித்ததும் பெற்றோர்களின் தொழிலை மேற்கொள்ள விரும்பாமல்

சர்க்கார் உத்தியோகம் பார்க்க விரும்புவதுதான். நமது நாட்டில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் விவசாயிகள். இவ்வளவு பேருடைய குழந்தைகளும் படித்துவிட்டு விவசாயத் தொழிலை மேற்கொள்ளா விட்டால் அவர்கள் வேறு என்ன தொழில் செய்ய முடியும்? எல்லாரும் வேறு வேலைகளுக்குப் போய்விட்டால் பயிர்த்தொழில் தான் என்ன கதி அடைகிறது?

ஏதோ கடவுள் அருளால், தேசம் செய்த புண்ணியத்தால், நம்முடைய நாட்டு மக்களில் பலர் இன்னமும் தங்களுடைய தொழிலைத் தங்கள் குழந்தைகளும் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும்; போற்ற வேண்டும்; கோயிலில் வைத்துக் கும்பிட வேண்டும்!

அதற்குப் பதிலாக அவர்களைக் குறை கூறுகிறார் நமது லோபோ பிரபு!

அப்புறம் பிள்ளைகளின் பேரிலும் புகார் சொல்கிறார். அவர்களுக்குப் படிப்பில் ஊக்கம் இருப்பதில்லையாம். ஏன் இருப்பதில்லை? பள்ளிக்கூடத்துக்கு ஒரு தடவை போனவர்கள் எதற்காகப் பிறகு போகாமல் தங்கி விடுகிறார்கள்? ஏன் ஐந்தாவது வகுப்புக்கு முன்னால் நின்றுவிடுகிறார்கள்?

'உருசி கண்ட பூனை உரியை உரியைத் தாவும்' என்பது பழமொழி. பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் படிப்பில் ருசியை உண்டு பண்ணினால் அவர்கள் ஏன் நிற்கிறார்கள்? பள்ளிக்கூடங்களில் படிப்பில் வெறுப்பை உண்டு பண்ணுவதுதானே அவர்கள் நிற்பதற்குக் காரணமாக வேண்டும்?

பணச் செலவை நினைத்து லோபோ பிரபு பிரமிப்படைவது நியாயந்தான்! இப்போது கல்விக்காகச் செலவு செய்யும் பதினொரு கோடி ரூபாயையே சென்னை சர்க்கார் தாங்க முடியவில்லை. மேலும் பணத்துக்கு எங்கே போவது? நாற்பத்தைந்து கோடி ரூபாய்க்குத் திட்டம் போடுவதில் என்ன பயன்?

பதினைந்து வருஷ காலத்தில் முப்பத்தெட்டு லட்சம் குழந்தைகளை ஆதாரக் கல்வி முறைப்படி படிக்க வைப்பதற்குத் திட்டமாம்! இதற்கு 45 கோடி ரூபாய் செலவாம்! இந்தப் பதினைந்து வருஷத்துக்குள் எவ்வளவு புதிய குழந்தைகள் பிறந்து விடுவார்கள்! அவர்களையெல்லாம் எப்படிப் படிக்க வைப்பது? அதற்குப் பணத்துக்கு எங்கே போவது?

அப்புறம், கட்டிடப் பிரச்னை! கல்வி வளர்ச்சியைத் தடுத்துக்கொண்டு கட்டிடப் பிரச்னை மலைபோல் நிற்கிறது என்று ஸ்ரீ லோபோ பிரபு கூறுகிறார். அந்த மலையைப் பெயர்ப்பதற்கு வழி ஒன்றும் காணவில்லையே என்று தவியாய்த் தவிக்கிறார். ஐயோ! பாவம்!

கல்வி சம்பந்தமான இத்தகைய எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்து வைப்பதற்கு ஒரு வழி இருக்கிறது.

லோபோ பிரபு குறிப்பிட்ட தடைகள், குறிப்பிடாத தடைகள் எல்லாவற்றையும் போக்க வழி இருக்கிறது.

பணச் செலவு அதிகம் செய்யாமல் சென்னை மாகாணத்திலுள்ள எல்லாக் குழந்தைகளையும் உடனே படிக்க வைப்பதற்குச் சாதனம் இருக்கிறது.

நமது கல்வி முறையைப் பிடித்துள்ள பெருநோயைத் தொலைக்க மருந்து இருக்கிறது.

அதை நாம் சொன்னால் கேட்க மாட்டார்கள். அமெரிக்காவிலிருந்து வந்த கல்வி நிபுணர் சொன்னால் ஒரு வேளை கேட்கலாம் அல்லவா?

இந்திய சர்க்கார் கொஞ்ச காலத்துக்கு முன்பு சர்வகலாசாலை விசாரணைக் கமிஷன் ஒன்று நியமித்தார்கள். அந்தக் கமிஷனில் இந்தியா தேசத்துக் கல்வி நிபுணர்களுடன் மேனாடுகளில் பிரசித்தி பெற்ற கல்வி நிபுணர்கள் சிலரையும் சேர்த்து நியமித்தார்கள். அவர்களில் டாக்டர் ஏ. இ. மார்கன் ஒருவர். அமெரிக்காவில் முன்னேற்றக் கல்வி முறையில் பல சோதனைகள் நடத்தி வெற்றி அடைந்தவர். வெறும் ஏட்டுக் கல்வியாளர் அல்ல. நீர்ப்பாசன என்ஜினியரிங் நிபுணர். டென்னஸி பள்ளத்தாக்கு நீர்ப்பாசனத் திட்டம் உலகத்திலேயே மிகப் பெரிது. அந்த மாபெருந் திட்டத்தை நடத்தி வைத்த சங்கத்தின் தலைவர் டாக்டர் ஏ. இ. மார்கன்.

அத்தகையவர் இந்தியாவுக்கு வந்திருந்தார். யூனிவர்ஸிடி கமிஷன் அங்கத்தினர் ஹோதாவில் தேசம் முழுவதும் சுற்றினார். இந்தியாவின் கல்வி முறையை நன்கு ஆராய்ந்தார். அந்த ஆராய்ச்சியின் முடிவுகளையும் அமெரிக்காவில் தமது அனுபவங்களையும் ஆதாரமாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதினார். 1949 ஏப்ரல் 28உ தினப் பத்திரிகைகளில் அது வெளியாகியிருக்கிறது. அந்தக் கட்டுரையை மிஸ்டர் லோபோ பிரபுவும் மற்றும் கல்வி இலாகா அதிகாரிகளும் நூறு தடவை படிக்க வேண்டும். நூறு தடவை படித்தாலும் அவர்களுக்கு ஒருவேளை விளங்காது. புதிதாகக்

கல்வி மந்திரியாகி யிருக்கும் கனம் மாதவ மேனன் ஒரு தடவை படித்தால் போதும் என்று கருதுகிறேன். மேற்படி கட்டுரையில் மிஸ்டர் மார்க்கன் வாழ்க்கையுடன் ஒட்டாத வெறும் புத்தகப் படிப்பு எவ்வளவு தீமை பயப்பது என்பதை விஸ்தாரமாக விளக்கி யிருக்கிறார். கட்டுரையின் கடைசியில் டாக்டர் மார்க்கன் இந்தியாவின் கிராமக் கல்விக்காகக் கொடுத்திருக்கும் திட்டம் பின்வருமாறு :—

"ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள குழந்தைகளை இரண்டு பகுதியாகப் பிரிக்க வேண்டும். ஒரு பகுதிக் குழந்தைகள் வாரத்துக்கு மூன்று நாளும் மற்றொரு பகுதிக் குழந்தைகள் வாரத்தில் மற்ற மூன்று நாளும் பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் படிக்க வேண்டும்.

பள்ளிக்கூடம் போகாத நாட்களில் குழந்தைகள் வீட்டில் இருந்து பெற்றோர்களின் தொழில்களில் உதவி செய்யும்படியோ அல்லது சும்மாத் திரிந்து விளையாடி வரும்படியோ விட்டுவிட வேண்டும்.

நீண்டகால வகுப்புகளில் குழந்தைகள் படிப்பதைக் காட்டிலும் குறைந்த கால வகுப்புகளில் குழந்தைகள் அதிகம் கற்றுக் கொள்கிறார்கள் என்பது திட்டமாக நிரூபணமாகி யிருக்கிறது. கற்றுக் கொண்ட விஷயமானது குழந்தைகள் வேறு காரியங்களைக் கவனிக்கும்போதுதான் உள் மனதில் நன்கு ஜீரணிக்கப்படுகிறது.

வாரத்துக்கு மூன்று நாள் மட்டும் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகும் ஏற்பாட்டினால் இந்தியக் குழந்தைகளின் கல்வி சம்பந்தமான பல பிரச்னைகள் தீர்ந்துவிடும்.

வாரத்துக்கு இருபது மணி முதல் முப்பது மணி வரையில் வளரும் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் இருக்கச் செய்வது ஒரு விதச் சிறைவாசமே யாகும். பெரியவர்களுக்குச் சிறைவாசம் எவ்வளவு துன்பம் தருகிறதோ அவ்வளவு குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்துச் சிறைவாசமும் துன்பம் தருகிறது. பெரியவர்கள் குழந்தையின் இயல்பை மறந்து விடுகிறார்கள். குழந்தைகளுக்கு வீட்டில் இருக்கவும் வீட்டு வேலை செய்யவும் அக்கம்பக்கத்தாரோடு பழகவும் விளையாடவும் சோம்பேறித்தனமா யிருக்கவும்கூட அவகாசம் கொடுக்கவேண்டும்.

வாரத்துக்கு மூன்று நாள் என்னும் ஏற்பாட்டினால் பள்ளிக்கூடத்துச் சிறைவாசம் குறையும். இந்தச் சிறைவாசம் குழந்தைகளுக்கு மிக்க தீமையை உண்டு பண்ணுகிறது.

குடும்பத்தாருடனும் சமூகத்தாருடனும் குழந்தைகளுக்கு அதிகப் பழக்கம் இருக்கும். பள்ளிக்கூடத்து ஏட்டுப் படிப்பைத் தவிர வாழ்க்கைக்கு அவசியமான கல்வியைக் கற்றுக் கொள்வார்கள்.

முக்கியமாக, இப்போது செலவு செய்யும் அதே பணத்தைக் கொண்டு இப்போது படிக்கின்ற குழந்தைகளைப் போல் இரண்டத்தனை குழந்தைகளைப் படிக்கச் செய்யலாம்."

டாக்டர் மார்க்கன் குறிப்பிட்டிருக்கும் மருந்து ஒன்றுதான் இந்தியாவின் கல்வி முறையைப் பிடித்திருக்கும் நோயைத் தீர்க்கும் சஞ்சீவி மருந்து. இதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

"வாரத்துக்கு மூன்று நாள் பள்ளிக்கூடம்" என்பது டாக்டர் மார்க்கனின் மருந்து. இது கொஞ்சம் கசப்பான மருந்து. ஆகையால் கொஞ்சம் அதில் சர்க்கரை சேர்த்துக் கொள்ளலாம்.

"வாரத்துக்கு ஆறு நாள் பள்ளிக்கூடம்; தினத்துக்கு ஒரு வேளை - இரண்டரை மணி நேரம்!" என்று மாற்றிக் கொள்வோம்.

அப்போது வாரத்துக்குப் பதினைந்து மணி நேரம் பள்ளிக்கூடம் ஆகிறது. டாக்டர் மார்க்கனின் நோக்கம் நிறைவேறுகிறது. அதாவது பள்ளிக்கூடத்துச் சிறை வாச நேரம் குறைகிறது.

இந்த ஏற்பாட்டின் மூலம் நமது கல்வி முறையின் குறைகளையெல்லாம் போக்கிக் கொள்ளலாம். இது எப்படி என்பதைப் பார்ப்போம்.

* * *

இப்போது சென்னை மாகாணத்தில் பள்ளிக்கூடம் போகும் வயதுள்ள குழந்தைகள் 70 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் 35 லட்சம் பேர் இப்போது பள்ளிக்கூடம் போகிறார்கள்; பாக்கி 35 லட்சம் பேருக்குப் பள்ளிக்கூடம் வேண்டும்.

தற்சமயம் சென்னை மாகாணத்தின் 50 கோடி ரூபாய் வருமானத்தில் 11 கோடி கல்வி இலாகாவுக்குப் போகிறது. மேலும் பணம் செலவு செய்வது சமீபத்தில் இயலாத காரியம்.

ஆனால் தினம் ஒரு வேளை — இரண்டரை மணி நேரம் பள்ளிக்கூடம் என்று ஏற்படுத்துவதால் இப்போதுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களையும் ஆசிரியர்களையும் கொண்டே இன்னும் 35 லட்சம் குழந்தைகளையும் படிப்பிக்கலாம்.

ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் இப்போது ஐந்து உபாத்தியாயர்களின் கீழ் நூறு பிள்ளைகள் படிப்பதாக வைத்துக் கொள்வோம்.

இந்த நூறு பிள்ளைகளும் இப்போது காலை மாலை இரண்டு வேளையும் பள்ளிக்கூடம் வருகிறார்கள். அவர்களைக் குறைந்தது ஐந்து மணி நேரம் ஆசிரியர்கள் கஷ்டப்படுத்துகிறார்கள்.

குழந்தைகளின் இளம் மூளையின் ஆற்றலுக்கு மேலே வேலை கொடுக்

கிறார்கள். குழந்தைகளின் உடல் நலமும் அறிவு நலமும் கெடுகின்றன.

அந்த நாறு குழந்தைகளுக்கும் காலை எட்டரை மணியிலிருந்து பதினொரு மணி வரையில் வகுப்பு நடத்துங்கள்; பிறகு அவர்களை வீட்டுக்கு அனுப்பி விடுங்கள்.

பிள்ளைகள் மத்தியானம் அவரவர்களுடைய வீட்டுக்குப் போவார்கள்; வீட்டில் சாப்பிடுவார்கள். (பள்ளிக் கூடத்தில் குழந்தைகளுக்குச் சோறு போடுவது என்ற பெயரால் சோற்றுக் கண்டிராக்டர்கள் பொதுப் பணத்தைக் கொள்ளையடிப்பது நின்று தொலையும்.)

மத்தியானத்துக்கு மேலே அவரவர்களுடைய பெற்றோர்களின் தொழிலைக் குழந்தைகள் பயிலுவார்கள்.

விவசாயிகளின் குழந்தைகள் விவசாயத்தில் உதவி செய்வார்கள். தச்சர்களின் குழந்தைகள் தச்சுத் தொழில் கற்றுக் கொள்வார்கள்.

இது பிள்ளைகளுக்கும் நல்லது; பெற்றோர்களுக்கும் நல்லது. குழந்தைகள் கையை உபயோகிக்கும் ஆற்றலை மறக்க மாட்டார்கள். வேலை செய்வதை அகௌரவம் என்று கருத மாட்டார்கள். படித்த பிறகு வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாக மாட்டார்கள். பெற்றோர்களுக்கும் தங்கள் வேலையில் பிள்ளைகளின் உதவி பாதி நாளைக்குக் கிடைத்து விடுகிறது. ஆகையால் குழந்தைகளைப் பள்ளிக் கூடத்துக்குப் போக வேண்டாம் என்று பெற்றோர்கள் தடுக்கமாட்டார்கள்.

தங்கள் பிள்ளைகள் வேலை செய்ய விரும்பாத பணக்கார முட்டாள் தகப்பனார்கள் சிலர் இருக்கலாம். அப்படிப் பட்டவர்களின் குழந்தைகள் வீட்டிலேயே மேலும் புத்தகங்களைக் கட்டிக் கொண்டு அழட்டும்! அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. சர்க்காரும் கவலைப்பட்டுச் சாத்தியம் இல்லை.

பள்ளிக்கூடங்கள் மத்தியானம் காலியாகின்றன அல்லவா? ஆசிரியர்களுக்கும் வேலை யில்லை யல்லவா? அதே பள்ளிக்கூடத்தில் அதே ஆசிரியர்களைக் கொண்டு இன்னொரு நாறு பிள்ளைகளுக்கு மத்தியானம் இரண்டரை மணியிலிருந்து ஐந்து மணி வரையில் பள்ளிக்கூடம் நடத்துங்கள்.

ஐந்து வயது முதல் பத்து வயது வரையில் உள்ள குழந்தைகளுக்குத் தினம் இரண்டரை மணிப் பள்ளிக் கூடம் யதேஷ்டம். அதற்கு மேலே பள்ளிக்கூடத்தில் அடைத்து வைப்பது சிறைவாசம்; அதற்கு மேலே புத்தகக் கல்வி போதிப்பது கொடூரம். குழந்தைகளின் உடலையும் மூளையையும் ஹிம்சைப் படுத்துவதே யாகும்.

இத்தகைய குழந்தை ஹிம்சை இத்தனை நாளும் பொது மக்களின் செலவில் நடந்து வந்திருக்கிறது.

இப்போதாவது அந்த மடமையையும் கொடுமையையும் நிறுத்தலாம். கல்வி முன்னேற்றத்துக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த நிபுணர் டாக்டர் மார்க்கன் சொன்ன பின்னராவது நிறுத்தலாம்.

முப்பத்தைந்து லட்சம் குழந்தைகள் படிக்கும் இடத்தில் அதே செலவில் எழுபது லட்சம் குழந்தைகளைப் படிப்பிக்கலாம். குழந்தைகளின் வருங்கால நலத்தையும் காப்பாற்றலாம்.

இந்த முறையில் ஆரம்பக் கல்வியை மாற்றினால் 100க்கு 71 குழந்தைகள் ஐந்தாவது வகுப்பை எட்டிப் பாராமல் நின்றுவிட மாட்டார்கள். பள்ளியில் படித்ததை மறக்க மாட்டார்கள். அவர்களுக்காகச் செலவு செய்த பொதுப் பணமும் வீண்போனதாகாது.

* * *

ஆரம்பக் கல்வி முறைக்கு டாக்டர் மார்க்கன் குறிப்பிட்டிருக்கும் மருந்தையே 'உயர் தரக் கல்வி'க்கும் நாம் சிபார்சு செய்கிறோம்.

இப்போது 'உயர்தரக் கல்வி' என்று சொல்லப்படுவது உண்மையில் உயர் தரமான கல்வி அல்ல.

ஹைஸ்கூல்களில் முதல் பாரத்திலிருந்து ஆறாவது பாரம் வரையில் நம்முடைய பிள்ளைகளுக்கு இப்போது சொல்லிக் கொடுக்கும் படிப்பில் பாதிக்கு மேலே உபயோகமற்றது; சிறுவர் சிறுமிகளின் மூளையை அநாவசியமாகச் சிரமப்படுத்துவது; ஆகையினால் தீமை பயப்பது.

முதல் பாரத்திலிருந்து ஆறாவது பாரம் வரையில் இப்போது வைத்திருக்கும் பாட திட்டங்களையும் பாட புத்தகங்களையும் பரீட்சைத் தாள்களையும் வாங்கிக் கொஞ்சம் சிரத்தையுடன் படித்துப் பார்க்கும் எவருக்கும் இது விளங்கும். (கல்வி இலாகா அதிகாரிகளையும் உபாத்தியாயர்களையும் நீக்கி மற்றவர்களைச் சொல்லுகிறோம்.)

நம்மிலே பலர் நம் குழந்தைகளின் பாட புத்தகங்களைப் புரட்டிப் பார்ப்பதில்லை; பரீட்சைத் தாள்களையும் வாங்கிப் பார்ப்பதில்லை. அப்படிப் பார்த்தால் நம்முடைய ஹைஸ்கூல் கல்வியில் வாழ்க்கைக்குப் பயனற்ற—அறிவு

வளர்ச்சிக்கு அவசியமில்லாத—குப்பை கூளங்கள் எவ்வளவு நிறைந்திருக்கின்றன என்பதைக் காண்போம்.

நமது கல்வி முறையைச் சீர்திருத்த நமது மாஜி கல்வி மந்திரி செய்த முயற்சிகள் பல. அவை யெல்லாம் உருப்படாமற் போனதன் காரணம் கல்வி முறையில் உள்ள அடிப்படையான கெடுதலை அகற்றாததுதான்.

உள்ளே யிருக்கும் நோயைத் தீர்க்காமல் மேலே எவ்வளவு சிம்பு வைத்துக் கட்டினாலும் பயனில்லை; உடம்பு பலம் அடையாது.

குப்பை கூளத்தை அகற்றாமல் வீட்டுக்குள் பன்னீரைத் தெளிப்பதில் யாதொரு பயனுமில்லை.

வௌவால்களை விரட்டாமல் அழகிய மேஜை நாற்காலிகளை வாங்கிப் போடுவதில் என்ன உபயோகம்?

நமது ஹைஸ்கூல் கல்வியில் முதல் பாரத்திலிருந்து ஆறாவது பாரம் வரையில் இப்போது வைக்கப்பட்டிருக்கும் பாடங்களைப் பாதியாக்குங்கள்.

தினம் ஒருவேளை — இரண்டரை மணி நேரம்—பள்ளிக்கூடம் போதும் என்று செய்யுங்கள்.

இதன் மூலம் இப்போது ஆயிரம் பிள்ளைகள் வாசிக்கும் ஹைஸ்கூலில் இதே பணச் செலவில் இரண்டாயிரம் பிள்ளைகள் படிக்கும்படி செய்யலாம்.

கட்டிடப் பிரச்னை மலை போலே தோன்றி லோபோ பிரபு போன்றவர்களைப் பயமுறுத்தாது. பணச் செலவை நினைத்துக் கதிகலங்கி மூர்ச்சையடைந்து விழவேண்டியதில்லை.

அரசாங்கத்துக்கு அதிகச் செலவு இல்லை. அதிகப் பிள்ளைகள் — இரட்டிப்புப் பிள்ளைகள் - படிக்கலாம்.

பிள்ளைகள் அநாவசியமான விஷயங்களை உருத்தள்ளி மூளையைக் கெடுத்துக் கொள்ளாமல் அவசியமான கல்வி கற்றுக் கடைத்தேறுவார்கள்.

காலையில் இரண்டரை மணி நேரம் பள்ளிக்கூடம் போய்விட்டு வரும் பிள்ளைகள் மத்தியானத்தில் படிக்க இஷ்டமிருந்தால் படிக்கட்டும். வேலை செய்ய வசதியிருந்தால் செய்யட்டும். கைத்தொழில் கற்றுக்கொள்ளச் சாதனம் இருந்தால் கற்றுக் கொள்ளட்டும். விளையாட்டில் விருப்பமிருந்தால் விளையாடட்டும். அல்லது ஊர் சுற்றட்டும்; வயல் காடுகளில் திரியட்டும்; இயந்திர சாலைகளுக்குப் போய் வேடிக்கை பார்க்கட்டும்; ரயில் ஓடுவதைப் பார்க்கட்டும்; ஆகாச விமானத்தை அண்ணாந்து பார்க்கட்டும்.

அல்லது சோம்பேறித் தனமாகச் சும்மா உட்கார்ந்திருக்கட்டும்.

பள்ளிக்கூடத்தில் கொஞ்சம் படித்து விட்டு மற்றப் பொழுதை மேற்கண்டவாறெல்லாம் கழிக்கும் பிள்ளைகளின் மனநிலைதான் படித்த படிப்பு நன்றாகத் தங்கி ஜீரணமாகும்.

அத்தகைய பிள்ளைகள்தான் நல்ல உடல் நலத்துடன் வளருவார்கள். வெளி உலகத்தை அறிவார்கள்.

வேலை யில்லாத் திண்டாட்டம் அவர்களைப் பேய்போலப் பயமுறுத்தாது. எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம் என்ற தைரியம் பெறுவார்கள்.

இப்படிச் சோம்பி யிருந்தும் ஊர் சுற்றியும் வளர்ந்த பிள்ளைகளில் பலர் உலகத்தில் மகத்தான காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்.

பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்காமல் உச்சி மோட்டைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்த சிறுவர்கள் சிலர் பிற்காலத்தில் உலகத்தின் மிகப் பெரிய மேதாவிகளாகி யிருக்கிறார்கள்.

* * *

மறுபடியும் சொல்கிறோம். நம்முடைய நாட்டில் கல்விப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு வழி இதுதான்.

ஒரு வேளைப் பள்ளிக்கூடம். இரண்டரை மணிப் படிப்பு.

காலையில் வரும் பிள்ளைகளுக்கு மத்தியானம் பள்ளிக்கூடம் கிடையாது. மத்தியானம் வருகிறவர்களுக்குக் காலையில் கிடையாது.

இந்த முறையைக் கொண்டுதான் சென்னை மாகாணத்து எழுபது லட்சம் குழந்தைகளுக்கும் உடனடியாக ஆரம்பக் கல்வி அளிக்க முடியும்.

இந்த ஒரு வழியினாலேதான் நம்முடைய குழந்தைக் குலத்தின் மூளையும் உடல் நலமும் கெட்டுப் போகாமல் காப்பாற்றலாம்.

இந்த ஒரு மருந்தினாலேயே நமது கல்வி முறையைப் பிடித்துள்ள கடும் நோயைப் போக்கலாம்.

இந்த ஒரு முறையினாலேயே கல்விக்காகப் பொதுஜன சர்க்கார் செலவு செய்யும் பணமெல்லாம் விரயமாகாமல் பயன்படச் செய்யலாம்.

பதினைந்து வருஷத் திட்டம்—நாற்பத்தைந்து கோடி ரூபாய்ச் செலவு— இவை யெல்லாம் வீண் தண்டச் செலவுதான்; ஆகாசக் கோட்டைத் திட்டங்கள்தான்; சந்தேகமில்லை.

குருகுலத் திருப்பணி

"இந்தத் தமிழ்நாடெங்கும் தமிழ் அன்பு பரவித் தழைக்கும்படி செய்யாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்!" என்று ஒரு தமிழன்பர் சபதம் செய்தார். அதற்கு ஒரு காலத் தவணையும் வைத்தார். குறிப்பிட்ட காலத்துக்குள் அவருடைய விருப்பம் நிறைவேறவில்லை. தமிழ் நாட்டில் தமிழன்பு போதிய அளவு பரவியதாக அவருடைய உள்ளம் திருப்தி கொள்ளவில்லை. ஸ்ரீ பாலசுந்தரம் என்னும் பெயர் கொண்ட அந்த வன்தமிழ்த் தொண்டர் "என் சபதம் நிறைவேறவில்லை. ஆகையால் என் பெயரை மாற்றிக் கொள்ளப் போகிறேன். இன்று முதல் என் பெயர் பாலசுந்தரம் அல்ல; இனிமேல் என்னை இளவழகன் என்று அழையுங்கள்!" என்றார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் பெருமானுடைய அருள்மொழியை வாழ்க்கையில் நிறைவேற்றி வரும் தமிழ் நாட்டுத் தொண்டர்களில் ஒருவர் திரு இளவழகனார். நெடுங்காலமாகத் தமிழ்த் தாய்க்கு அவர் அரும்பணி ஆற்றி வருகிறார். சங்க இலக்கிய இன்னூல் திரட்டு, பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை, சங்கநூற் கட்டுரைகள் முதலிய பல தமிழ் நூல்கள் இயற்றியுள்ளார்.

இத்தகைய நூல் இயற்றும் பணியுடன் இளவழகனாரின் உள்ளம் திருப்தியடையவில்லை. திருவள்ளுவர் பெருமானின் அற உரைகளை வாழ்க்கையில் நிறைவேற்றி வைப்பதையே நோக்கமாகக் கொண்ட குருகுலம் ஒன்று அமைக்க வேண்டும் என்று விரும்பினார். உண்மை உள்ளத்தில் எழுந்த விருப்பம் நிறைவேற உற்ற துணைகள் கிடைத்தன.

மதுராந்தகத்துக்கு அண்மையில் உள்ள மாம்பாக்கம் கிராமத்தில் விசாலமான இடம் கிடைத்தது. அங்கே தமக்கென ஒரு குடிசை அமைத்துக் கொண்டார். பிறகு, குருகுலத்துக்காகக் கட்டிடங்கள் அமைத்தார். முப்பதினாயிரம் ரூபாய் செலவில் ஒரு வரிசைக் கட்டிடங்கள் எழுந்தன. பிள்ளைகள் நூற்றைம்பது பேர் பழந்தமிழ் நாட்டுப் பண்புடன் ஒட்டிய கல்வி கற்பதற்கு முன்வந்தார்கள். கைத் தொழிற் பயிற்சியோடு ஒட்டிய கல்வி முறை அவர்களுக்குப் போதிக்கப்பட்டு வருகிறது.

குருகுலம் அமைந்துள்ள இடத்தை யொட்டி முப்பது ஏக்கரா நிலம் இப்போது கிடைத்திருக்கிறது. மொத்தம் நூறு ஏக்கரா நிலம் கிடைக்கலாமென்று இளவழகனார் எதிர்பார்க்கிறார். காலடைவில் குருகுலத்தைத் தமிழ்நாட்டில் ஒப்பற்ற கலை வளர்க்கும் கழகமாகச் செய்ய ஆசை கொண்டிருக்கிறார்.

மாம்பாக்கம் குருகுலத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழா ஜூலை மாதம் 9, 10 தேதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 'ஒரே மேடையில் இவ்வளவு பிரமுகர்கள் என்றும் சேர்ந்ததில்லை' யென்று சொல்லும்படியாக இவ்விழாவில் சொற்பொழிவாற்றப் பல பெரியோர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மாஜி பிரதமர் ஓமந்தூர் ரெட்டியார் திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்தார். எத்திராஜ் மாதர் கலாசாலை உதவி பிரின்ஸிபால் ஸ்ரீமதி சாரதாம்பாள் குருகுலக் கொடியை உயர்த்தினார். ஸ்ரீமதி ஆதிலக்ஷ்மி அம்மாள் குருகுல உணவு விடுதியைத் திறந்து வைத்து அன்னலக்ஷ்மியின் கொடியை நிலை நாட்டினார். குருகுலத்தின் ஆதி தெய்வமான திருவள்ளுவரின் உருவச் சிலையைக் 'கல்கி' ஆசிரியர் திறந்து வைத்தார். திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அருணகிரியாரின் புகழை அழகிய தமிழிலே பாடி மக்களைப் பரவசப்படுத்தினார். தணிகைமணி ஸ்ரீ செங்கல்வராயப் பிள்ளை திருப்புகழைப்பற்றி விரிவுரையாற்றினார். இசையரசு தண்டபாணி தேசிகர் இன்னிசைக் கச்சேரி செய்தார். கல்வி மந்திரி கனம் மாதவமேனன், கிராம முன்னேற்ற மந்திரி கனம் பரமேசுவரன், ஸ்ரீ திரு வி. கலியாணசுந்தரனார், மேயர் ராமசாமி நாயுடு, மாஜி மேயர் ராதாகிருஷ்ணப் பிள்ளை, திரு ரா. பி. சேதுப் பிள்ளை, திரு கோதண்டபாணிப் பிள்ளை, திரு நடராஜன், திரு வேதாசல முதலியார் முதலிய அறிஞர்கள் திறப்பு விழாவை யொட்டிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்கள்.

திருவிழா ஏற்பாடுகள் எல்லாம் மிகத் திறமையாகச் செய்யப்பட்டிருந்தன. உள்ளூர்ப் பிரமுகர்களின் கூட்டுறவும் ஒத்துழைப்பும் பரிபூரணமாக இருந்தன வென்பது நன்கு வெளியாயிற்று.

இவ்வளவு பெரியோர்களுடைய ஆசிகளுடன், இவ்வளவு நல்ல முறையில் திரு இளவழகனார் தொடங்கியிருக்கும் மாம்பாக்கம் குருகுலம் அதிவிரைவில் வளர்ச்சி பெற்று மகத்தான சர்வகலாசாலையாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாம்பாக்கம் குருகுலம்












காளைகள் பல பூட்டிய அலங்கார ரதத்தில் குருகுலத் திறப்பு விழாத் தலைவர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரை அமர்த்தி ஊர்வலம் விட்ட காட்சி.

குருகுலத் தலைவர் திரு இளையபெருமாளின் அகத்தின் அழகு முகத்தில் பொலிவதைக் கவனிக்கவும்.






திருவிழாப் பந்தல் முகப்பின் அழகிய தோற்றம்.



திறப்பு விழாவுக்கு விஜயம் செய் திருந்த திரு. வி. க. முதலிய பெரியோர்களின் அணிவகுப்பு.



குருகுலத்தின் பரம குருவான வள்ளுவர் பெருமானின் உரு வச் சிலைப் பொலிவு.

அலை ஓசை

கல்கி

அத்தியாயம் 30

"மரணமே! வா!"

மௌல்வி சாகிபு சுட்ட துப்பாக்கி குண்டு குறி தப்பிப்போயிருக்க வேண்டும். ஏனெனில் வண்டி போவது அதனால் தடைப்படவில்லை. கோவேறு கழுதை மிரண்டு வேகமாக வண்டியை இழுத்துக்கொண்டு ஓடியது. ஓடிய வண்டியிலிருந்து பையன் ஏதோ உரத்த சத்தமிட்டுத் திட்டிக்கொண்டு போனது காதில் விழுந்தது.

"சீதா! என்னுடைய ஜோஸியம் தவறி விட்டது. சகுனம் கெட்டு விட்டது. இந்த இடத்தில் இனித் தங்குவதற்கு இல்லை. புறப்படு உடனே!" என்றார் மௌல்வி சாகிபு.

* * *

அடுத்த ஏழெட்டு தினங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாம் சீதாவுக்குத் தன்னுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களாகவே தோன்றவில்லை. சில சமயம், பல பூர்வஜன்மங்களில் நடந்த சம்பவங்களாகத் தோன்றின. சில சமயம் கனவிலே காணும் தெளிவில்லாச் சம்பவங்களைப்போலத் தோன்றின. பற்பல கதைகளிலும் இதிகாச புராணங்களிலும் படித்த நிகழ்ச்சிகளாகத் தோன்றின. எப்பொழுதோ யாரோ சொல்லிக் கேட்ட சம்பவங்களைப் போலிருந்தன. அந்தச் சம்பவங்களிலெல்லாம் அவளும் ஒரு பாத்திரமாக இருந்தபோதிலும் அவளுடைய உடம்பிலிருந்து ஆவியானது தனியே பிரிந்துபோய் நின்று அந்தப் பயங்கர நிகழ்ச்சிகளையெல்லாம் காண்பது போலத் தோன்றியது.

வெளியிலே நிகழ்ந்த காரியங்களையும் காட்சிகளையும் தவிர சீதாவின் மனதிலும் பல காட்சிகள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. லலிதாவின் காலில் விழுந்து அவள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். சௌந்தர ராகவனிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டாள். வஸந்தியைக் கட்டித் தழுவி ஆசி கூறினாள். மாமனாரையும் மாமியாரையும் வணங்கினாள். தாரிணியைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டாள். சூரியாவிடம் கோபித்துக்கொண்டு திட்டினாள். தந்தையின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கொஞ்சினாள். ரஸியா பேகத்தின் முகவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள். காந்தி மகானைத் தன் இதயபீடத்தில் அமர்த்திக் கும்பிட்டாள்.

இடையிடையே அவளுடைய பேதை உள்ளம் "மரணமே! வா!" என்று கூவிக்கொண்டிருந்தது. காதில் அடிக்கடி அலை ஓசை முழங்கிற்று.

* * *

பகல் வேளைகளில் சீதாவும் அவளுடைய தந்தையும் மலைக் குகைகளிலும் காட்டுப் புதர்களிலும் பாழடைந்த மசூதிகளிலும் மறைந்து கொண்டிருந்தார்கள். இருட்டிய பிறகு பீதி நிறைந்த உள்ளத்துடன் முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டு பிரயாணம் செய்தார்கள். வழியிலே அவர்கள் தீப்பிடித்து எரிந்த கிராமங்களையும் பட்டணங்களையும் தாண்டிப் போக வேண்டியிருந்தது. எரிந்த வீடுகளிலிருந்து எழுந்த ஜுவாலைகள் சுற்றிலும் நெடுந்தூரத்துக்கு இரவைப் பகலாக்கின. அந்த ஜுவாலைகளின் வெளிச்சத்தில் கரிய பயங்கர உருவங்கள் யம கிங்கரர்களைப்போல் கையில் கொடிய ஆயுதங்களுடனே ஊளையிட்டுக் கொண்டு அலைந்தன. அம்மாதிரி இடங்களுக்கு அருகிலும் நெருங்காமல் தந்தையும் மகளும் நெடுந் தூரம் சுற்றி வளைத்துக் கொண்டு போனார்கள்.

இரவு நேரங்களில் சாலையோடு போய்க்கொண்டிருக்கும்போது முன்னால் காலடிச் சத்தம் கேட்டாலும் அவர்கள் நெஞ்சு திடுக்கிடும்;

பின்னால் காலடிச் சத்தம் கேட்டால் உள்ளம் பதைக்கும். சில சமயம் திடுதிடுவென்று ஜனங்கள் பெருங் கூட்டமாக ஓடிவரும் சத்தம் கேட்கும். இருவரும் பக்கத்துக் காட்டுக்குள் சென்று ஒளிந்து கொள்வார்கள். பயந்து ஓடும் ஜனங்களைத் துரத்திக் கொண்டு பின்னால் ராட்சதக் கூட்டத்தினர் ஓடி வருவார்கள். அவர்கள் போடும் பயங்கரமான சத்தத்துடன் ஸ்திரீகள் குழந்தைகளின் பரிதாப ஓலக் குரலும் சேர்ந்து ஒலிக்கும். அந்த ஓலக் குரல் அடங்கி வெகு நேரமான பிற்பாடும் சீதாவின் காதில் அலை ஓசை கேட்டுக்கொண்டே இருக்கும். அவளுடைய நெஞ்சம் "மரணமே! வா!" என்று அழைக்கும்.

* * *

நடந்து நடந்து சீதாவின் கால்களில் வலி எடுத்து இரத்தம் கட்டியது. பின்னர் வீக்கமும் கண்டது. "இனி நடக்க முடியாது" என்று அவளுடைய கால்கள் கெஞ்சின. "அப்பா! என்னைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு நீங்கள் போய் விடுங்கள்!" என்று சீதா தந்தையிடம் கெஞ்சினாள். "முடியாது, தாயே! முடியாது!" என்று மௌல்வி சாகிபு தலையை அசைத்தார். "எப்படியும் நான் சாகப் போகிறேன்; உங்கள் கையினால் சாகிறேனே? எதற்காகச் சித்திரவதை?" என்றாள் சீதா. அதற்கும் மௌல்வி சாகிபு இணக்கம் காட்டவில்லை. தந்தையின் தோளைப் பிடித்துக்கொண்டு சீதா மெள்ளமெள்ளத் தடுமாறி நடந்தாள். அவளுடைய உள்ளம் "மரணமே! வா!" என்று அழைத்தது. அவளுடைய காதில் அலை ஓசை அதிகமாகிக் கொண்டிருந்தது.

* * *

சாலையில் அவர்களுக்குப் பின்னால் ஒரு பெரிய புழுதிப் படலம் கிளம்பி ஆகாசத்தை மறைத்தது. ஒரு பெரும் இரைச்சல் கேட்டது. அது என்னவென்று தெரிந்து கொள்வதற்காகச் சீதாவும் அவள் தந்தையும் சாலையை விட்டு ஒதுங்கி ஒரு பாழடைந்த 'குருத்வாரா'த்துக்குள் ஒளிந்து கொண்டார்கள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஒரு மாபெருங் கூட்டம் வந்தது. அந்தக் கூட்டத்தாரைக் காப்பதற்குத் துப்பாக்கி பிடித்த சீக்கிய சோல்ஜர்கள் உடன் சென்றார்கள். வயோதிகர்கள், குழந்தைகள், ஸ்திரீகள், புருஷர்கள், நோயாளிகள், கர்ப்ப ஸ்திரீகள், ஒட்டகை வண்டிகள், கழுதை வண்டிகள், மாட்டு வண்டிகள், இரண்டொரு லாரிகள், மூட்டை முடிச்சுகள், பெட்டி பேழைகள் — இவை அடங்கிய நீண்ட ஊர்வலம் போய்க்கொண்டே இருந்தது. சுமார் ஒரு லட்சம் மனித உயிர்கள்; ஒரு மைல் நீளமுள்ள ஊர்வலம்.

"இந்தக் கூட்டத்தோடு நாமும் போய்விடலாமா?" என்று மௌல்வி சாகிபு கேட்டார். "வேண்டாம், அப்பா! இந்தப் புழுதியையும் நாற்றத்தையும் கூச்சலையும் என்னால் தாங்க முடியாது! பைத்தியம் பிடித்து விடும்!" என்றாள் சீதா.

ஊர்வலம் சென்ற வழியில் பயங்கரமான துர்நாற்றம் கிளம்பி வானவெளியின் காற்றையெல்லாம் விஷமாக்கி விட்டது.

சீதாவும் அவளுடைய தந்தையும் வேறொரு குறுக்குச் சாலையைப் பிடித்துக்கொண்டு சென்றார்கள்.

* * *

ஒரு சின்ன ரயில்வே ஸ்டேஷனை அவர்கள் அடைந்தார்கள். வெயிட்டிங் ரூமில் உட்கார்ந்து ரயிலுக்காகக் காத்திருந்தார்கள். யாராவது வந்து வெயிட்டிங் ரூமுக்குள் எட்டிப் பார்க்கும்போதெல்லாம் சீதாவுக்குப் 'பகீர்' என்னும். ரயிலுக்காகக் காத்திருந்த நேரம் முடிவில்லாமல் நீண்டு கொண்டேயிருந்தது. சீதா உட்கார்ந்தபடியே சிறிது கண்ணயர்ந்தாள். பெரும் அலை ஓசை கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தாள். கேட்டது ரயில் வரும் சத்தம் என்று தெரிந்து கொண்டாள். இருவரும் பிளாட்பாரத்துக்குள் போனார்கள். ரயிலில் கூட்டம் சொல்லி முடியாது. எல்லா வண்டிகளும் உட்புறம் பூட்டப்பட்டிருந்தன. சீதாவுக்கு அந்த ரயிலில் ஏறுவதற்கே பிடிக்கவில்லை. ஆனால் மௌல்வி சாகிபு வற்புறுத்தினார். வண்டி வண்டியாகச் சென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டு கடைசியில் ஒரு வண்டியில் கதவைத் திறக்

கச் செய்தார். இரண்டு பேரும் ஏறிக் கொண்டார்கள். வண்டியி லிருந்தவர்கள் தாங்கள் வந்த வழியில் பார்த்த பயங்கரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ரயில் மெள்ள மெள்ளப் போய்க் கொண்டிருந்தது. ரயிலின் சக்கரங்கள் சுழன்ற சத்தம் சீதாவின் காதில் அலை ஓசையைப் போல் கேட்டுக் கொண்டிருந்தது. "மரணமே! வா!" என்று அவளுடைய உள்ளம் கூவிக் கொண்டிருந்தது.

• • •

ஒரு ரயில்வே ஜங்ஷனில் ரயில் நின்றது. நின்ற ரயில் மறுபடி இலேசில் கிளம்புகிற வழியாக இல்லை. நேரமாக ஆக, ரயிலிலிருந்தவர்களின் கவலை அதிகமாயிற்று. ரயில்வே ஸ்டேஷனிலும் வெளியிலும் ஏகக் கூச்சலும் குழப்பமுமாயிருந்தது.

மௌல்வி சாகிபு திடீரென்று "அதோ தாரிணி!" என்றார். சீதா ஆவலுடன் அவர் காட்டிய திசையைப் பார்த்தாள். ஆம்; கொஞ்ச தூரத்தில் கூட்டத்துக்கு நடுவில் சூரியாவும் தாரிணியும் போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு கணம் அவர்களுடைய முகங்கள் தெரிந்தன. மறுகணம் கூட்டத்தில் மறைந்து விட்டன. "சீதா! கொஞ்சம் பொறு! அவர்களைப் பார்த்துக் கொண்டு வருகிறேன்!" என்று அப்பா சொல்லி விட்டு வண்டியிலிருந்து இறங்கி ஓடினார். அடுத்த நிமிஷம் அவரும் ஜனக் கூட்டத்தில் மறைந்து விட்டார்.

பிறகு ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாக இருந்தது சீதாவுக்கு. அந்த மாதிரி பல யுகங்களுக்குப் பிறகு ஒரு பயங்கரமான கூச்சல் கேட்டது. அதைக் காட்டிலும் கோரமான காட்சி கண் முன்னால் தென்பட்டது. நாற்றுக் கணக்கான முரட்டு மனிதர்கள் கையில் கத்திகளுடன் பாய்ந்து வந்தார்கள். பிளாட்பாரத்தில் நின்றவர்கள் பலரைக் கொன்றார்கள். எங்கே பார்த்தாலும் இரத்தக் களரி ஆயிற்று. அந்த மனிதர்கள் ரயிலுக்குள்ளும் பாய்ந்து ஏறினார்கள். சீதா இருந்த வண்டியை நோக்கி நாலைந்து பேர் ஓடி வந்தார்கள். சீதா பீதியினாலும் அருவருப்பினாலும் கண்களை மூடிக் கொண்டாள். அவளுடைய மனதில் "கடைசியாக நம்முடைய பிரார்த்தனை நிறைவேறி விட்டது! மரணம் வந்து விட்டது!" என்ற நினைவு தோன்றியது. தட தட வென்று ரயிலுக்குள் நாலைந்து பேர் ஏறினார்கள். மூடிய கண்களுடனே அடுத்த கணத்தில் தன்னுடைய மார்பில் கத்தி பாயும் என்று சீதா எதிர் பார்த்தாள். ஆனால் கத்தி பாயவில்லை; கண்ணும் திறக்கவில்லை. மறுபடியும் வண்டிக்குள் தனக்கருகில் ஏதோ கலவரம் நடக்கிறதென்பதை உணர்ந்தாள். யாரோ அவளைப் பிடித்துத் தள்ளினார்கள். தொப்பென்று கீழே விழுந்தாள். அவள் மேல் ஏறி மிதித்துக் கொண்டு யாரோ ஓடினார்கள்.

"சீதா! சீதா!" என்ற இனிய குரலுடன் மெல்லிய மிருதுவான கரங்கள் அவளை எடுத்துத் தூக்கின. கண்ணை விழித்துப் பார்த்து அவை தாரிணியின் கரங்கள் என்பதை அறிந்தாள். தன்னைத் தூக்கிய கரங்களில் ஒன்றிலிருந்து இரத்தம் சொட்டிக் கொண்டிருப்பதையும் கண்டாள். "அக்கா!" என்று அலறினாள்.

• • •

அந்த மூன்று தினங்கள் சீதாவின் வாழ்க்கையில் மிகவும் ஆனந்தமான நாட்கள். ஏதோ ஒரு ஊரில் யாரோ ஒருவருடைய வீட்டின் மேல் மச்சில் ஜன்னல் கதவுகளையெல்லாம் அடைத்துக் கொண்டு ஒளிந்திருந்த நாட்கள் தான். சாலைகளிலாவது வெளிச்சம் உண்டு; காற்று உண்டு. இங்கே அது கூடக் கிடையாது. எனினும் தன்னுடன் பிறந்தவள் என்று தெரியாத போதே தன் உள்ளத்தின் அன்பையெல்லாம் கவர்ந்து விட்ட தாரிணியுடன் வசித்தபடியால் அந்த நாட்கள் ஆனந்தமயமாயிருந்தன.

ரயிலில் கொலை செய்யப்படாமல் சீதாவைக் காப்பாற்றிய தாரிணி அவளை இந்த இடத்தில் கொண்டு வந்து சேர்த்திருந்தாள். கூடச் சூரியாவும் மௌல்வி சாகிபுவும் வந்திருந்தார்கள். வண்டியிலேயே சீதா தனக்கும் தாரிணிக்கும் உள்ள உறவைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள். "இதெல்லாம் உனக்கு முன்னமே தெரியாதா அக்கா?" என்று கேட்டாள். "இந்த சந்தேகம் எனக்கு வெகு காலமாகவே

இருந்தது. ஆனால் நான் எவ்வளவு கேட்டும் அந்தக் கிழவரும் கிழவியும் உண்மையைச் சொல்ல மறுத்து விட்டார்கள்!" என்றாள் தாரிணி.

"என்ன அநியாயம்? எதற்காக அப்படிச் செய்தார்கள்? நீ அக்கா என்று தெரியாமலேயே உன்னிடம் என் பிராணனை வைத்திருந்தேன்! இன்னும் தெரிந்திருந்தால் எவ்வளவு பிரியமாயிருந்திருப்பேன்? நாம் எவ்வளவு சந்தோஷமாயிருந்திருக்கலாம்?" என்றாள் சீதா. தன்னிடம் பொறாமை கொண்டு சீதா படுத்தியபாடெல்லாம் தாரிணிக்கு நினைவு வந்தது. ஆனால் இதை அப்போது சீதாவுக்கு ஞாபகப் படுத்தவில்லை. "போனதைப் பற்றிக் கவலைப்பட்டுப் பயன் என்ன? அதற்கெல்லாம் சேர்த்து இப்போது வட்டி போட்டு நாம் சந்தோஷமாயிருக்கலாம்!" என்றாள் தாரிணி. "அதற்கென்ன சந்தேகம்? என் துன்பங்கள் எல்லாம் தீர்ந்துவிட்டன. இனிமேல் எனக்குச் சந்தோஷத்துக்கு என்ன குறைவு?" என்றாள் சீதா. எனினும் இருவருடைய இதய அந்தரங்கத்திலும் சந்தேகமும் பயமும் இல்லாமற் போகவில்லை.

விழித்துக் கொண்டிருந்த போதெல்லாம் தாரிணியின் கழுத்தைச் சீதா கட்டிக் கொண்டு அந்தரங்கம் பேசினாள். தூங்கும்போது தாரிணியின் மேலே கையைப் போட்டுக் கொண்டு தூங்கினாள். எங்கே தன்னை விட்டு விட்டுத் தாரிணி போய்விடப் போகிறாளோ என்ற பயம் அவளுடைய மனதின் ஆழத்தில் குடிகொண்டிருந்தது.

சீதாவின் பயம் சீக்கிரத்திலேயே உண்மையாயிற்று. தாரிணியிடமிருந்து அவள் பிரியவேண்டிய சமயம் வந்தது. இதைப் பற்றி அறிந்ததும் சீதா முரண்டு பிடித்தாள். "நான் உன்னை விட்டுப் போகமாட்டேன். நீ என்னை விட்டுப் போனால் குத்திக் கொண்டு சாவேன்!" என்றாள்.

தாரிணி பலவிதமாக அவளுக்குச் சமாதானம் கூறினாள். "நான் டில்லியில் உன்னுடன் வந்து சேர்ந்து கொள்கிறேன்! அது வரையிலே பொறுத்திரு. பெஷாவரில் என்னுடைய சிநேகிதி நிருபமா இருக்கிறாள். அவளைப் பார்த்து அழைத்துக் கொண்டு வரவேண்டும்!" என்றாள்.

இத்தகைய விவாதம் அந்தச் சகோதரிகளுக்குள் நெடுநேரம் நடந்தது.

கடைசியாகச் சீதா "அக்கா! நீ ஒரு வாக்குறுதி கொடுத்தால் நான் உன்னைப் பிரிந்து போகச் சம்மதிப்பேன்!" என்றாள். "கேள்! அம்மா!" என்றாள் தாரிணி. "டில்லிக்குப் போகும் வழியில் நான் இறந்துவிட்டால் நீ அவரைக் கலியாணம் செய்து கொள்ளவேண்டும். அப்படி நீ சத்தியம் செய்து கொடுக்க வேண்டும். சத்தியம் செய்து கொடுத்தால் நான் உன்னைப் பிரிவேன்!" என்றாள் சீதா.

"இது என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று தாரிணி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் சீதா கேட்கிறதாக இல்லை. தாரிணி மறுக்க மறுக்க, சீதாவின் வெறி அதிகமாகி வந்தது. கடைசியில் தாரிணி "அடியே! நீ செத்து நான் உயிரோடிருந்து உன் புருஷனும் என்னைக் கலியாணம் செய்து கொள்வதற்குச் சம்மதித்தால் நான் கலியாணம் பண்ணிக் கொள்கிறேன்" என்றாள்.


* * *

முஸ்லிம் பர்தா ஸ்திரீகள் அணிந்து கொள்வது போன்ற பர்க்கா ஒன்றைச் சீதாவுக்குத் தாரிணி அளித்தாள். அந்த உடையில் கண்களால் பார்ப்பதற்கு மட்டும் துவாரம் இருந்தது. மற்றபடி தலையிலிருந்து கால் வரையில் சீதாவை அந்த அங்கி மூடி விட்டது. நள்ளிரவில் மௌல்வி சாகிபுவும் சீதாவும் அந்த வீட்டு மெத்தை அறையிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். வாசலில் தயாராக ஜீப் வண்டி ஒன்று நின்றது. அதை ஓட்டுவதற்கு ஒரு போலீஸ் டிரைவர் காத்திருந்தான்.

சீதா தாரிணியைக் கட்டிக்கொண்டு "அக்கா! வாக்குறுதியை மறந்து விடாதே!" என்றாள்.

அவளுடைய தந்தை தாரிணியின் சிரத்தை முகர்ந்து பார்த்து விட்டு "அம்மா! என்னுடைய குற்றங்களை மன்னித்துக் கொள்!" என்றார்.

மங்கலான நட்சத்திர வெளிச்சத்தில் தாரிணியின் கண்களில் கண்ணீர்த் துளிகள் பிரகாசித்தன. "அப்பா! தங்களுக்கு நான் கொடுத்த தொந்தரவுகளையெல்லாம் மன்னியுங்கள்! அதற்கெல்லாம் பிராயச்



சித்தமாகத் தங்களுக்கு வாழ்நாளெல்லாம் பணிவிடை செய்ய வேண்டும். அதற்கு எனக்குக் கொடுத்து வைத்திருக்குமோ, என்னமோ?" என்றான்.

ஜீப் வண்டியின் டிரைவர் அவசரப்படுத்தினான். "இது என்ன பைத்தியம்? எல்லாரும் கூண்டோடு கைலாசமாகச் சாக வேண்டுமா?" என்றான். விடை பெறும் காட்சி முடிந்தது. ஜீப் வண்டி விரைந்து புறப்பட்டது.

• • •

போலீஸ் கான்ஸ்டேபின் ஓட்டிய ஜீப் வண்டி அதி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. வழியில் நேர்ந்த பல தடங்கல்களையும் தாண்டிக்கொண்டு சென்றது. சாலைகளில் சில இடங்களில் கூட்டமாக ஜனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அந்த இடங்களில் ஜனக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு ஜீப் சென்றது. சில இடங்களில் சாலைகளில் மரங்களை வெட்டித் தள்ளியிருந்தார்கள். அந்த இடங்களில் சாலையிலிருந்து இறங்கிக் கடந்து சென்றது. சில இடங்களில், ஐயோ! என்ன பயங்கரம்! — சாலைகளில் கிடந்த மனித உடல்களின் மீது ஏறிச் சென்றது! அந்த உடல்களிலிருந்த உயிர்கள் எப்போதோ போய் விட்டன! இனி அவற்றின் பேரில் ஜீப் வண்டி ஏறினால் என்ன? ரோட் என்ஜின் ஏறினால்தான் என்ன?

சாலையில் ஜீப் வண்டி வேகமாகப் போக ஆரம்பித்த புதிதில் சீதாவுக்குத் தான் அபாயங்களையெல்லாம் ஒருவாறு கடந்து வந்து விட்டதாகத் தோன்றியது. ஆனால் சீக்கிரத்திலேயே அது பொய் நம்பிக்கை என்று ஏற்பட்டது. ஏனெனில் அவர்களைத் தொடர்ந்து இன்னொரு ஜீப் வண்டி கொஞ்ச தூரத்தில் வந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது. ஆனால் அது இந்த வண்டியைத் தொடர்ந்து வருகிறது என்று ஏன் நினைக்க வேண்டும்? தங்களைப் போலவே அபாயத்துக்குத் தப்பித்துச் செல்லும் மனிதர்களாயிருக்கலாமல்லவா? இருக்கலாம்; என்றாலும், தங்களைப் பிடிப்பதற்

காகவே அந்த வண்டி வருகிறது என்னும் எண்ணத்தைச் சீதாவினால் போக்கிக் கொள்ள முடியவில்லை. அந்த வண்டியில் யமன் தன்னைத் தொடர்ந்து ஓடி வருகிறான் என்றே எண்ணினாள். யார் கண்டது? முதலில் நினைத்தபடியே இந்தப் பிரயாணத்தில் தனக்கு மரணம் நேரிடலாமோ, என்னமோ? "மரணமே! வா! சீக்கிரம் வா!" என்று அவள் உள்ளம் ஜபித்தது. அவளுடைய காதில் அலை ஓசையின் இரைச்சல் அதிகமாயிற்று.

• • •

ஒரு நதிக் கரையில் வந்து ஜீப் வண்டி நின்றது. நல்லவேளை! கொஞ்ச நேரமாகப் பின்தொடர்ந்துவந்த வண்டியின் சத்தம் கேட்கவில்லை. அது வெறும் பிரமைதான். என்ன அதிசயம்? இங்கே சூரியா வந்து நிற்கிறானே? நமக்கு முன்னால் எப்படி வந்தான்? அதோடு ஒரு படகையும் அமர்த்தி வைத்துக்கொண்டு தயாராயிருக்கிறானே? சூரியா சூரியாதான்! அம்மாஞ்சிக்கு இணை யாரும் இல்லை!

தந்தையையும் மகளையும் சூரியாவிடம் ஒப்படைத்து விட்டுப் போலீஸ்காரன் ஜீப் வண்டியைத் திருப்பினான். அவனும் சூரியாவும் ஏதோ சமிக்ஞை பாஷையில் பேசிக் கொண்டார்கள். அதைப்பற்றியெல்லாம் விசாரிக்க அப்போது நேரம் இல்லை. பிற்பாடு கேட்டுக் கொண்டால் போகிறது.

சூரியா அவர்களுடைய கையைப் பிடித்துப் படகிலே ஏற்றி விட்டான். தானும் ஏறிக் கொண்டான். படகுக்காரன் படகை நதியில் செலுத்தினான்.

படகு நகர்ந்ததும் சீதாவின் பயம் அடியோடு நீங்கிற்று. உள்ளத்தில் உற்சாகமே உண்டாகி விட்டது. அது பாஞ்சால நாட்டின் பஞ்ச நதிகளில் ஒன்றான 'சீனாப்' என்று அறிந்தாள். பிரவாகம் அலை மோதிக் கொண்டு சென்றது. காற்று விர்ரென்று அடித்தது. சீதா தன்னுடைய பர்தா உடையைக் கழற்றிப் படகில் வைத்தாள். மௌல்வி சாகிபுவைப் பார்த்து, "அப்பா! நீங்களும் உங்களுடைய வேஷத்தைக் கலைத்து விட்டுப் பழையபடி ஆகிவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்றாள்.

"சீதா! இந்த வேஷத்தைப் பற்றிக் குறை சொல்லாதே! இதன் மூலமாகத்தானே உன்னைக் காப்பாற்ற முடிந்தது?" என்றார் மௌல்வி சாகிபு. "அதுதான் காப்பாற்றியாகி விட்டதே? இனிமேல் அபாயம் ஒன்றுமில்லையே?" என்றாள் சீதா. "அவசரப்படாதே, அம்மா! டில்லி போய்ச் சேர்ந்ததும் வேஷத்தை மாற்றி விடுகிறேன்!" என்றார் மௌல்வி சாகிபு.

ஆனால் இந்த உலகத்தில் மனிதர்கள் நினைக்கிறபடியோ, விரும்புகிறபடியோ, என்னதான் நடக்கிறது? அபாயத்துக்குப் பயப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் அது வராமல் போய் விடுகிறது. "இனி ஒரு பயமும் இல்லை" என்று எண்ணியிருக்கும் சமயத்தில் திடீரென்று எங்கிருந்தோ பேரிடி வந்து விழுகிறது!

நதியில் மூன்றில் ஒரு பங்கு தூரம் படகு சென்றிருக்கும். அப்போது அவர்கள் வந்த சாலையில் சற்றுத் தூரத்தில் ஒரு புழுதிப் படலம் தெரிந்தது. புழுதியைக் கிளப்பிய மற்றொரு ஜீப் வண்டி அடுத்த நிமிஷம் நதிக் கரையில் வந்து நின்றது. ஜீப்பிலிருந்து ஒரு மனிதன் கீழே குதித்ததைச் சீதா பார்த்தாள். அவன் கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. நதியில் சென்று கொண்டிருந்த படகை அவன் உற்றுப் பார்த்தான். அடுத்த நிமிஷம் கையிலிருந்த துப்பாக்கியைத் தூக்கிக் குறி பார்த்துச் சுட்டான். இதையெல்லாம் பார்த்தவண்ணம் பிரமித்துப் போயிருந்த சீதாவின் காதில் "ஐயோ! செத்தேன்!" என்ற கூச்சல் பக்கத்திலிருந்து கேட்டது. சீதா திரும்பிப் பார்த்தாள். தன் தந்தையின் கன்னத்தில் இரத்தம் சொட்டுவதையும் அவர் படகின் ஓரமாகச் சாய்வதையும் பார்த்தாள். அவரைப் பிடித்துக் கொள்வதற்காகப் பாய்ந்து ஓடினாள். படகு ஆடிச் சாய்ந்தது; சீதா நதியின் பெரு வெள்ளத்தில் விழுந்தாள்.

• • •

முடிவில்லா நேரம் சீதா தண்ணீருக்குள் கீழே கீழே கீழே போய்க் கொண்டிருந்தாள். பிறகு தன்னுடைய பிரயாசையின்றியே மேலே வருவதை உணர்ந்தாள். முகம் தண்ணீருக்கு மேலே வந்தது. கண்கள் ஒரு கணம்

திறந்தன. சற்றுத் தூரத்தில் தன் தந்தை கன்னத்தில் இரத்தக் காயத்துடன் தத்தளித்து நீந்திக் கொண்டிருப்பதைப் பார்த்தான். இன்னும் கொஞ்ச தூரத்தில் சூரியா அதே மாதிரி நீந்திக் கொண்டிருந்தான். ஆனால் அவர்களில் யாரும் சீதா தலை தூக்கிய பக்கம் பார்க்கவில்லை. படகோ வெகு தூரத்தில் இருந்தது.

அலை ஒன்று சீதாவை நோக்கி வந்தது. அது ஒரு அடி உயர அலைதான். ஆனால் படகையும் மற்ற இருவரையும் மறைத்தபடியால் அது மலை அளவு உயரமாகச் சீதாவுக்குத் தோன்றியது. பொங்கும் கடலைப்போல் ஓசைசெய்து கொண்டு அந்த அலை விரைந்துவந்து சீதாவை மோதியது சீதா பயத்தினால் கண்ணை மூடிக்கொண்டாள். மறுபடியும் தண்ணீரில் முழுகப் போகிறோம் என்ற எண்ணம் தோன்றியது. இந்தத் தடவை முழுகினால் முழுகியதுதான்; மறுபடி எழுந்திருக்கப் போவதில்லை. "மரணமே! வா!" என்று அவள் அடிக்கடி ஜபம் செய்து கொண்டிருந்தது பலித்துவிட்டது இந்தத் தடவை நிச்சயமான மரணந்தான்!

அலை வந்து தாக்கியது. நீரில் முழுகும் தறுவாயில் சீதாவின் மனக்கண்ணின் முன்னால் ஒரு காட்சி புலப்பட்டது. தாரிணியும் சௌந்தரராகவனும் கைப்பிடித்துக் கலியாணம் செய்துகொள்ளும் காட்சிதான் அது. சீதாவின் மனதில் அந்தக் கண நேரக் காட்சி ஆனந்தத்தையும் அமைதியையும் உண்டு பண்ணியது "ஆகா! அவர்கள் சந்தோஷமாயிருப்பார்கள்!" என்று எண்ணிக் கொண்டே தண்ணீரில் முழுகினாள். குழந்தை வஸந்தியின் பால் வடியும் முகமும், அன்னை ராஜம்மாளின் முகமும், மாமா கிட்டாவய்யரின் முகமும், சூரியாவின் ஆர்வம் ததும்பிய முகமும், மௌல்வி சாகிபுவின் முகமும் வரிசையாகப் பவனி வந்தன. சுவரிலிருந்த படத்திலிருந்து காந்தி மகாத்மாவின் முகம் தனியாகத் தோன்றிப் புன்னகை செய்து மறைந்தது. பின்னர் சிறிது நேரம் காதில் 'ஹோ' என்ற அலை ஓசை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகு எல்லா நினைவும் அழிந்தது. ஆழம் காணாத அமைதி; எல்லை காணாத இருள்; நிச்சப்தம்.



மோகல்பண்ட் அக்கௌண்ட்ஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ என். ஆர். ராமநாதன் அவர்களது புதல்வி சௌ. ஸ்ரீபுரசுந்தரிக்கும், கோபிசெட்டிபாளையம், மீராசுதார் ஸ்ரீ என். ஆர். சுவாமிநாதய்யரின் குமாரர் செஞ்சிவி ராமமூர்த்திக்கும், திருமணம் 3-7-49 அன்று சென்னை தியாகராய நகரத்தில் இனிது நடந்தேறியது. சென்னை பிரமுகர்கள் விஜயம் செய்து வைபவத்தை சிறப்பித்தனர். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வந்து குவிந்தன.



கோபால சமுத்திரம் ரிடையர்டு உபாத்தியாயர் ஸ்ரீ டி. என். சுப்ரமணிய அய்யர் குமாரியும் அசோஸியேட் பிரஸின் திருச்சி நிருபரான ஸ்ரீ டி. எஸ். நீலகண்டன் அவர்களது சகோதரியுமான சௌ. சாரதாவுக்கும், நாகர்கோவில் ஸ்ரீ எஸ். பத்மநாப அய்யரின் குமாரர் செஞ்சிவி பி. ஏ. சங்கரனுக்கும், திருநெல்வேலி ஜில்லா — தருவையில் 7-7-49-ம் தேதி வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வைபவத்திற்கு பல பிரமுகர்களிடமிருந்து ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்தன.

வாழ்க! சாரதா — சங்கரன்

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

12. ரவுலட் அறிக்கை

இந்திய நாட்டின் சுதந்திரத்துக்காக அந்த நாட்களில் பலவித முயற்சிகள் நடைபெற்று வந்தன. மிதவாதிகள் சட்டத்துக்குட்பட்ட முறைகளில் கிளர்ச்சி செய்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட சுயாட்சியைப் பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். தீவிர வாதிகள் பலாபலன்களைக் கவனியாமல் பொது ஜன உணர்ச்சியை எழுப்பிப் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து விரட்டிவிட எண்ணினார்கள். இந்த இரு வகுப்பாரையும் தவிர, புரட்சி வாதிகள் அல்லது பயங்கர வாதிகள் என்று சொல்லப்பட்ட ஒரு கூட்டத்தார் இருந்தனர். இவர்கள் இரகசிய சதியாலோசனைகளைச் செய்தும் வெடிகுண்டு, துப்பாக்கி முதலிய ஆயுதங்களைக் கையாண்டும் பிரிட்டிஷார் - பிரிட்டிஷ் பக்தர்கள் இவர்களைக் கொன்று பயமுறுத்தி இந்தியாவின் விடுதலையைப் பெறுவதற்கு முயன்றார்கள். தீவிர வாதிகள் ஓரளவுக்குப் பயங்கர வாதிகளிடம் அநுதாபம் கொண்டிருந்தார்கள்.

காந்தி மகாத்மா மேற்கூறிய மூன்று கூட்டத்திலும் சேர்ந்தவரல்ல. ஆனால் ஒவ்வொரு விதத்தில் மூன்று சாராரையும் அவர் தனித்தனியே ஒத்திருந்தார். மிதவாதிகளைப் போல் பிரிட்டிஷாரின் நல்ல எண்ணத்தில் அவருக்கு நம்பிக்கை இருந்தது. எந்தக் காரியத்தையும் ஒளிவு மறைவு இன்றிப் பகிரங்கமாகச் செய்ய அவர் விரும்பினார். தீவிர வாதிகளையும் காந்திஜி ஒரு விதத்தில் ஒத்திருந்தார். எப்படியென்றால், பொது ஜனங்களின் உணர்ச்சியை எழுப்பிக் கிளர்ச்சி செய்து அவர்களைக் கொண்டு காரியம் செய்வதில் மகாத்மாவுக்கு நம்பிக்கை இருந்தது. புரட்சி வாதிகளையும் மகாத்மா இன்னொரு விதத்தில் ஒத்திருந்தார். தாம் நல்லதென்று கருதும் கட்சிக்காக உயிரையும் கொடுத்துப் போராடுவதற்கு அவர் சித்தமாயிருந்தார்.

மேலே சொன்ன மூன்று கூட்டத்துக்கும் பொருந்தாத ஒரு பெருங் குணம் மகாத்மாவிடம் இருந்தது. அதுதான் அஹிம்சா தர்மத்தில் அவர் கொண்டிருந்த பரிபூரண நம்பிக்கை. இலட்சியம் எவ்வளவு நல்லதாயிருந்த போதிலும் பலாத்கார முறைகளின் மூலம் அதை நிறைவேற்றிக் கொள்ள மகாத்மா விரும்பவில்லை. சத்தியம் அஹிம்சை இவற்றின் மூலமாக எவ்வளவு மகத்தான காரியத்தையும் சாதித்துக்கொள்ள முடியும் என்று காந்திஜி பரிபூரணமாக நம்பினார். அந்த நம்பிக்கையைச் சோதனை செய்வதற்கு இப்போது ஓர் அரிய பெரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

* * *

இந்தியாவில் புரட்சி இயக்கத்தாரின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரித்து அந்த இயக்கத்தை அடக்குவதற்குச் சிபார்சுகளைச் செய்வதற்காக இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு கமிட்டி நியமித்திருந்தார்கள். இந்தக் கமிஷனுடைய தலைவர் நீதிபதி ரவுலட் என்னும் வெள்ளைக்காரர் ஆகையால் இந்தக் கமிட்டிக்கு ரவுலட் கமிட்டி என்றும், இந்தக் கமிட்டியார் வெளியிட்ட அறிக்கைக்கு ரவுலட் அறிக்கை என்றும் பெயர் ஏற்பட்டது.

காந்திஜி மரணத்தின் வாயிலிருந்து மீண்டு கொஞ்சங் கொஞ்சமாகக் குணமடைந்து வந்த காலத்தில் ரவுலட் கமிட்டியின் சிபார்சுகள் வெளியாயின. தினப் பத்திரிகைகளில் காந்திஜி ரவுலட் அறிக்கையைப் படித்தார். அதன் சிபார்சுகள் காந்திஜியைத் திடுக்கிடச் செய்தன. ஏனென்றால், அந்தச் சிபார்சுகள் பயங்கர இயக்கத்தை ஒடுக்குவது என்ற பெயரால் இந்தியாவின் சுதந்திரக் கிளர்ச்சியையே அடியோடு நசுக்கிவிடும் தன்மையில் அமைந்திருந்தன. ரவுலட் கமிட்டி

சிபார்சுகளின்படி சட்டம் பிறந்துவிட்டால் இந்தியாவில் சர்க்காரை எதிர்த்து எந்தவிதமான கிளர்ச்சியும் செய்யமுடியாமல் போய்விடும் என்று மகாத்மா கண்டார். சர்க்கார் அதிகாரிகள் எந்தத் தனி மனிதனுடைய சுதந்திரத்தையும் பறித்து விடுவதற்கும், வழக்கு—விசாரணை எதுவும் இல்லாமல் ஒருவனைச் சிறையில் தள்ளி விடுவதற்கும் அந்தச் சிபார்சுகள் இடம் கொடுத்தன.

காந்திஜி நோயாகப் படுத்திருந்த போது தினந்தோறும் ஸ்ரீ வல்லபாய் படேல் வந்து அவரைப் பார்த்து விட்டுப் போவது வழக்கம். ஒருநாள் ஸ்ரீ வல்லபாய் வந்திருந்தபோது காந்திஜி ரவுலட் கமிட்டி சிபார்சுகளைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். "இந்தச் சிபார்சுகளின்படி சட்டம் பிறந்து விட்டால் இந்தியாவில் எந்தவிதக் கிளர்ச்சியையும் நடத்த முடியாமல் போய்விடுமே?" என்றார். "உண்மைதான்; ஆனால் அதை எதிர்த்து நம்மால் என்ன செய்ய முடியும்? பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் இஷ்டப்படி சட்டம் செய்யக் கூடியவர்களாயிருக்கிறார்கள். நாம் எப்படித் தடுப்பது?" என்றார் ஸ்ரீ வல்லபாய் படேல்.

"சத்தியாக்கிரஹ முறை இருக்கவே இருக்கிறது. சத்தியாக்கிரஹத்துக்கு ஆள் கூட்டம் அவசியம் இல்லை. உத்தேச சட்டத்தை எதிர்த்து நிற்பதாக ஒரு சிலர் உறுதியுடன் முன் வந்தாலும் போதும். இயக்கத்தைத் தொடங்கி விடலாம். நான் மட்டும் இப்படி நோயுடன் படுத்திராவிட்டால் தன்னந்தனியனாகவே போராட்டத்தைத் தொடங்கிவிடுவேன். என்னைப் பின் பற்றப் பலர் முன் வருவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது" என்றார் காந்திஜி.


அதன்பேரில் ஸ்ரீ வல்லபாய் படேல் காந்திஜியிடம் ஏற்கெனவே தொடர்பு கொண்டிருந்த நண்பர்கள் சிலரை ரவுலட் கமிட்டி அறிக்கையைப் பற்றி யோசிப்பதற்காக அழைத்தார். இந்தக் கூட்டம் சபர்மதி சத்தியாக்கிரஹ ஆசிரமத்தில் நடந்தது. சுமார் இருபது பேர் தான் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களில் ஸ்ரீ வல்லபாய் படேல், ஸ்ரீமதி ஸரோஜினி தேவி, ஸ்ரீ ஹார்னிமான், ஜனாப் உமார் ஸோபானி, ஸ்ரீ சங்கர்லால் பாங்கர், ஸ்ரீமதி அநுசூயாபென் ஆகியவர்கள் முக்கியமானவர்கள்.

காந்திஜியின் அபிப்பிராயத்தைக் கேட்டபிறகு, ரவுலட் சட்டம் செய்யப்பட்டால் அதை எதிர்த்துச் சத்தியாக்கிரஹம் செய்வது என்று இந்தக்கூட்டம் ஏகமனதாகத் தீர்மானம்செய்தது. காந்திஜியின் யோசனைப்படி சத்தியாக்கிரஹப் பிரதிக்ஞை தயாரிக்கப்பட்டது. அதில் கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் கையொப்பமிட்டார்கள்.

இந்த விவரங்கள் பம்பாய் தினப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. உடனே இன்னும் பலரும் சத்தியாக்கிரஹப் பிரதிக்ஞையில் கையொப்பமிடுவதற்கு விருப்பம் தெரிவித்தார்கள்.


அப்போது தேசத்தில் நிலைபெற்றிருந்த காங்கிரஸ், ஹோம் ரூல் லீக் முதலிய ஸ்தாபனங்கள் தம்முடைய சத்தியாக்கிரஹ முறையை ஏற்றுக் கொள்ளும் என்று மகாத்மாவுக்குத் தோன்றவில்லை. ஆகையால் சத்தியாக்கிரஹ சபை என்று ஒரு புதிய ஸ்தாபனம் ஏற்படுத்த முடிவு செய்தார். சத்தியாக்கிரஹ சபையில் பலர் அங்கத்தினர்களானார்கள். இவர்களில் பெரும்பாலோர் பம்பாய்க்காரர்களாயிருந்தபடியினால் சத்தியாக்கிரஹ சபையின் தலைமைக் காரியாலயம் பம்பாயில் ஏற்படுத்தப்பட்டது. சத்தியாக்கிரஹ சபையின் கொள்கைகளை விளக்குவதற்காகப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. பொது மக்களின் உற்சாகம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

ரவுலட் சட்டத்தை எதிர்த்துப் பெரும் போர் நடத்த வேண்டியிருக்கும் என்று காந்திஜிக்குத் தோன்றியது. அதற்கு வேண்டிய உற்சாகம் தேசத்தில் பெருகிக் கொண்டு வந்தது. ஆனால் மகாத்மாவின் உடம்பு சரியாகக் குணமானபாடில்லை. மாதிரான் என்னும் இடத்துக்குப் போனால் விரைவில் குணமாகும் என்று சில நண்பர்கள் சொன்னார்கள். அங்கே



ஹோட்டல் முதலாளி (ரேடியோவைச் சுட்டிக் காட்டி):—ஆகா! என்ன உருக்கமான பாட்டு! கல்லும் கரையும்படி யல்லவா பாடுகிறார்? பலே! பலே!!

சாப்பிடுபவர்:—அப்படியானால் அந்த ரேடியோவைக் கொஞ்சம் அடுப்புக்குப் பக்கத்தில் கொண்டு வைக்கிறதுதானே! சாதத்திலுள்ள கல்லையும் கரைத்திருக்குமே!



"சித்ராங்கதா டாக்கீஸிலே என்ன நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமோ?"

"பேஷாகத் தெரியும்; ஃபைட் நடக்கிறது!"

"அது என்ன இங்கிலீஷ் படமா, தமிழ்ப் படமா, சுவாமி!"

போய் ஒரு வாரம் இருந்ததில் பலவீனம் அதிகமாகிவிட்டது. ஆகவே சபர்மதிக்கு மகாத்மா திரும்பி வந்தார்.

இந்த நிலைமையைக் குறித்து ஸ்ரீ சங்கர்லால் பாங்கர் யோசித்தார். காந்திஜியின் உடம்பு குணமாக வேண்டியதின் அவசியம் அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. அந்தப் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்தார். டாக்டர் தலால் என்பவரை அழைத்துக் கொண்டு வந்து மகாத்மாவின் உடல் நிலையைப் பரிசோதிக்கச் செய்தார். டாக்டர் தலால் காந்திஜியை நன்கு பரிசோதித்துவிட்டு "நீடித்த சீதபேதியினால் உங்கள் உடம்பிலுள்ள இரத்தம் பலமிழந்திருக்கிறது. நீங்கள் பால் அருந்தவும் இரும்புச் சத்தை இன்ஜக்ஷன் செய்து கொள்ளவும் சம்மதிக்க வேண்டும். இதற்கு இணங்கினால் முன்போல் உடம்பில் பலம் வந்து விடும். இல்லாவிடில் நான் ஒன்றும் செய்ய முடியாது" என்றார்.

காந்திஜி, "இன்ஜக்ஷன் செய்துகொள்வதில் எனக்கு விருப்பமில்லை. ஆயினும் தாங்கள் சொல்வதற்காக இணங்குகிறேன். ஆனால் பால் சாப்பிடுவதில்லையென்று நான் பிரதிக்ஞை செய்திருக்கிறேன். அந்தப் பிரதிக்ஞையை எப்படிக் கைவிட முடியும்?" என்றார்.

"அது என்ன? பால் சாப்பிடுவதில்லை என்று எதற்காகப் பிரதிக்ஞை செய்தீர்கள்?" என்று டாக்டர் கேட்டார்.

"கல்கத்தா முதலிய நகரங்களில் பசு மாடுகளையும் எருமை மாடுகளையும் இடையர்கள் அதிகப் பால் கறப்பதற்காகச் செய்யும் கொடுமைகளைப் பற்றி அறிந்தேன். அதனால் பால் சாப்பிடுவதையே வெறுத்துப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டேன். மேலும், பால் மனிதனுடைய இயற்கை உணவு அல்லவென்றும் கருதுகிறேன்" என்று மகாத்மா கூறினார்.

இந்தச் சம்பாஷணையைப் பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீமதி கஸ்தூரி பாய், "பசும்பால், எருமைப் பாலை நினைத்துக் கொண்டுதானே விரதம் எடுத்துக் கொண்டீர்கள்? வெள்ளாட்டுப் பால் சாப்பிடுவதற்கு என்ன ஆட்சேபணை?" என்றார்.

டாக்டரும் உடனே இதைப் பிடித்துக் கொண்டார். "ஆமாம்; வெள்ளாட்டுப் பால் நீங்கள் அருந்தினாலும் போதும். அதுதான் உங்கள் பிரதிக்ஞையில் சேரவில்லையே? வெள்ளாட்டுப் பால் சாப்பிடவும் நீங்கள் மறுத்தால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. உங்களுக்கு உடம்பு குணமாகாது!" என்றார்.

அப்போது காந்திஜியின் உள்ளத்தில் ஒரு போராட்டம் எழுந்தது. அந்தப் போராட்டத்தைப் பற்றியும் அதன் முடிவைப் பற்றியும் மகாத்மா காந்தி எழுதியிருப்பதைக் கேளுங்கள்:—

"என் உறுதி குலைந்தது. சத்தியாக்கிரஹப் போர் நடத்த வேண்டுமென்னும் தீவிரமான அவாவினால் உயிர் வாழும் ஆசையும் எனக்கு உண்டாகி விட்டது. எனவே, விரதத்தின் கருத்தைக் கைவிட்டு அதன் எழுத்தைக் கடைப்பிடிப்பதுடன் திருப்தியடைந்தேன். நான் விரதமெடுத்துக்கொண்டபோது பசுவின் பாலும், எருமைப் பாலுமே என் மனதில் இருந்தனவாயினும், இயல்பாக அதனுள் எல்லா மிருகங்களின் பாலுமே அடங்கியதாகும். மற்றும், பால் மனிதனுடைய இயற்கை உணவு அல்ல என்பது என் கொள்கை. ஆகையால் நான் எந்தப் பாலையும் அருந்துவது முறையாகாது. இவையெல்லாம் தெரிந்திருந்தும் வெள்ளாட்டுப் பால் அருந்தச் சம்மதித்தேன். உயிர் வாழும் ஆசை சத்தியப் பற்றினும் வலிமை மிக்கதாகிவிட்டது. எனவே சத்திய உபாசகனை நான், சத்தியாக்கிரஹப் போர் துவங்கும் ஆவல் காரணமாக, எனது புனித இலட்சியத்தைச் சிறிது விட்டுக் கொடுக்கலானேன். இதன் ஞாபகம் இன்றளவும் என் இதயத்தை ஓயாது வருத்திக் கொண்டிருக்கிறது. வெள்ளாட்டுப் பாலை விடுவதெப்படி என்று இடைவிடாமல் சிந்தித்து வருகிறேன். ஆனால், ஆசைகளுக்குள் மிக நுண்ணியதாகிய தொண்டு புரியும் ஆசை இன்னும் என்னைப் பற்றி நிற்கிறது. அதினின்றும் இன்னும் நான் விடுதலை பெறக் கூடவில்லை."

தலைமன்னாரில் தர்பார்!

ரஜனி

கொழும்பு, ஜூலை, 11

நகரப்புறங்களிலிருக்கும் சுமார் ஒன்றரை லட்சம் இந்தியர்களையும் இலங்கையிலிருந்து விரட்டிவிடச் சில புது மாதிரியான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதனால் கடைச் சிப்பந்திகள், பணியாட்கள், ரிக்ஷா இழுப்பவர்கள், அங்காடி வியாபாரிகள் முதலானவர்கள் மட்டுமல்லாமல், இலங்கையில் முதல் போட்டுச் சிறிய கடை வைத்திருப்பவர்கள்கூட இந்தியாவுக்கு ரஜாவில் சென்றால் இலங்கைக்குத் திரும்ப முடியாதபடி தடுக்கப்படுகிறார்கள்.

முதலில் வர்த்தக மந்திரி ஸ்ரீ அமரசூரியா இலங்கையின் வர்த்தகம் இந்தியரிடமிருந்து இலங்கையர் கைக்கு மாற வேண்டுமென்றும், வர்த்தகச் சிப்பந்திகள் எல்லோரும் இலங்கையர்களாயிருக்க வேண்டுமென்றும் சொன்னார். ஒவ்வொரு வர்த்தக ஸ்தாபனத்திலும் குறைந்த பட்சம் எழுபத்தைந்து சத விகிதச் சிப்பந்திகள் இலங்கையர்களாயிருக்க வேண்டுமென்று சட்டமியற்ற அவர் விரும்பினார். ஆனால் அப்படிச் சட்டமியற்றுவது பண்டித நேருவுக்குப் பிரதமர் சேனநாயகா கொடுத்த வாக்குறுதியை மீறுவதாயிருக்கும். எனவே வர்த்தக மந்திரியின் இலட்சியத்தை நிறைவேற்றச் சில குறுக்கு வழிகளை அனுஷ்டிக்க வேண்டியதாயிற்று. அந்தக் கைங்கரியத்தைப் பொக்கிஷ மந்திரியும் வெளி நாட்டு மந்திரியும் ஏற்றுக் கொண்டார்கள்.

இந்தியர்களுக்குப் பற்பல கஷ்டங்களை உண்டு பண்ணினால் அவர்கள் மனம் கசந்து இந்தியாவுக்கு ஓடி விடுவார்கள் என்றே செலாவணிக் கட்டுப்பாடு சம்பந்தமாகப் பல நிபந்தனைகளைச் சிருஷ்டித்தார் நிதிமந்திரி. ரஜாவில் இந்தியாவுக்குப் போகும் இந்தியர்கள் மூன்னூறு ரூபாய் எடுத்துச் செல்லப் பர்மிட் கொடுக்கப்படுவதாக அவர் தமது அறிக்கையில் சொல்லிய பொழுதிலும், உண்மையில் நூற்றுக்கு ஒருவர் இருவருக்குத்தான் இத்தொகை கிடைக்கிறது. பெரும்பாலோர் பர்மிட் இல்லாமல் எடுத்துச் செல்லக் கூடிய எழுபத்தைந்து ரூபாயை மட்டுமே கொண்டு போகிறார்கள். அவர்கள் திரும்பும்போது தலைமன்னாரில் இன்னொரு ஆபத்து அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது! கையில் ரொக்கமாக நூற்றைம்பது ரூபாயைக் காட்டுவோர்தான் இலங்கையில் இறங்கலாமென்றும், மற்றவர்கள் இறங்கக்கூடாதென்றும் வெளி நாட்டு மந்திரியின் கீழுள்ள போலீஸ் அதிகாரிகள் தடை செய்கிறார்கள். இலங்கையிலிருந்து போகும்பொழுது எழுபத்தைந்து ரூபாய்க்கு மேல் கொண்டு போகக்கூடாதென்று தடை செய்து விட்டுத் திரும்பும்பொழுது நூற்றைம்பது ரூபாய் காட்ட வேண்டுமென்று கேட்பது நியாயமா என்றால் அதற்குப் பதிலில்லை!

லக்ஷாதிபதி அநாதையா?

இலங்கையில் ஸ்திரமான உத்தியோகமில்லாதவர்களும், இங்கு வந்து அநாதைகளாகிவிடலாமென்று அதிகாரிகளுக்குத் தோன்றுகிறவர்களுமான பிரயாணிகளை நூற்றைம்பது ரூபாய் காட்டாவிடில் இலங்கையில் இறங்கக்கூடாதென்று போலீசார் தடை செய்யலாம். அநாதைகள் குடியேற்

விபரீத பலன்!



பாதிரியார் :—பிறர் நமக்குத் தீங்கு செய்தால்கூட நாம் அவர்களுக்குத் திருப்பித் தீங்கு செய்யக்கூடாது என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். இப்பொழுது சொல்—உன்னை ஒரு பையன் அடித்தால் நீ என்ன செய்வாய்?

ராமு :—முதலில் அந்தப் பையன் என்னைவிடப் பெரியவனா, சின்னவனா என்று பார்த்துக் கொள்வேன்!

றத் தடைச் சட்டத்தில் அவ்வாறு ஒரு ஷரத்து இருக்கின்றது. இந்தச் சட்டத்தை இலங்கைப் போலீஸார் தலைமன்னாரில் தங்கள் இஷ்டப்படி அமுல் நடத்துகிறார்கள். இதன் பலனாக, ரஜாவில் சென்றுவிட்டு இலங்கைக்குத் திரும்பும் ஏராளமானவர்கள் இலங்கையில் இறங்கக் கூடாதென்று தடுக்கப்பட்டு இந்தியாவுக்கே திரும்பிச் செல்ல நேருகிறது.


சில தினங்களுக்கு முன்னர் இலங்கையிலுள்ள ஒரு இந்தியப் பிரமுகரின் மனைவி இந்தியாவிலிருந்து திரும்புகையில் தலைமன்னார் போலீஸார் அவரும் நூற்றைம்பது ரூபாய் காட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார்களாம். துரதிர்ஷ்ட வசமாக அவரிடம் ரொக்கப் பணமில்லை. பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் ஆபரணங்கள் அணிந்திருப்பதைக் காட்டி இவ்வளவு நகைகளிருக்கும் பொழுதும் ரொக்கம் காட்டவேண்டுமா என்று அந்த ஸ்திரீ எவ்வளவோ வாதாடியும் பயனில்லை. "கொழும்பில் உங்களுக்கு உத்தியோக மிருப்பதை ருசுப்படுத்த அத்தாட்சிகளில்லை. ஆகையால் நூற்றைம்பது ரூபாய் காட்டினால்தான் இலங்கையில் இறங்க உங்களை அனுமதிக்கலாமென்று சட்டம் சொல்லுகிறது!" என்று சொல்லி அந்த அம்மாளை இந்தியாவுக்குத் திருப்பி யனுப்பி விட்டார்கள்!

கொழும்பு முனிசிபல் சபையில் நல்ல சம்பளத்தில் வேலை செய்யும் ஒரு இந்தியர் இந்தியாவுக்குப் போய்த் தமது மனைவியை அழைத்துக்கொண்டு இலங்கைக்குத் திரும்பி வந்தார். "அந்த அம்மாள் உங்கள் மனைவி தான் என்பதற்கு என்ன அத்தாட்சி?" என்று விசிலான் போலீஸார் அவரைக் கேட்டனராம். அவர் தங்களுடைய கல்யாணம் இந்து முறைப்படி நடந்ததால் திருமண சர்டிபிகேட்டு கிடையாதென்று எவ்வளவோ வாதாடியும் "சர்டிபிகேட்டு காட்டாவிட்டால் ரூபாய் நூற்றைம்பது காட்டவேண்டும்" என்று சொல்லி அந்த அம்மாள் இலங்கையில் இறங்க முடியாமல் தடுத்து விட்டார்கள். இவ்விதம் இலங்கையில் கடைகள் வைத்து நடத்தும் முதலாளிகள்கூட ரஜாவில் சென்று திரும்பும் பொழுது மேற்படி தொகை காட்டாததற்காகத் திருப்பி யனுப்பப்பட் டிருக்கிறார்கள்.

திருக்கேதீசுவரம்

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்னால் சிங்கபாகு என்ற ஒரு இந்திய சித்ரசனின் புதல்வனான விஜயன் இலங்கைக்கு வந்ததாயும், அவன் வழியாகத் தோன்றியதுதான் சிங்கள ஜாதியென்றும் சரித்திரம் கூறுகிறது. இந்த விஜயன் இலங்கையை அரசாண்ட பொழுது பல சிவன் கோவில்களைக் கட்டியதாயும், யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மன்னார் ஜில்லாவிலுள்ள திருக்கேதீசுவர ஆலயத்தைப் புதுப்பித்ததாயும் கூறப்படுகிறது. பாழடைந்த நிலைமையிலிருக்கும் இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து அங்கு ஒரு சைவப் பாடசாலையை ஸ்தாபிக்க அரசாங்கத் தமிழ் மந்திரிகள், நீதிபதிகள், பிரபல வக்கீல்கள், பொதுஜனத் தலைவர்கள் ஆகியோரடங்கிய ஒரு கமிட்டி தீவிரமாக உழைத்து வருகிறது.

ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் முதலான சமயகுரவர்கள் இலங்கையில் திருக்கேதீசுவரம், கோணேசர் ஆலயம் ஆகிய இரண்டைப் பற்றித் தேவாரத்தில் பதிகங்கள் பாடியுள்ளனர். திருகோணமலையிலிருந்த கோணேசர் ஆலயம் காலத்துக்கும் கடலுக்கும் அர்ப்பணமாகி விட்டபடியால் திருக்கேதீசுவரம் ஒன்றுதான் பாக்கியிருக்கிறது. மேற்படி ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யவும் அங்கு சைவப் பாடசாலையைக் கட்டவும் மூன்று ஏகரா நிலங்களைக் கொடுத்து உதவ வேண்டுமென்று புனருத்தாரணக் கமிட்டியின் சார்பாக வழக்கறிஞர் ஸ்ரீ எஸ். சிவசுப்ரமணியம் சர்க்காருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்.



ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் மருமகன் காலஞ்சென்ற இன்ஜினீர் ஸ்ரீ வி. கணேசய்யரின் புதல்வி சௌபாக்யவதி பவானிக்கும் சென்னை அக்கௌண்டெண்ட்-ஜெனரல் ஸ்ரீ ஏ. பாலகிருஷ்ண ஐயரின் குமாரன் சிரஞ்சீவி விஸ்வநாதனுக்கும் சென்ற மாதம் தியாகராயநகரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்கள் வந்து குவிந்தன.

வாழ்க மண மக்கள்!



வேப்பமரம், அதன் அருகில் மணங் கமழும் மலரைக் கொடுக்கும் மகிழமரம், சின்னஞ் சிறு ரோஜாச் செடிகள், புல் வெளிகள்—இவைகளுக்கு மத்தியில் அழ கிய சிறு வீடு. வெண் நிலவின் தண் ஒளியிலே அந்த வீட்டின் மேற்குப் புறத்து அறையின் ஜன்னல் திறந்து கிடக்கிறது. அந்த ஜன்னலை ஒட்டி யிருக்கும் கட்டிலில் ஒரு இளம் நங்கை துவண்டு கிடக்கிறாள்.

ஆகா! அந்த நங்கையின் முகம் அவள் உள்ளத்திலே குமுறிக் கொண்டிருக்கும் விவரிக்க முடியாத வேதனையைப் படம் பிடித்தாற்போல் அல்லவா காட்டிக் கொண்டிருக்கிறது! எதையோ நினைத் துச் சில வினாடிகளுக்கு ஒரு முறை அவள் ஆழ்ந்த பெருமூச் செறிகிறாள். உலக மக்களுக்கு எல்லாம் உவகை யூட்டும் அந்தப் பால் நிலவு அவளைப் பாடாய்ப் படுத்துவதுபோல் தோன்று கிறது. அதோ, அவள் வாய் ஏதோ முணுமுணுக்கிறதே!

"சகுந்தலை நாடகமா? நல்ல வேளை யாக நான் துஷ்யந்தனைப்போல் மகா ராஜனுமில்லை; நீ சகுந்தலையைப் போல் ரிஷி குமாரியுமில்லை. இந்த மோதிரத்தை எந்த மீனும் விழுங்கிவிடாது: நானும் உன்னை மறந்து விடமாட்டேன்!"

ஆம், அன்று அவர் அப்படித்தான் சொன்னார். அப்படி மறக்கமாட்டேன் என்று சொன்னவர்தான் இப்பொழுது என்னைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் மறந்து இருக்கிறார். காதல் என்று சொல்லுவது எல்லாம் இந்த ஆண்கள் விஷயத்தில் வெறும் கற்பனையோ, அல்லது கானல் நீரோ!

இவ்வாறு பன்முறை [illegible] எண்ணி ஏங்கியது அவள மனம். ஆத்திரம் தாங்க முடியவில்லை அவளுக்கு. தலை யைத் தலையணையில் அமுக்கிக்கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

அன்றொரு நாள். வேலைக்குச் சென் றிருக்கும் தன் புதுக் கணவரைக் காணப் புது மனைவி ஆவலுடன் வீட்டு வாசலில் நின்று வழியைப் பார்த்துக் கொண் டிருக்கும் அந்தி வேளை. பூவரசமரத்துக்கு அருகில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த வாடா மல்லிகைச் செடியில் வனஜா பூப்பறித்துக் கொண்டிருந்தாள். அப் பொழுதுதான் ஜானகிராமன் அவளை உற்றுக் கவனித்தான். வனஜாவின் மயில் தோகை போன்ற கூந்தல் அப்போது காற்றில் அலை மோதிக் கொண்டிருந்தது. அந்தக் கூந்தலை அவள் மெதுவாகக் கோதி விட்டுக் கொண்டிருந்தாள்.

"அது என்ன, வனஜா! கையில் இரத் தம் போலிருக்கிறதே!" என்று திடுக் கிட்டுக் கேட்டான் ஜானகிராமன்.


வனஜா '[illegible]' என்று சிரித்துவிட்டு, "அதுவா? பூவரசம்பூ மோதிரம்!" என்று சொல்லிக் கொண்டே அவனிடம் தன் கையைக் காண்பித்தாள்.

கைதேர்ந்த சிற்பி செதுக்கியது போல மழுமழுவென்றிருந்த வனஜாவின் விரல் களுக்கு மத்தியில் பூவரசம் பூ மோதிரம் இரத்தினங்கள் வைத்து இழைத்த மோதிரம்போலிருந்தது.

"போயும், போயும் பூவரசம்பூவிலா மோதிரம் செய்து போட்டுக் கொள் வார்கள்! என் வனஜாவுக்கு வைர மோதி ரம் அல்லவா போட வேண்டும்!" என்று சொல்லித் தன் கையிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றி அவள் விரலிலே போட்டான் ஜானகிராமன்.

வனஜா வாய் திறவாமல் அஜந்தா ஓவியம் போல அசையாமல் நின்று கொண்டிருந்தாள்.

இந்தச் சமயத்தில் வனஜாவின் கையி லிருந்த ஒரு புத்தகம் ஜானகிராமனின் கவனத்தைக் கவர்ந்தது. "அது என்ன புத்தகம்?" என்று அவன் கேட்டான்.



திருவையாறு மங்களாம்பிகா லாட்ஜ் புரொப்ரைட்டர் ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் குமாரத்தி சௌ. ஜானகிக்கும், குருவாயூர் மிராசுதார் கே. ஏ. லெக்ஷ்மண அய்யர் குமாரர் சிரஞ்சீவி அனந்தராமனுக்கும் 30-6-49 அன்று திருவையாறு பி. எஸ். சுப்பிரமணிய அய்யரின் திவான்வாடா பில்டிங்கில் திருமணம் விமரிசையாக நடந்தது. அவ்வமயம் குருவாயூர் ஸ்ரீமதி பொன்னம்மாள் அவர்களுடையவும் சிதம்பரம் ஸ்ரீ சி. எஸ். ஜயராமன் அவர்களுடையவும் இன்னிசை விருந்துகளும் நடைபெற்றன. அவ்வமயம் பல பிரபல பத்திரிகை ஆசிரியர்களிடமிருந்தும் பெரியோர்களிடமிருந்தும் ஆசிச் செய்திகளும் பரிசுகளும் வந்தன. யாவருக்கும் அன்னார் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார்.

வனஜா விஷமத்தனத்துடன் சிரித்துக் கொண்டே, 'சகுந்தலை நாடகம்' என்றாள்.


"ஓகோ, சகுந்தலை நாடகமா? நல்லவேளை! நான் துஷ்யந்தனைப்போல் மகாராஜனுமில்லை; நீ சகுந்தலையைப் போல ரிஷி குமாரியுமில்லை அந்த மோதிரத்தை எந்த மீனும் விழுங்கி விடாது; நானும் உன்னை மறந்து விட மாட்டேன்!" என்றான் ஜானகிராமன்.

அவ்வளவுதான்; வனஜா 'களுக்' கென்று சிரித்துக் கொண்டே ஓடி, தோட்டத்துப் புதரில் மறைந்து விட்டாள்.

2

இந்தச் சம்பவங்களெல்லாம் பிள்ளைப்பிராயத்தில் கண்ட இனிய கனவுகளைப் போல இப்பொழுது தேய்ந்து மறைந்து விட்டன. இத்தனைக்கும் வனஜாவுக்கும் ஜானகிராமனுக்கும் கல்யாணமாகி இன்னும் மூன்று வருஷங்கள் கூடச் சரியாக ஆகவில்லை.

எவ்வளவுதான் கள்ளங் கபடு இல்லாமல் சத்தியமாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டும் என்று விரும்பினாலும் இந்தப் பட்டணத்து நாகரிகம் எல்லோரையுமே தன்னுடன் ஓரளவு சேர்த்துக் கொண்டு விடுகிறதல்லவா? அதற்கு ஜானகிராமனும் நாளடைவில் அடிமையானான். இதனால் வனஜாவின் வெளி வழியில் அவன் வர வர வெறுப்படைய நேர்ந்தது. அவனுடைய இருதயத்தில் இடம் பெற்றிருந்த அன்பின் அழகைக் கண்டு கொள்ள முடியாதபடி பட்டணத்துச் சூழ்நிலை அவனை மாற்றி விட்டது. அப்புறம் கேட்க வேண்டுமா? மூன்று வருஷ காலம் உலகமென்னும் நீரோடையில் உல்லாசமாகப் போய்க் கொண்டிருந்த வனஜாவின் வாழ்க்கைப் படகில் திடீரென்று ஓட்டை விழுந்துவிட்டது. நாட்டியக்காரியான குமாரி விமலா விரித்த வலையில் ஜானகிராமன் விழுந்து விட்டான்.



அவ்வளவுதான்; ஜானகிராமனின் முன்னோர்கள் எத்தனையோ காலமாகக் காப்பாற்றி வந்த குலப்பெருமை, கௌரவம், வனஜாவின் களங்கமற்ற காதல், ஆரோக்கியம், அமைதி, அழியாப் பெருஞ்செல்வம் ஆகியவைகள் எல்லாம் விமலாவின் வஞ்சகப் புன்னகையிலும், வெறியூட்டும் களியாட்டத்திலும், கயமைத்தனமான அவள் கண் வெட்டிலும் பறிபோய்க் கொண்டிருந்தன.

நாட்கள், வாரங்கள், மாதங்களாகப் பத்து மாதங்கள் மறைந்து விட்டன. பாங்கில் உள்ள பணம் தொலைந்தவுடன் வனஜாவின் நகைகளைக் கொண்டு விமலாவின் வெறியுள்ளத்தைத் திருப்திப் படுத்துவதற்காக வீட்டுக்கு வந்தான் ஜானகிராமன். அப்பொழுதுதான் வனஜா தலையணையில் தலையை வைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். ஜானகிராமனைக் கண்டதும் அவள் எல்லையற்ற ஆவலுடன் எழுந்திருக்க முயன்றாள்; முடியவில்லை. அவள் கையிலிருந்த வைர மோதிரம் நழுவிக் கட்டிலில் விழுந்தது. அதை அவளுக்குத் தெரியாமல் எடுத்து வைத்துக் கொண்டு ஜானகிராமன் வெளியே கிளம்ப எத்தனித்தான்.

"கொஞ்சம் இருங்கள்; பாலாவது சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!" என்று சொல்லி, அவன் கையை எடுத்து அன்புடன் தடவிக் கொடுத்தாள் வனஜா. ஜானகிராமன் வனஜாவைப் பார்த்து

ஒரு வஞ்சகச் சிரிப்புச் சிரித்துவிட்டு, 'விர்'ரென்று விமலாவின் வீட்டை நோக்கிக் கிளம்பிவிட்டான். அவன் சென்ற திக்கை ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள் வனஜா.

3

"விமலா! விமலா!"

"ஏன் இப்படிக் கத்துறீங்க! எஜமானியம்மா சினிமாவுக்குப் போயிருக்கிறாங்க; நீங்க வந்தால் இருக்கச் சொன்னாங்க!" என்றாள் வேலைக்காரி.

வேலைக்காரியின் இந்த மரியாதைக் குறைவான பேச்சு ஜானகிராமனைத் திணற அடித்துவிட்டது. இன்னது செய்வது என்று புரியாமல் அவன் அங்கிருந்த மேஜைமீது கிடந்த வாரப் பத்திரிகை ஒன்றை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தான். ஏதோ பொழுது போக வேண்டுமே என்று அதிலிருந்த ஒரு கதையைப் படிக்கவும் ஆரம்பித்தான்:—

* * *

என் மனைவி இதுவரை எனக்காக எல்லாக் கஷ்டங்களையும் பொறுமையுடன் சகித்து வந்தாள். வறுமையின் கொடுமையால் நான் வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளும்போது அவளுடைய அன்பு நிறைந்த புன் சிரிப்பு எனக்கு உயிரையும் உற்சாகத்தையும் கொடுத்து வந்தது. அவள் இல்லாவிட்டால் நான் மண்ணோடு மண்ணாக மடிந்து எத்தனையோ நாட்களாகியிருக்கும்.

அப்படிப்பட்ட உத்தமி, என் அருமை சுந்தரி என்னிடமிருந்து பிரிந்து விடுவதா? அந்த யமனுக்கு அவ்வளவு தைரியமா? ஆ! பணம், பணம்! அந்தப் பணம் மட்டும் இருந்தால் என் மனைவியின் உயிரைக் காப்பாற்றி விடுவேன். யார் பணம் கொடுப்பார்கள்? என் மனைவி என்னுடன் வாழ்ந்தால் என்ன? அல்லது என்னை விட்டுப் பிரிந்து மடிந்தால்தான் என்ன? யாருக்கு என்ன வந்தது?

ஜுர வேகத்தில் சுந்தரி பிதற்றுகிறாள். "ஐயோ! என்னைக் கொன்று விடுங்களேன்! என்னால் தாங்க முடியவில்லையே!" என்று அலறுகிறாள். என் மனைவியின் தீனக்கதறல் என்னைப் பைத்தியம் பிடித்தவன் போல் செய்து விட்டது. என் மனைவிக்காக எதை வேண்டுமானாலும் செய்யும் துணிவு எனக்கு ஏற்பட்டு விட்டது.


படுக்கையில் கிடந்த என் சுந்தரியின் தலையில் கையை வைத்துப் பார்த்தேன். கை கருகிவிடும் போலச் சுட்டது. அவளுடைய மூச்சுக் காற்று அனலைக் கக்கிற்று. என்ன செய்யலாம் என்று யோசித்தேன். என் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. நான் திருடனானேன்.

எப்பொழுதோ ஒருநாள் வேலை தேடிச் சென்ற ராவ்பகதூரின் வீடு என்னுடைய நினைவுக்கு வந்தது. அந்த வீட்டு அம்மாள் மாடியில் உள்ள தனி அறையில் தன்னுடைய நகைகளைக் கழற்றி வைப்பதைப் பார்த்திருக்கிறேன். அதை இப்போது அவளுக்குத் தெரியாமல் எடுத்து வந்து விட்டால் என்ன?

அவ்வளவுதான்; எனக்குத் திருடுவதைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை. என் மனைவியின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் திருடுவது ஒரு குற்றமாகவும் எனக்குத் தோன்றவில்லை. மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். என் மனைவியைக் காலிலிருந்து கழுத்துவரையில் கம்பளியால் போர்த்தி விட்டு என் வயது சென்ற தாயைக் கூப்பிட்டேன். "சுந்தரியின் அருகில் ஜாக்கிரதையாக உட்கார்ந்திரு; நான் இதோ போய் டாக்டரைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே கிளம்பினேன்.

நடு நிசி. நான் பைத்தியக்காரனைப் போல ராவ்பகதூரின் வீட்டைத் தேடிக் கொண்டு

அதி ரகசியம்!



பெரியவர்:— இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டுபோய்க் கொடு!

வேலைக்காரன்:-யாரிடம், எஜமான்?

பெரியவர்:— அதைச் சொல்லப் படாதுடா! இது ரொம்ப ரொம்ப ரகசியமான கடிதம். எந்த ஆளுக்குப் போய்ச் சேருகிறது என்று கூட யாருக்கும் தெரியப்படாது!

போனேன். என்னுடைய காலடிச் சத்தமே எனக்கு அச்சத்தை அளித்தது. உலகத்திலுள்ள அத்தனை தெய்வங்களையும் வேண்டிக் கொண்டேன். கடைசியில் ராவ்பகதூர் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

அந்த இருட்டில் வீட்டுச் சுவரின்மீது திருடுவதற்காகத் திருடனைப்போல நின்றபோது என் இதயமே நின்றுவிடும்போலிருந்தது. நான் ஏழையாக இருந்தபோதிலும் அதுவரை பிறரால் மதிக்கப்பட்டவனாகவே இருந்தேன். 'இந்தச் சமயத்தில் யாராவது பார்த்து விட்டால்......!' என்று நினைக்கும் போது என் உடலில் ஓடிக்கொண்டிருந்த இரத்தமே உறைந்து விடும்போலிருந்தது. அதற்கேற்றாற்போல் அப்பொழுது யாரோ வரும் காலடி ஓசை கேட்கவே, அவர்கள் கண்ணில் படக்கூடாதே என்ற பயத்தினால் ஏதோ ஏதோ மேலே காலை வைத்து ஏறி அந்த வீட்டு மாடிக்குச் சென்று விட்டேன்.

அங்கு சென்றவுடன் எனக்குத் திருடவே மனம் வரவில்லை. 'கீழே இறங்கி வீட்டுக்குப் போய்விடலாம். கடவுள் விட்ட வழி விட்டும்' என்று தீர்மானித்து இறங்குவதற்காகத் திரும்பினேன். யாரோ விம்மி விம்மி அழும் சத்தம் கேட்டது. பிறகு அந்தச் சத்தம் என்னை நெருங்கி வருவது போலிருந்தது. எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. அப்படியே மாடியிலிருந்து கீழே குதித்து விடலாமா என்று கூட நினைத்தேன். அதே சமயம் நான் இருந்த இடம் பூராவும் மின்சார விளக்கின் வெளிச்சம் பரவிற்று.

அடுத்த நிமிஷம் கண்ணீரும் கம்பலையுமாக ஒரு ஸ்திரீ எனக்கு எதிரே நின்று கொண்டிருந்தாள். நான் உணர்வற்று மரம் போல நின்றுவிட்டேன். அவ்வளவுதான்; அவள் "திருடன்! திருடன்!" என்று பயங்கரமாகக் கூச்சலிட்டாள். அவள் போட்ட சத்தத்தில் நான் இழந்த உணர்ச்சியை மீண்டும் பெற்றேன்.

"அம்மா! நான் திருடனல்ல; திருடுவது என் தொழிலல்ல. உங்களைப் போன்ற ஒரு பெண்மணியின் உயிரைக் காப்பதற்காகப் பைத்தியம் பிடித்தவன்போல இதுமாதிரி நடந்து கொண்டேன்!" என்று சொல்லிவிட்டு, என்னுடைய சரித்திரத்தையும் நான் எதற்காக இந்த மாடிக்கு வந்தேன் என்பதையும் விவரித்தேன். பிறகு "என்மீது கருணை காட்டி நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அந்தப் பெண் தெய்வத்தின் காலில் விழுந்தேன்.

வேறு யார்?



பாகவதர்:—நேற்று நீங்கள் சபாவுக்கு வந்திருந்தீர்களா? அடாடா! என்ன காம்போதி, என்ன பைரவி, இனிமேல் அப்படி ஒரு கச்சேரி அமையப் போகிறதே யில்லை!

நண்பர்:—பேஷ், பாகவதர்வாள்! இன்னொரு வித்வான் பாட்டையும் நீங்கள் கேட்பது உண்டா? நேற்று அப்படி நன்றாய்ப் பாடினது யார்?

பாகவதர்:— வேறொருவர் பாடுவதாவது? நான்தான் பாடினேன்!

அதே சமயம் யாரோ நாலைந்து பேர் மாடிப்படிமீது ஏறிவரும் சத்தம் கேட்டது. "ஐயோ! யாரோ வருகிறார்களே! என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?" என்று நான் வாய்விட்டுக் கதறினேன்.

அவள் வாய் திறக்காமல் உடனே விளக்கை அணைத்துவிட்டு என்னைத் தன் பின்னால் வரும்படி சைகை காட்டினாள். நான் அவளைத் தொடர்ந்து சென்றேன். தன்னுடைய படுக்கையறையில் அவள் என்னைக் கொண்டு போய்விட்டாள். பிறகு வெளியே வந்து கதவைத் தாள் போட்டுக் கொண்டு மின்சார விளக்கின் 'ஸ்விட்'சைப் போட்டாள் அந்தப் பெண்மணி.

"என்ன சத்தம்! 'திருடன்! திருடன்!' என்று யாரோ கூச்சலிட்டார்களே?" என்று மாடிமீது வந்தவர்கள் கேட்டார்கள்.

"இங்கே எந்தத் திருடனும் வரவில்லை. நான்தான், 'நீங்கள் உஷாராக இருக்கிறீர்களா?' என்று பார்ப்பதற்காக 'திருடன், திருடன்!' என்று சும்மா கத்தினேன். போய் ஜாக்கிரதையாக இருங்கள்" என்றாள் அவள். அவர்கள் போய்விட்டனர்.

மாடிப்படிக் கதவைச் சாத்திவிட்டுப் படுக்கையறைக்கு வந்து மீண்டும் மின்சார விளக்கைப் போட்டாள் அந்தப் புண்ணியவதி. நான் நன்றியுடன் அந்தப் பெண் தெய்வத்தைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டேன். அவள் ஒரு நூறு ரூபாய் நோட்டை என்னிடம் கொடுத்து, "இந்தா, இதைக் கொண்டு உன் மனைவியைக் காப்பாற்றிக் கொள்!" என்றாள்.

நான் தோட்டத்து வழியாக அவளைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தபோது பேசாமல் வந்திருக்கக் கூடாதா? "தங்கள் கணவர் ஊரில் இல்லை போலிருக்கிறது. அதனால்தான் நான் இன்று உயிரோடு திரும்பிச் செல்லுகிறேன்" என்று உபசாரத்துக்காகச் சொல்லி வைத்தேன்.

அவ்வாறு சொன்னதுதான் தாமதம்; அவள் கண்களில் கண்ணீர் அருவி போல் பெருகி விட்டது. மிகுந்த துயரத்துடன் "என் கணவர் ஊரில்தானிருக்கிறார். ஆனால் இரவு வேளைகளில் அவர் வீட்டுக்கு வருவதில்லை!" என்றாள்.

எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. 'தங்க விக்கிரகம் போல் இருக்கும் இந்தப் பெண்மணியை மனைவியாகப் பெறும் பாக்கியம் செய்திருக்கும் அறிவற்றவனாக இருக்கிறானே அந்தப் பாவி!' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

அதற்குள் அவள் என்னை வெளியே அனுப்பி விட்டுக் கதவைச் சாத்தினாள். நான் சற்றுத் தயங்கி நின்றேன். "மனைவிக்காக வேண்டி மானத்தைக் கூட லட்சியம் செய்யாமல் திருடக்கூடத் திருடுகிறார்கள்! ஆனால் என் கணவர்........." என்று அவள் வாய் விட்டுச் சொன்னது என் காதில் விழுந்தது......

• • •

ஞானகிராமன் அதற்கு மேல் அந்தக் கதையைப் படிக்கவில்லை. 'மனைவிக்காக வேண்டி மானத்தைக்கூட லட்சியம் செய்யாமல் திருடக்கூடத் திருடுகிறார்கள்! ஆனால் என்னுடைய கணவர்...!' என்ற வாக்கியத்தையே இரண்டு மூன்று தரம் திருப்பித் திருப்பிப் படித்தான். அவ்வளவுதான். அவன் காதில் ஆயிரக்கணக்கான குரல்கள் அந்த வாக்கியத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவது போல இருந்தது! தான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு அவன் சரேலென்று எழுந்திருந்தான். எழுந்திருந்த வேகத்தில் வனஜாவுக்குத் தெரியாமல் அவன் கொண்டு வந்திருந்த வைர மோதிரம் கீழே நழுவி விழுந்தது. 'பளிச்' என்று மின்னிக் கொண்டிருந்த அந்த வைர மோதிரம் அவனைப் பார்த்து, "சகுந்தலை நாடகமா? நல்ல வேளையாக நான் துஷ்யந்தனைப் போல் மகாராஜனுமில்லை; நீ சகுந்தலையைப் போல் ரிஷி குமாரியுமில்லை. இந்த மோதிரத்தை எந்த மீனும் விழுங்கி விடாது: நானும் உன்னை மறந்துவிட மாட்டேன்!" என்று கூறி ஏளனமாகச் சிரிப்பது போலிருந்தது.

ஞானகிராமன் ஒரு கணம் திக்பிரமை பிடித்தவன் போல நின்றான். மறுகணம் "வனஜா! வனஜா! மறக்கமாட்டேன், உன்னை நான் மறக்கவே மாட்டேன்!" என்று வெறி பிடித்தவன் போல் கத்திக் கொண்டே அவன் தன் வீட்டை நோக்கி ஓட்டமாய் ஓடினான்!



சங்கீத அரங்கேற்று விழா

★

திருச்சி ஜில்லா ரிஜிஸ்திரார் ஸ்ரீ டி. பி. ராமநாத ஐயர் பி. ஏ., அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி அம்புஜத்தின் சங்கீத அரங்கேற்று விழா தஞ்சை பங்காரு காமாட்சி அம்மன் சன்னிதியில் விமரிசையாக நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ டி. கே. ரங்காச்சாரியார் சௌ. அம்புஜத்தின் சங்கீத ஞானத்தையும் அந்தச் சங்கீத ஞானத்துக்குக் காரணமாயிருந்த சங்கீத பூஷணம் ஸ்ரீ பி. வி. கணேசய்யருடைய போதனா சக்தியையும் வெகுவாகப் பாராட்டினார். மேற்படி விழாவுக்கு பகவான் ஸ்ரீ ரமண ரிஷிகள் ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.



அங்கு

ஒரு காட்டில் ஒரு முயல் குட்டியும் அதனுடைய தாயும் வசித்து வந்தன. அடிக்கடி வீட்டிற்கு வெளியே வருவதும், அடுத்த வீட்டு முயல்களுடன் சண்டையிடுவதும் தான் முயல் குட்டியின் வேலை. தாயார் எவ்வளவு தான் புத்திமதிகள் சொன்ன போதிலும், அவைகளை ஒரு நீண்ட காதில் வாங்கி மற்றொரு நீண்ட காதினால் அது அலட்சியமாக வெளியே விட்டுக் கொண்டே வந்தது. முயல் குட்டியின் தாய் என்ன செய்யும், பாவம்! 'வீட்டில் அடங்காதது ஊரில் தான் அடங்கும்' என்று சொல்லி அலுத்துக் கொள்ளும்.

ஒரு நாள் முயல் குட்டி அடுத்த வீட்டு முயல்களுடன் புல் தரையில் குதித்துக் குதித்து விளையாடிக்கொண்டிருந்தது. சற்று நேரத்திற் கெல்லாம் விளையாட்டு வினையாக முடிந்தது. ஏன் தெரியுமா? அந்த முயல் குட்டி மற்றொரு முயலின் வாலைக் கடித்தது; அந்த முயல், முயல் குட்டியின் மண்டையில் ஓங்கி அடித்தது. இப்படி ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொண்டன. கடைசியில் முயல்குட்டி அடிபட்ட காயங்களைத் துடைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

வீட்டு ஜன்னலருகில் உட்கார்ந்து முயல் குட்டி தன்னுடைய உதைபட்ட உடம்பைச் சாவகாசமாகத் துடைத்துக்கொண்டிருந்த போது, முயல் ஒன்று குதூகலமாகக் குதித்த வண்ணம் தன் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தது. முயல் குட்டி ஆச்சரியத்துடன் அதைப் பார்த்து, "நீ எங்கே போய்விட்டு வருகிறாய்?" என்று கேட்டது.

"பட்டணத்திற்குப் போய் விட்டு வருகிறேன்" என்று கண்டதையும் காணாததையும் விவரித்து முயல்குட்டியிடம் சொல்லி விட்டு, "நீ வீட்டிலேயே அடைந்து கிடந்தால் உனக்கு உலக அநுபவம் ஒன்றுமே தெரியாது" என்று முடித்துவிட்டு, மிகவும் கர்வமாக நடை போட்டுச் சென்றது அந்த முயல்.

இதைக் கேட்டதும் ஏற்கெனவே பட்டணத்தைப் பார்க்க வேண்டும் என்று இருந்த முயல் குட்டியின் ஆசை இன்னும் அதிகமாகிவிட்டது. அவ்வளவுதான்; அது உடனே மெதுவாக வீட்டின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தது. சுற்று முற்றும் பார்த்துவிட்டு நாலு கால் பாய்ச்சலில் வெகு தூரம் ஓடி, மழ


தெரியாது தான்!



டைரக்டர் (நடிகரிடம்):— தெரிந்ததா? அந்தப் பாறையிலிருந்து நீங்கள் கீழே குதிக்க வேண்டும்.

நடிகர்:— ஐயோ! அவ்வளவு உயரத்திலிருந்து கீழே குதித்தால் எலும்பெல்லாம் நொறுங்கிவிடுமே!

டைரக்டர்:— பரவாயில்லை; உம்முடைய எலும்பு நொறுங்கினால் வெளியிலே யாருக்கும் தெரியாது!



மழ என்று இருந்த தார்ப் பாதையின் மத்தியில் வந்து நின்றது.

பட்டணத்தைப் பார்க்கப்போகிறோம் என்ற கர்வத்தில் அலட்சியமாகத் தார்ப் பாதையில் சென்றுகொண்டிருந்தது முயல் குட்டி. சற்றுத் தூரத்தில் ஒரு முள் வேலி போடப்பட்டிருந்தது. அதனுள் இருந்த புல்வெளியில் சில முயல்கள் விளையாடிக் கொண்டிருந்தன. முயல் குட்டி அவைகளின் அருகில் சென்றதும், சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்த முயல்கள் திடீரென்று மின்னல் வேகத்தில் ஓடிப்போய்ப் புதருக்குள் மறைந்துவிட்டன.

முயல் குட்டி ஒன்றும் புரியாமல் திரும்பிப் பார்த்தபோது சிறிது தூரத்தில் ஒரு சிறுவன் வருவதைக் கண்டது. அவனைத் தொடர்ந்து ஒரு வேட்டை நாயும் வந்துகொண்டிருந்தது. உடனே அதற்குப் பயம் உண்டாகி விட்டது. அந்த இடத்தை விட்டுத் தப்பி ஓடுவதற்காக அது முள் வேலியைத் தாண்ட முயன்றது. அப்போது அதனுடைய கால்கள் வேலியில் சிக்கிக் கொண்டு விட்டன. அதே சமயத்தில் அந்தப் பொல்லாத வேட்டை நாய் 'உர்'ரென்று பாய்ந்தோடி வந்து முயல் குட்டியைப் பிடித்து விட்டது. இன்றுடன் நம் உயிர் போய்விட்டது என்று எண்ணிய முயல் குட்டி பயத்தினால் கண்ணை மூடிக்கொண்டு விடவே, மூர்ச்சையாகி விட்டது.

மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்தபோது முயல் குட்டி ஒரு கூண்டில் அடைப்பட்டிருந்தது தெரிந்தது. காலில் பட்ட காயத்திற்கு யாரோ மருந்து போட்டுக் கட்டியிருந்தார்கள். தனக்கு இந்தக் கதி ஏற்பட்டு விட்டதைக் குறித்து முயல் குட்டிக்கு ஆத்திரமும் துக்கமும் பொத்துக்கொண்டு வந்தன. அதே சமயத்தில் "வீட்டில் அடங்காதது ஊரில் தான் அடங்கும்" என்று தன் தாய் அடிக்கடி சொல்லும் திருவாக்கும் அதனுடைய நினைவிற்கு வந்தது. இதையெல்லாம் நினைத்து முயல் குட்டி கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த போது அதைச் சிறைப் படுத்தியிருந்த சிறுவன் கூண்டின் அருகில் வந்து நின்று அதனுடன் கொஞ்சலானான். தன்னைக் கூண்டில் அடைத்த அந்தச் சிறுவன் மீது முயல் குட்டிக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. அத்துடன் அந்தச் சிறுவன் தன் காதைப் பிடித்து ஆட்டியதற்கும் காலைப் பிடித்து இழுத்ததற்கும் அது 'உர்' என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டது. ஆசையோடு முயல் குட்டியுடன் விளையாடலாம் என்று வந்த அந்தப் பையனுக்கும் கோபம் வந்தது. இரண்டு நாள் பழகினால் அது சரியாய்ப் போய்விடும் என்று நினைத்து அதை அன்று ஒன்றும் செய்யவில்லை.

மறுநாள் அந்தச் சிறுவன் கூண்டின் கதவைத் திறந்தான். அந்தச் சமயத்தில் சட்டென்று அவன் கையிலிருந்து துள்ளி ஒரே தாவாகத் தாவி, ஓட்டம் பிடித்தது முயல் குட்டி.

மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடி அது தன் வீட்டின் வாசலை அடைந்தது. வீட்டினுள் போவதற்கே அதற்கு வெட்கமாயிருந்ததால் வெளியிலேயே நின்று கொண்டிருந்தது. அப்போது முயல் குட்டியின் தாய் வெளியே வந்தது. முயல் குட்டி உரு மாறி இருந்ததால் தாயாரால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. இதனால் மிகவும் வருத்தமடைந்த முயல் குட்டி, "அம்மா!" என்று கதறிக்கொண்டே சென்று தன் தாயாரைக் கட்டி அணைத்துக்கொண்டது.

'நான் அப்போதே சொன்னேனே, கேட்டாயா?' என்று கூறும் பாவனையில் தன் குட்டியை அன்போடு தடவிக் கொடுத்தது தாய் முயல். முயல் குட்டியும் வெற்றிகரமான தோல்வியுடன் சந்தடி செய்யாமல் தாயாரைப் பின் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றது.

ஆலிலையில் கண்ணன்

கி. ரா. கோபாலன்

ஊருக்குப் புறப்படும் சமயம். மைதிலி ஏதோ ஒரு சாமானைப் பைக்குள் வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள். அந்தச் சிறிய கதர்ப் பையில் எவ்வளவு சாமான்களை வைத்துத் திணிக்க முடியுமோ அவ்வளவு சாமான்களையும் வைத்துத் திணித்திருந்தது. மைதிலி மேலும் அதில் எதையோ வைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்ததைக் கண்டதும் ரங்கனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அப்படிப்பட்ட முக்கியமான சாமான் எதுவாகத்தா னிருக்கும்?

“ஏன் அவ்வளவு சிரமப்படுகிறாய்? அந்தப் பையில் இடமுள்ள வரையில் தான் ஏதேதோ வைத்தாகிவிட்டதே! என்ன அது அப்படிப்பட்ட அபூர்வ சாமான்?”

“கிருஷ்ணன்......” என்றாள் மைதிலி சிரித்துக் கொண்டே.

“கிருஷ்ணனா! பாவம், எந்தக் கிருஷ்ணனைக் கடிதாசியில் இப்படிப் பொட்டலம் கட்டிப் பைக்குள்ளே திணிக்கிறாய்?” என்றான் ஆச்சரியமும் கேலியும் கலந்த குரலில்.

மைதிலி வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே “ஆலிலைக் கிருஷ்ணன்” என்றாள். பிறகு பொட்டலத்தைப் பிரித்து இரண்டு பொம்மைகளை எடுத்து அவனுக்குக் காட்டினாள்.

ரங்கன் அவளை நெருங்கி அவள் கையிலிருந்த இரண்டு பொம்மைகளையும் வாங்கிப் பார்த்தான். சுவரில் மாட்டக்கூடிய இரண்டு சிறு மண் பொம்மைகள் அவை. சிரித்துக் கொண்டே அவற்றை மாறிமாறிப் பார்த்தான். ஆலிலையில் சயனித்தபடி வலது காலைத் தூக்கி அணைத்துப் பெருவிரலை வாயில் வைத்துச் சுவைக்கும் கண்ணனின் திருக்கோலத்தைச் சித்திரிக்கும் பொம்மைகள். அந்தப் பொம்மைகளின் பச்சை, சிவப்பு வர்ணங்கள்தான் பிரதானமாக இருந்ததே தவிர, கண் மூக்கு போன்ற அவயவங்களில் தீர்க்கமில்லை. இதென்ன அதிசயப் பொருள்! அபூர்வ சாமான்! இருக்கிற சுமை போதாதென்று இதை வேறு ஊருக்குச் சுமந்து கொண்டு போகவேண்டுமோ? பொம்மைகள் கொஞ்சம் வசீகரமாக இருந்தாலும் எடுத்துக்கொண்டு போகலாம்......



“ஏன், இந்தமாதிரிப் பொம்மைகளெல்லாம் நம்ம ஊரில் அகப்படாதா?” என்றான் ரங்கன் கேலிச் சிரிப்போடு.

“அகப்படாமல் என்ன? அகப்படும். என்னமோ அம்மா வாங்கிக் கொடுத்தாள்......” என்றாள் வெட்கத்துடன் மைதிலி.

“ஓஹோ! இதெல்லாம் இங்கே ரொம்ப மலிவோ! இரண்டும் ஒன்றரை அணா இருக்குமா?”

“ஒன்றரையணாவுக்கா? யார் கொடுக்கிறார்கள்? ஜோடி ஆறணாவுக்குக் குறைய மாட்டேன்னு சொல்லி விட்டானாம், கடைக்காரன்!”

“அப்படியாவது இது எதற்கு? எனக்குப் புரியவில்லையே! நானாயிருந்தால் இதற்கு ஒன்றரை யணாவுக்கு மேல் தம்பிடி கூடக் கொடுத்திருக்க மாட்டேன்!” என்று சொல்லிக் கொண்டே ரங்கன் பொம்மைகளை அவள் கையில் கொடுத்தான்.

“உங்கள் சாமர்த்தியம் யாருக்கு வரும்? ஒன்றரை அணாவுக்கும் வாங்குவீர்கள்; ஓரணாவுக்கும் வாங்குவீர்கள். கடைக்காரன் கொஞ்சம் அசந்தாப்போல இருந்தால் திருடிக் கொண்டு கூட வந்துவிடுவீர்கள்! இதுக்கெல்லாம் விலையைப் பார்த்தால் முடியுமா? என்னமோ அம்மா வாங்கிக் கொடுக்கறய்ன்னு வாங்கிக் கொடுத்திருக்கா!” என்று சொல்லிப் பொம்மைகளை மறுபடியும் கடிதாசியில் சுற்றி அதைப் பையில் திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டாள் மைதிலி.

ரங்கன் சட்டென்று எதையோ புரிந்து கொண்டவன் போல, “ஓஹோ! அம்மா வாங்கிக் கொடுக்

நவீன அரிச்சந்திரன் !



முதலாளி (உட்கார்ந்திருப்பவர்):— பழைய கடனையே திருப்பிக் கொடுத்த பாடில்லை; புதிய கடன் கேட்க வந்து விட்டீரே!

கடனாளி (நிற்பவர்):— ஸார்! பழைய கடனைப் பற்றி நீங்கள் கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம். 'நவீன அரிச்சந்திரன்' டாக்கியிலே எனக்கு 'நட்சத்திரகன்' பார்ட் கொடுக்கிறதாக எக்ரிமெண்ட் ஆகியிருக்கு! கையிலே பணம் வந்ததும் கொடுத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்!

கறும்னு வாங்கிக் கொடுத்திருக்காளா? சரி, சரி! ஜாக்கிரதையாக வை!" என்று சொல்லிவிட்டு, அந்த இடத்தை விட்டு அகன்றான்.

மைதிலி எப்படித்தான் அந்தப் பொம்மைகளைப் பையில் வைத்தாளோ தெரியாது. அந்தப் பையும் அதில் நெருக்கி யடைக்கப்பட்டிருந்த சாமான்களும் வருகிற ஆசாமி கிருஷ்ண பரமாத்மா என்று தெரிந்ததும் பயந்து நெருக்கியடித்துக் தான் இடம் கொடுத்திருக்க வேண்டும்!

★

ஊருக்கு வந்தவுடனே அந்தப் பொம்மைகளைப் பார்வையான இடத்தில் மாட்ட வேண்டுமென்பதுதான் மைதிலியின் முதல் கவலையாக இருந்தது. வாசற்படிக்கு நேராக உள்ள சுவரில் படங்களுக்கு இரு புறத்திலும் ஆணியடித்து அந்தப் பொம்மைகளை மாட்டி அழகு பார்த்து விட்டுத்தான் அவள் மற்ற வீட்டுக் காரியங்களில் கவனம் செலுத்தினாள். ஆலிலைக் கிருஷ்ணனை மாட்டிய பிறகு அந்தச் சுவருக்கு ஒரு மகிமையும் சோபிதமும் ஏற்பட்டிருப்பதாக ரங்கனுக்குத் தோன்றியது. தூரத்துப் பார்வைக்குப் பக்கத்துக் கொன்றாக உயரத்தில் மாட்டியிருக்கும் அந்த ஆலிலைக் கிருஷ்ணன் பொம்மைகள் அழகாக இருப்பது போல்தான் அவன் கண்களுக்கும் தோன்றிற்று.

இரண்டு மாதங்கள் ஓடின. ஒரு நாள் அவன் காரியாலத்திலிருந்து வீடு வந்த பொழுது மைதிலி அந்த ஆலிலை கிருஷ்ணனில் ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். சட்டென்று அவன் மனதில் ஓர் எண்ணம் எழுந்தது. அவன் தனக்குள் மெதுவாகச் சிரித்துக் கொண்டான். மைதிலி அவனைக் கண்டதும் வெட்கமடைந்து அவசர அவசரமாகப் பொம்மையை மறுபடியும் ஆணியில் மாட்டப் போனாள். அவன் ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு, "ஹும்! ரொம்ப நேரமாக அந்தக் கிருஷ்ணனோடு கொஞ்சிக் கொண்டிருக்கிறாயா? அதற்கு ஏதாவது ஒரு வார்த்தை இரண்டு வார்த்தையாவது பேசத் தெரிகிறதா?" என்றான்.

அவள் அந்தப் பொம்மையை ஆணியில் பொருத்திவிட்டு விளையாட்டுக் கோபத்துடன் அவனை ஒரு பார்வை பார்த்தாள். அதோடு அவள் தன் வெட்கத்தையும் ஒரு விதமாகச் சுதாரித்துக் கொண்டாள்.

பிறகு, "வேறு வேலை இல்லை, உங்களுக்கு! அந்தப் பொம்மையைக் கொஞ்சுவதற்காக நான் எடுக்கவில்லை. தூசி படிந்தாற்போல இருந்தது; துடைத்து மாட்டலாம்னு எடுத்தேன்!" என்றாள்.

"தூசியைத் துடைத்து மாட்ட எடுத்தாயா? சரிதான்! துடைத்து விட்டுக் கொஞ்ச நேரம் அதற்குப் பேசக் கற்றுக் கொடுத்தாயாக்கும்! கால் கட்டை விரலை வாயில் வைத்துக் கொண்டிருக்கும் ஆலிலை கிருஷ்ணன் அதை எடுத்து விட்டுப் பேசினானா? இல்லை, எடுக்காமலேயே......?"

"நான் சரியாகக் கவனிக்கவில்லை. மறுபடியும் எப்பொழுதாவது அவன் பேசினால் உங்களைக் கூப்பிட்டுக் காண்பிக்கிறேன்!' என்று மிடுக்காகப் பதில் சொல்லி விட்டுப் போனாள் மைதிலி.

★

அன்று ஞாயிற்றுக் கிழமை. ரங்கன் காரியாலயத்துக்குப் போகவில்லை; மத்தியான வேளையில் அவன் ஏதோ வொரு

புத்தகத்தை எடுத்துவைத்துப் படித்துக் கொண்டிருந்தான். மைதிலி யோசித்து யோசித்துத் தன் தாயாருக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். எதிர் வீட்டில் இருவர் பேசும் குரல் இந்த இளம் தம்பதிகள் கவனத்தைக் கவர்ந்தது. ரங்கன் நாற்காலியில் உட்கார்ந்தபடியே ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். மைதிலி 'சட்' டென்று எழுந்து ஜன்னலுக்குச் சமீபமாக வந்து நின்றாள்.

"என் மாமி! இவள்தான் உங்கள் இரண்டாவது பெண்ணா? பெங்களூரிலே வாழ்க்கைப்பட்டிருக்கிறாள் என்று சொன்னீர்களே?"

"ஆமாம், இங்கே இரண்டு மாதம் இருந்துவிட்டுப் போகலாம்னு வந்திருக்கிறாள்!"

"சரிதான்: ஏதாவது குழந்தைகள் இருக்கோ?"

"கல்யாணமாகி ஆறு வருஷத்துக்கு மேலாச்சு! 'வசவச'ன்னு குழந்தைகள் இல்லாவிட்டாலும் பகவான் அருமைக்காவது ஒன்று கொடுத்திருக்கலாம் — அதுதான் இல்லே. எல்லாத்துக்கும் ஈசுவர சங்கல்பம் இருக்கவேண்டாமா?"

இப்படிச் சொல்லும்போது அடக்கமாட்டாத துக்கம் கலந்திருந்தது அவளுடைய குரலில்.

மைதிலி ரங்கன் முகத்தைப் பார்த்தாள். அவளையறியாமல் வெட்கமும் சிரிப்பும் வந்தது. ரங்கன் சுவரில் மாட்டியிருந்த ஆலிலைக் கிருஷ்ணனை ஒரு தடவை பார்த்து விட்டு, "எதிர் வீட்டு மாமி சுத்த அசடாயிருக்கிறாள், மைதிலி! அந்த மாமிக்கு நீ ஒரு யோசனை சொல்லக் கூடாதோ? அந்தப் பெண் புக்ககம் போகும்போது இது மாதிரி ஒரு ஜோடி ஆலிலைக் கிருஷ்ணன் வாங்கிக் கொடுத்து அனுப்பட்டுமே!" என்றான் குறும்புடன் சிரித்துக் கொண்டே.

"அந்த மாமி அசடு! ஆறணா எட்டணா கொடுத்து வாங்கிவிடுவாள்! நீங்கள் நாளைக்கு ஆபீஸிலிருந்து வரும்போது பொம்மைக் கடைக்குப் போய் மலிவாக ஓரணாவுக்கோ ஒன்றரையணாவுக்கோ ஒரு ஜோடி கிருஷ்ணன் வாங்கிக் கொண்டு வாருங்கள்!" என்றாள் கேலியாக மைதிலி.

"சரி, நான் வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறேன். ஆனால் அந்த மாமிக்குக் கைராசி இருக்குமோ இருக்காதோ? நீயோ உன் அம்மாவுக்குப் பெண்: உன் அம்மாவுக்கு இருக்கும் கைராசி உனக்கும் இருக்கும். நீயே அந்தப் பெண்ணுக்குப் போகும்போது ஆலிலைக் கண்ணனைக் கொண்டு போய்க் கொடுத்துவிடு! பாவம், எதிர்வீட்டு அம்மாள் அடுத்த வருஷமாவது ஒரு பேரனையோ பேத்தியையோ பார்க்கட்டும்!" என்றான் ரங்கன்.

"போதும், பேசாமலிருங்கள்! உங்களுக்கு விளையாட்டுன்னா எப்போதுமே எல்லை மீறிப் போய் விடுகிறது!" என்றாள் மைதிலி.

அடிக்கடி அவளுடைய கவர்ச்சி மிகுந்த முகத்துக்குப் பரிபூரண அழகைக் கொடுத்துக் கொண்டிருக்கும் வெட்கமும் விளையாட்டுக் கோபமும் இப்பொழுது அவள் முக அழகை எப்பொழுதையும் விடக் கொஞ்சம் மிகைப்படுத்தியே காட்டத்தான் செய்தன.



காலக்ஷேபம்

உண்மைதானா?

ஆப்பிரிக்கா போய் வந்த ஒருவர் தம்முடைய அநுபவங்களையெல்லாம் அடிக்கடி பெருமையாகக் கூறி, "ஸார், நான் ஆப்பிரிக்காவி லிருந்தபோது, ஒரு நாள் வெளியே போய்விட்டு என் ஜாகைக்குத் திரும்பினேன். அப்பொழுது ஒரு பெரிய மனிதக் குரங்கு வழியில் நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் நான் என்ன செய்தேன் என்று நினைக்கிறீர்கள்...?" என்று உற்சாகத்துடன் கேட்டு நிறுத்தினார்.

நண்பர் (எரிச்சலுடன்):— உங்களுக்கு எதிர்ச் சுவரில் மாட்டியிருந்த நிலைக் கண்ணாடியை உடனே ஓர் ஆளைக் கூப்பிட்டு அப்புறப்படுத்தி விடச்சொன்னீர்களாக்கும்!

★

அதிர்ஷ்டம்!

ஸ்டேஷன் மாஸ்டர்:—அடாடா, வண்டி பிளாட்பாரத்தைத் தாண்டி விட்டதே! மூன்று பேராய் ஓடி வந்தவர்கள்தானே நீங்கள்! அவர்கள் இருவரும் முந்திக் கொண்டதால் வண்டியில் ஏற முடிந்தது. உங்களுக்குத்தான் அதிர்ஷ்டமில்லை!

அவர்:—ஏன், அவர்களுக்கும் கூட அதிர்ஷ்டம் இல்லைதான்! ஏனென்றால், ஊருக்குப் போக வேண்டியவன் நான்; என்னை வழியனுப்ப வந்தவர்கள் அவர்கள்!

★

ஆறுதல்!

ஒருவர் பார்க்கில் புதிதாக வர்ணம் அடித்திருந்த பெஞ்சின்மேல் உட்கார்ந்துவிட்டார். அவர் எழுந்திருக்கும்போது வர்ணத்தில் ஒருபாகம் வெள்ளை வெளேரென்றிருந்த அவருடைய உடைகளில் ஒட்டிக் கொண்டது.

அவர்:—அடாடா! வீணாய்ப் போய்விட்டதே! ச்சே! ச்சே!

தோட்டக் காவல்காரன்:—ஸார்! போனால் போகிறது; நாளைக்கு மறுபடியும் பெஞ்சிகளைப் பெயிண்ட் செய்ய வரப் போகிறார்கள்!

வித்தியாசம்!

"என்ன ஸார், இது! நேற்று வரைக்கும் அதோ போகிறாரே அந்த மனுஷர் இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தார். இன்றைக்கு என்னடா என்றால் விறைப்பாகப் போகிறாரே!"

"ஆமாம் நேற்று வரைக்கும் அவர் ஒரு மிட்டாய்க் கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்தார். இன்றையிலிருந்து ராணுவத்தில் குமாஸ்தாவாக இருக்கிறார்!"

★

காரணம்!

"பையா! ஏன் அழுகிறாய்?"

"என் அண்ணாவுக்கு மட்டும் லீவு விட்டிருக்கிறார்கள்!"

"உனக்கு ஏன் லீவு விடவில்லை?"

"நான் இன்னும் பள்ளிக்கூடத்துக்கே போகவில்லையே!"

★

சரிதான்!

அம்மா:—ஏண்டா கோபு, மாமாவை ஏண்டா எழுப்புகிறாய்? அசந்து தூங்குகிறாரே, பாவம்!

பையன்:—இல்லை, அம்மா! அவரைத் தேள் கொட்டி விட்டது. அதற்குத்தான் எழுப்புகிறேன்!

★

யார் பிசகு?

சாப்பிடுபவர்:—இதென்ன அநியாயம்? இந்த இட்டிலி ஒரு வாய்க்குக்கூடக் காணவில்லையே! இவ்வளவு சிறியதாயிருக்கிறதே!



ஹோட்டல் பரிசாரகன்:—இருக்கலாம்; ஆனால் அது இட்டிலியின் பிசகல்ல, ஸார்!

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி

260. நிகழ்ந்தது இதுதான்.

ராமனிடம் மேலும் சொல்லுகிறான் மயிந்தன்.

"தர்மத்துக்கு விரோதமாக பாவச் செயலை செய்து விட்டான் ராவணன். அவனுடைய கொள்கையே அக்கிரமக் கொள்கையாய் இருக்கிறது. இலங்கையே அந்த அக்கிரம மயமாய் இருக்கிறது. நல்லதான இடம் அங்கே இல்லை; நியாயத்துக்கே அங்கே இடம் இல்லை. வேறு என்ன செய்ய இருக்கிறது? இங்கே வந்து விட்டான் தம்பி விபீஷணன்."

மூரண்புகு தீவினை
முடித்த முன்னவன்,
காண்புகு சூழலே
சூழக், காண்பதோர்
அரண்பிறி தில்லென,
அருளின் வேலையைச்
சரண்புகுந் தானென
முன்னஞ் சாற்றினன்.


[மூரண்புகு தீவினை முடித்த முன்னவன்: தர்மத்துக்கு நேர் விரோதமான செயலைச் செய்த தமையனது; காண்புகு சூழலே சூழ: அக்கிரமம் நிறைந்த இடமாகவே நாலா பக்கமும் இருக்க; காண்பதோர் அரண் பிறிது இல்லென: நீதி வழியில் க்ஷேமமாய் இருக்கும் இடம் வேறு இல்லை என்று: அருளின் வேலையைச் சரண் புகுந்தான்; கிருபா சமுத்திரமான உன்னை வந்து அடைக்கலம் புகுகிறான்: என்று முன்னம் சாற்றினன்: ராமனது முன்னிலையில் சொன்னான் மயிந்தன்.]

மேலும் விபீஷணனது சிறந்த குணாதிசயங்களைப் பற்றி உள்ளூறப் பாராட்டிச் சொல்லுகிறான்.

"தர்மசீலன், சதா பக்தியில் ஈடுபட்டவன், சத்தியமே லக்ஷ்யமாகக் கொண்டவன்" என்றெல்லாம் சொல்லி விட்டு, "அரக்கர் குலத்தில் பிறந்தவனுக்கு இத்தனை அரும்பெரும் குணம் எப்படி வாய்த்ததென்று யாரும் சந்தேகிக்கலாம். அதற்கு என்ன காரணம் சொல்ல."

ஆயவன் தருமமும்,
ஆதி மூர்த்தியான்
மேயதோர் சிந்தையும்,
மெய்யும், வேதியர்
நாயகன் தரநெடுந்
தவத்து நண்ணினன்,
தூயவன், என்பதோர்
பொருளுஞ் சொல்லினன்.

ரேஷன்!




பெண்:—அப்பா! இலைபோட்டாச்சு.

வீட்டுக்காரர் (வந்திருக்கும் தன் நண்பரிடம்):—என் பெண் எவ்வளவு கெட்டிக்காரி தெரியுமா? பாப்பா!—இரண்டும் இரண்டும் எவ்வளவு?

பெண்:—மூன்று, அப்பா!

வீட்டுக்காரர்:—என் பெண் மூன்று பேர்களுக்குத்தான் சாப்பாடு இருக்கிறது, இன்னொருவருக்கு இல்லை என்பதை எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லுகிறான் பார்த்தீர்களா?

அக்ராட்சி!



வந்தவர் :—ராமஸ்வாமி என்பவருக்கு மணியார்டர் வந்திருந்தால் என்னிடம் கொடுங்கள் ஸார்! நான்தான் அந்த ராமஸ்வாமி.

தபால்காரர் :—நீங்கள்தான் அந்த ராமஸ்வாமி என்று எனக்கு எப்படித் தெரியும்?

வந்தவர் (ஒரு போட்டோவைக் காட்டி) :—இதோ பாருங்கள் என் போட்டோவை! நான் ராமஸ்வாமியாயிராவிட்டால் இந்த போட்டோ என் மாதிரியே எப்படியிருக்க முடியும்?

[ஆயவன் தருமமும்: அந்த விபீஷணன் நீதியில் நிற்பவன்: ஆதி மூர்த்தியான் வேய தே·ச் சிந்தையும்: நிறைவன் இடைவிடாது தங்கும் சிந்தனையை உடையவன். மெய்யும்: சத்தியமே லக்ஷ்யம்; வேதியர் நாயகன் நா: வேதம் வல்லார்க்குத் தலைவன் என்று சொல்லும் பிரம்மாவே அனுக்கிரஹிக்க: நெடுந்தவத்து நல்லிலன்: அதிசயமான தவநெறியில் நிற்க நேர்ந்தது: தூயவன் என்பதைச் சொல்லும் சொல்லிலன்: அபூர்வமான தூய உள்ளம் படைத்தவன் என்பதையும் குறித்து விளக்குகிறான்.]

∴

தூய உள்ளம் படைத்தவன் என்பதை மேலும் விளக்குகிறான்.

"சீதா தேவியை இன்னும் சிறையில் வைத்திருந்தால் யுத்தத்தில் நீயும் அரக்கரும் எல்லாரும் மாண்டு ஒரு எலும்புக் குவியல் ஆகும் இலங்கை"—என்று ஆவேசத்தோடு பேசினான் இந்த விபீஷணன்."

'கற்புடைத் தேவியை
விடாது காத்தியேல்,
எற்புடைக் குன்றமாம்
இலங்கை, ஏழைநின்
பொற்புடை முடித்தலை
புரளும்' என்றொரு
நற்பொருள் உணர்த்தினன்
என்று நாட்டினான்.

[எற்புடைக் குன்றமாம்: எலும்பால் ஆகிய மலையாகி ஒழியும்; ஏழை நின்: பரிதவிக்க வேண்டியவனாகிய உன்னுடைய; பொற்புடை முடித்தலை புரளும்: அழகான முடி தரித்த தலை ராமனது அம்பால் அறுந்து விழுந்து தரையில் புரளும்: நற்பொருள்: ராவணனுக்கு நன்மையைத் தருவதான லாபகரமான விஷயத்தையும்; உணர்த்தினன்: உணரும்படியாக அழுத்தமாய்ச் சொன்னான் விபீஷணன்: என்று நாட்டினான்: என்பதைச் சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் சொன்னான்.]

∴

அவமானத்துக்கு ஆளாய்ப் போன ராவணனுடைய செயல் எல்லாம் அறிவு மயங்கிச் செய்கிறதாகவே இருக்கிறது. ஆகவே தம்பியைப் பார்த்து "இப்படி எல்லாம் பேசிய நீ இன்னும் இங்கே நிற்பாயானால் சாக வேண்டியதுதான். ஒரு விநாடிப் பொழுதில் எங்கேயாவது ஓடி விட வேண்டும்" என்றும் சொல்லி விட்டான்.

எய்தொழில் இராவணன்,
'இனிய சொன்ன நீ
சாந்தொழிற்(கு) உரியை, என்
சார்பு நிற்றியேல் :—
ஆந்தினைப் பொழுதினில்
அகறி யாம்' எனப் ;—
போந்தனன் என்றனன்,
புகுந்த(து) ஈதென்றான்.

[எம் தொழில் ராவணன்: மயக்கத்தினால் எல்லாவற்றையும் தாறுமாறாகச் செய்கிற ராவணன்: இனிய சொன்ன நீ: இப்படிப் பேசிய நீ: சாம் தொழிற்கு உரியை: உனக்கு இனிமேல் என்ன செய்ய இருக்கிறது. சாக வேண்டியதுதான்:- என் சார்பு நிற்றியேல்: என் முன்னிலையில் நின்றாயானால் சாக வேண்டியதுதான்: ஆம் தினைப் பொழுதினில்: ஒரு நொடிப் பொழுதிற்குள்ளே; அகறி (அகன்றி): அகன்று போவாயாக; போந்தனன் என்றனன்: விபீஷணன் இங்கே வந்திருக்கிறான் என்று சொல்லி; புகுந்தது ஈதென்றான்: நிகழ்ந்த காரியம் இதுதான் என்றான்.]

மயிந்தன் தன் தலைவனான ராமனிடத்தில் நிகழ்ந்த காரியத்தைச் சொல்லி முடித்தான். ராமனும் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டான்.

கமலாவின் கணவர்

ரி. ரங்கராஜன்

சிறு பருவத்து நினைவுகளாகிய இனிய கனவுகள் ஒரு காலத்தும் முடிவு பெறுவதில்லை. என்னுடைய சிறு பருவத்து நினைவும் அப்படித்தான். அதற்கு முடிவே கிடையாது. நான் எத்தனையோ தரம் நினைத்துப் பார்ப்பேன். நான் முன்பு இருந்த இருப்பு என்ன? இப்பொழுது இருப்பது என்ன? மலைக்கும் மடுவுக்கும், இல்லை, மடுவுக்கும் மலைக்கும் உள்ள சம்பந்தம்தான். ஏன் இப்படி மாற்றிச் சொல்லுகிறேன் என்றால் என் வாழ்க்கை மடுவிலிருந்துதான் ஆரம்பமாகியிருக்கிறது.

'எனக்கு விவாகம் என்று ஒன்று ஏற்படுமா? அது இந்த ஜன்மத்தில் நடக்கக் கூடியதுதானா?' என்று எண்ணி ஏங்கி நைந்த காலமும் உண்டு. ஆனால் எனக்குக் கல்யாணமுமாகி மன்மதன் போன்ற வடிவமுகள் கணவனாகக் கிடைப்பது என்றால் அதை என்ன பாக்கியம் என்று சொல்வேன்!



என்னுடைய தாய் தந்தையருக்கு என் அண்ணாவும் நானும்தான் குழந்தைகள். அண்ணாவைப் படைத்த கடவுள் என்னையும் படைத்திருக்க வேண்டியதில்லை. அண்ணாவைப் பார்த்த கண்களுக்கு — ஏன், மற்ற எந்த மனிதரைப் பார்த்த கண்களுக்கும்தான்— என்னைப் பார்ப்பதென்றால்...?

உண்மையைச் சொல்லுவதில் என்ன வெட்கம்? நான் அவ்வளவு குரூபி. அழகு என்பது என் உடம்பில் ஒரு துளியாவது கிடையாது. அது மட்டுமா? குழந்தைப் பருவத்தில் அம்மை 'போட்டு' முகத்தில் எள்ளிருக்க இடமின்றி ஒரே தழும்புகள்: புள்ளிகள்.

என்னுடைய வாழ்க்கை எப்படி மலரப் போகிறது? எப்படி கழிக்கப் போகிறது? அதில் நறுமணம் கமழுமா? என்று நினைத்து நினைத்து ஏங்குவேன்.

எங்கள் இருவருடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படாமல் எங்கள் தாய் தந்தையர் காலமாகிவிட்டனர். எனக்குக் கல்யாணம் செய்து என்னைப் புக்ககத்திற்கு அனுப்பும் பொறுப்பு என் அண்ணாவின்மீது விழுந்து விட்டது. என் அண்ணா என்னைப் படிக்க வைத்தான். பத்து வருஷப் பள்ளிக்கூட அநுபவத்தால் எத்தனையோ விஷயங்கள் தெரிந்து கொண்டேன்.

எல்லாரையும் போல் எனக்கும் மணப் பருவம் வந்தது. அந்தப் பருவத்தில் நான் காவியங்களில் படித்த துஷ்யந்தனும், சாருதத்தனும், சந்திராபீடனும் என் மனக்கண் முன் தோன்றினர். ஒரு கணம் என்னை சகுந்தலையாகவும், வசந்த சேனையாகவும், காதம்பரியாகவும் நினைத்துப் பார்ப்பேன். என்ன பேதமை! எனக்குப் புண்டரீகன் போன்ற ஒரு கணவன் கிடைக்கப்போவதில்லை. ஆனாலும் அத்தகைய ஒரு லக்ஷிய புருஷ

னுக்காக ஏங்கிப் பிறகு சந்நியாசினியாகிவிட்ட ஒரு மகா சுவேதையாக நான் ஆவதில் தடை ஒன்றுமிராது என்று முடிவுகட்டி விட்டேன்.

அண்ணா எனக்கு வரன் தேடும் விஷயமாகப் பட்ட சிரமத்தையும், அலைந்த அலைச்சலையும் ஏட்டில் எழுதி அடங்காது. அப்படிக் கஷ்டப்பட்டான். 'பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே' என்று சொல்லுவார்கள். ஆனால் இந்தக் காலத்தில் பணமும் குலமும் மாத்திரம் போதுமா? மனிதர்களுக்கு — அதிலும் பெண்களுக்கு அழகும்தான் வேண்டும். நான் அழகுக்கு எங்கே போவேன்? எனக்கு அழகு ஏது?

என் அண்ணாவுக்கு எத்தனையோ பேர் பெண் கொடுக்க வந்தார்கள். எனக்கு விவாகம் ஆன பிறகுதான், தன்னுடைய மணத்தைப் பற்றிய யோசனை என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டான். எனக்குக் கல்யாணம் இந்த ஜன்மத்தில் இல்லை. அப்பொழுது என் அண்ணாவின் கதி? அதை நினைத்தபோதுதான் என் மனம் கரையில் வீசி எறியப்பட்ட மீனைப் போலத் துடித்தது.

என் அண்ணாவைப் பார்க்க, அவன் நண்பர்கள் எத்தனையோ பேர் எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. 'கோபால்' என்று சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டு அவர்கள் உள்ளே வரும்போது நான் பின் கட்டிற்கு ஓடிவிடுவேன். எனக்கு அவர்களையெல்லாம் பார்க்க பயம். ஒரு சமயம் நண்பர் ஒருவர் வந்தார். அப்பொழுது நானும் அண்ணாவும் கூடத்தில் இருந்தோம். வந்தவர் குரல் கொடுத்துக் கொண்டு வராமல் தட தட வென்று வந்துவிட்டார். என் நிலைமை சகிக்க முடியாமற் போய்விட்டது. உள்ளே போவதற்கு அடி எடுத்து வைத்த நான், ஒரு கணம் அவர் முகத்தைப் பார்த்தேன். அந்த முகத்தில்தான் என்ன களை! என்ன கம்பீரம்!

நண்பர் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது இப்போது என் நினைவில் இல்லை. போகும்போது அந்த நண்பர் என் அண்ணாவை ஒன்று கேட்டார். அந்தக் கேள்வி, என் அண்ணா சொன்ன பதில், அதற்கு அவர் சொன்னது இவை யாவும் இன்னும் என் நினைவில் வேரூன்றிப் போயிருக்கின்றன.

"இந்தப் பெண் யார்?"

"இவள் என் தங்கை."

"தங்கையா? விளையாடுகிறாயா?"

"நான் எதற்காக விளையாட வேண்டும். விவாகம் ஆக வேண்டிய தங்கை ஒருத்தி இருப்பதாகச் சொன்னேனே, அவள்தான் இவள்."

"கோபித்துக் கொள்ளாதே. இவ்வளவு கருப்பாக உனக்குத் தங்கை ஒருத்தி வாய்க்க நீ என்ன குற்றத்தைப் பண்ணினாய்?"

அந்த நண்பரின் கடைசி வாக்கியம் என்னை உலுக்கி எடுத்தது. மூன்று நாட்கள் அந்த மனிதரின் அமிர்த மயமான முகமும், அவர் கக்கிய விஷ வார்த்தைகளும் என்னைப் பேயறையாக அறைந்துகொண்டே இருந்தன. காலம் நான் என்னால் அடக்க முடியவில்லை.


"அண்ணா, அன்று உன்னைப் பார்க்க வந்தாரே! அவர் யார் அண்ணா?" என்று கேட்டேன்.

"அவன் என் நெருங்கிய நண்பர்களில் ஒருவன். ரொம்ப நல்லவன்; அவன் மனைவியும் ரொம்ப நல்லவள். அவனுக்கு மைத்துனி ஒருத்தி இருக்கிறாள். அவளை எனக்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறான்" என்றார் என் அண்ணா.

"இது வரைக்கும் நீ சொல்லவில்லையே அண்ணா! அவருக்கு என்ன பதில் சொன்னாய் நீ?" என்று கேட்டேன்.



ஒரே போடு!



ஒருவர்:—பார்த்தீர்களா, ஸார்! தேள் வந்திருக்கிறதே!

மற்றொருவர் (பதட்டத்துடன்):—எங்கே? எங்கே? இந்தத் தடியால் ஒரே போடாய்ப் போட்டுக்கொன்று விடுகிறேன்!

முதல் மனிதர்:—வேண்டாம், சார்! தேள் என்று புதிசாக ஒரு பத்திரிகை தெருவில் விற்றுக்கொண்டு போகிறான். அதைச் சொன்னேன்!

"என் தங்கைக்கு விவாகமான பின்பு தான், என் கல்யாணத்தைப் பற்றிய யோசனை" என்று சொல்லிவிட்டேன்.

"அண்ணா, நீ எல்லாம் தெரிந்தவன். உனக்கு நான் சொல்லவேண்டுவது ஒன்றுமில்லை. என்னை மணக்க எந்த வாலிபனும் துணியமாட்டான். என்னை இளையாளாக யாருக்காவது ஒரு வயோதிகருக்குக் கொடுத்துவிடு. நீ விவாகமாகிச் சௌக்கியமாக இருப்பதை, இந்தக் கண்கள் பார்க்கவேண்டும். நீ உன் நண்பரின் மைத்துனியை விவாகம் செய்து கொள்" என்று சொன்னேன்.

அண்ணா ஒப்பவில்லை. அவன் எனக்குச் சொன்ன பதிலை, இன்றும் பரம பவித்திரமாக நான் பாராட்டுகிறேன்.

"சகோதரியை அறியாதவர் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். எவன் உத்தமமான சகோதரியைப் பெற்றிருக்கிறானோ, அவன் எதற்காக விவாக வலையில் சிக்க வேண்டும்?" என்றான். அவனுடைய இந்தப் பதில் என்னை வாயடைக்கச் செய்து விட்டது. பிறகு விவாகப் பேச்சை நான் எடுக்கவில்லை.

நான்கு வருஷங்கள் ஓடிவிட்டன. நான் கன்னி; என் அண்ணாவும் பிரும்மசாரியாகத்தான் இருந்தான்.

ஒரு நாள் அவசர அவசரமாக மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க அண்ணா ஓடி வந்தான். அவன் பரபரப்பைக் கண்டு நான் திடுக்கிட்டேன்.

"கமலம், சங்கதி தெரியுமா?" என்று கேட்டான்.

"எதை அண்ணா கேட்கிறாய்?" என்றேன்.

"முன்பு அடிக்கடி நம் அகத்துக்கு வருவானே, ராமச்சந்திரன், நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

"நன்றாய் நினைவிருக்கிறது."

"அவன் மனைவி போனமாதம் இறந்து விட்டாளாம்!"

"ஐயோ பாவம்! இறந்து போய் விட்டாளா? கண் நிறைந்த கணவனை விட்டு, அவள் எப்படித்தான் செத்தாளோ!" என்றேன்.

அந்தக் காலத்தில் சாபம் இடுவதற்கு ரிஷிகள் இருந்தார்கள். இந்தக் காலத்தில் ரிஷிகள் வேண்டுவதில்லை. மனிதர்களின் சாபமே, மனிதர்களைப் பீடிக்கின்றனவே! 'இவ்வளவு குரூபமாக உனக்குத் தங்கை ஒருத்தி வாய்க்க நீ என்ன குற்றத்தைப் பண்ணினாய்?' என்று அவன் சொன்னபோது நான் நினைத்தேன், 'இவனுக்கு அழகான மனைவி ஒருத்தி இருப்பதால் தானே, நம்மை இழிவு படுத்திச் சொல்லச் சொல்கிறது? இவன் மனைவி அப்படியே இருந்துவிடுவாளா, அல்லது இவனே தான் இருந்து விடுவானா?' என்று நினைத்தேன். அந்தச் சமயத்தில் என் மனதில் தோன்றிய அசுர குணத்தின் வினையோ என்னவோ, அறியேன். இன்று அந்தப் பெண் போய்விட்டாள்.

"என்ன யோசிக்கிறாய், கமலம்? முன்பு நீ சொன்னது நினைவிருக்கிறதா? 'அண்ணா, என்னை யாருக்காவது இளையாளாகக் கொடுத்துவிடு' என்று நீ அன்று சொல்லவில்லையா? என் நண்பன் உன்னை இளையாளாக விவாகம் செய்துகொள்ள விரும்புகிறான். உன் சம்மதம் என்ன?" என்று கேட்டான்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட எனக்கு அப்பொழுது எப்படி இருந்தது என்று இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் சொல்ல வரவில்லை.

"அண்ணா! வாஸ்தவந்தானா? அவர் என்னை விவாகம் செய்துகொள்ளுவாரா? விளையாட்டுக்காகச் சொன்னாரா? அல்

லது நீதான் விளையாடுகிறாயா? உண்மையைச் சொல், அண்ணா!'' என்று சொல்லி என் அண்ணாவின் முழங்காலைக் கட்டிக் கொண்டேன்.

"கமலம் உன்னிடம் நான் விளையாட வேண்டுமா? விளையாட்டே அல்ல. அவன் உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வானாம்'' என்றான்.

"'முடியாது' என்றால், "என்ன செய்வாராம்?'' என்று கேட்டு வைத்தேன்.

"முடியாது என்றால், எனக்கும் விவாகமில்லை'' என்றான் அண்ணா.

"அண்ணா நீ சொல்வது புரியவில்லையே. சற்றுப் புரியும்படியாகத்தான் சொல்லேன்'' என்றேன்.


"அவன் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு ஒரே காரணந்தான் கூறுகிறான். அவன் மனைவி ரொம்ப ரூபவதி. அவனிடம் அவனுக்கு மிகவும் பிரியம். அந்தப் பெண்ணுக்குத் தன் தங்கையை எனக்குக் கொடுத்துவிட வேண்டும் என்ற விருப்பம் நீண்டநாட்களாக இருந்தது. நான் அவர்கள் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் தன் விருப்பத்தைச் சொல்லியிருக்கிறான். உன்னுடைய கல்யாணத்தைப் பற்றியும் விசாரிப்பாள். உனக்கு விவாகம் நிச்சயமானவுடன், ஒரே பந்தலில் இரண்டுபேருடைய கல்யாணத்தையும் செய்துவிட விரும்பினாள். அந்த விருப்பம் முடிவு பெறுமுன்னே அவள் போய்விட்டாள். அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றவே, இன்று என் நண்பன் உன்னை விவாகம் செய்து கொள்ள விரும்புவதும்'' என்றான்.

"என் அண்ணாவுக்குக் கல்யாணம் ஆகப்போவது நிச்சயமானால், நான் அவன் குறிப்பிடும் யாரையும் கல்யாணம் செய்துகொள்வேன்'' என்றேன்.

சில வாரங்களுக்கெல்லாம் எங்களுக்கு விவாகம் நடந்தது. துவாரகையிலிருந்து வீடு திரும்பிய குசேலருக்குத் தம் பொன் மாளிகையைக் கண்டதும் எவ்வளவு ஆனந்தம் உண்டாயிற்றோ, அவ்வளவு ஆனந்தம் எனக்கும் ஏற்பட்டது. என் மதனியின் அழகுக்கு யாருடைய அழகை உவமை சொல்வேன்!

என் அண்ணாவின் தூய்மையான அன்புக்கும் என் கணவரின் பரித்தியாகத்துக்கும் ஈடுகாட்ட இந்த உலகில் ஒன்றுமே கிடையாது.

நான் அதிர்ஷ்டசாலி; என் அண்ணா அதிர்ஷ்டசாலி; என் கணவர்—?



சுதந்திர மாளிகை

ஜெயமணி

11. தேர்தல்கள்

தேர்தல்கள் :— இந்தியாவில் தேர்தல் கமிஷன் ஒன்று அமைக்கப்படும். அதில் ஒரு பிரதம தேர்தல் கமிஷனரும் மற்றும் சில கமிஷனர்களும் இருப்பார்கள். பிரதம தேர்தல் கமிஷனரே கமிஷனின் அக்ராசனராக இருந்து வருவார்.

அவ்விஷயமாகப் பார்லிமெண்டு செய்யும் சட்டத்துக்கு உட்பட்டு அவர்களை நியமிக்கவும், கமிஷனர்களின் தொகையை அப்போதைக் கப்போது நிர்ணயிக்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பார்லிமெண்டுக்கும், மாகாண சட்ட சபைகளுக்கும் தேர்தல் ஜாப்தாக்கள் தயாரித்தல், அவைகளுக்கு நடக்கும் தேர்தல்களைப் பரிசீலனை செய்தல், மேற்பார்வையிடுதல் போன்ற விஷயங்களை யொட்டித் தேர்தல் கமிஷனுக்குச் சகல அதிகாரமும் உண்டு. மேலும் குடியரசுத் தலைவர், உபதலைவர் பதவிகளுக்கு நடக்கும் தேர்தல்களும் அந்தக் கமிஷனின் மேற்பார்வையிலேயே நடைபெற வேண்டும்.

மேற்படி தேர்தல்கள் சம்பந்தமாக எழும் சந்தேகங்களையும் தகராறுகளையும் விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதற்காகத் தேர்தல் நீதிச் சபைகளை நியமிக்கவும் கமிஷனுக்கு அதிகாரம் உண்டு.

பார்லிமெண்டு, ராஜாங்க சபை, மாகாண சட்டசபைகள் இவைகளுக்கு ஒவ்வொரு தடவையும் பொதுத் தேர்தல் நடைபெறுமுன், குடியரசுத் தலைவர் தேர்தல் கமிஷனைக் கலந்தாலோசித்துப் பிரதேசவாரியாகவும் கமிஷனர்களை நியமிக்கலாம். தேர்தல் கமிஷனுக்கு உதவி புரிவதே பிரதேசவாரிக் கமிஷனர்களின் கடமையாகும்.

பார்லிமெண்டு சட்டத்துக்கு உட்பட்டு தேர்தல் கமிஷனர்களின் ஊதியம், பதவி காலம் முதலிய எல்லா விவரங்களையும் நிர்ணயிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

எனினும், பிரதம தேர்தல் கமிஷனரைப் பதவியிலிருந்து விலக்க வேண்டுமாயின், சுப்ரீம் கோர்ட் நீதிபதியைப் பதவியிலிருந்து விலக்குவதற்கு என்ன என்ன முறைகளைக் கைக்கொள்ள வேண்டுமோ, அதே முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

பிரதம தேர்தல் கமிஷனரின் சம்மதத்தைப் பெறாமல் எந்தத் தேர்தல் கமிஷனரையும் பதவியிலிருந்து விலக்க யாருக்கும் அதிகாரம் இல்லை.

தேர்தல் கமிஷனின் கோரிக்கைக்கு இணங்க, மேற்படி கமிஷனுக்கும் பிரதேச வாரியாக நியமிக்கப்படும் கமிஷனர்களுக்கும் முறையே குடியரசுத் தலைவரோ, கவர்னரோ தேவையான சிப்பந்திகளைக் கொடுத்து உதவவேண்டும்.

பார்லிமெண்டு, ராஜாங்க சபை, மாகாண சட்டசபைகள் முதலிய எல்லாவற்றிற்கும் கூட்டுத்தொகுதி முறையை ஆதாரமாகக் கொண்டே தேர்தல்கள் நடைபெறும். ஜாதி, வர்ணம், மதம் காரணமாக யாரும் தேர்தல் தொகுதிகளிலிருந்து விலக்கப்பட மாட்டார்கள்.

மேலே குறிப்பிட்ட எல்லா சபைகளுக்கும் சர்வஜன வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்டே தேர்தல்கள் நடைபெறும். அதாவது மேற்படி தேர்தலில் நிற்பதற்குரிய யோக்கியதாம்சங்கள் உள்ள இருபத்தொரு வயதுக்குக் குறையாத சகல இந்தியப் பிரஜைகளுக்கும் வாக்குரிமை உண்டு.

இந்த அரசியல் திட்ட ஷரத்துகளுக்கு முரணின்றி, மேலே குறிப்பிட்ட சபைகளின் தேர்தல்கள் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் ஒட்டி அப்போதைக்

கப்போது சட்ட விதிகளை நிறைவேற்றப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. உசிதம் போல் தேர்தல் தொகுதிகளை ரத்து செய்யவும் அதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசியல் திட்டத்துக்கு முரணின்றியும், பார்லிமெண்டு சட்டத்துக்கு முரணின்றியும் மாகாண சட்டசபைகளின் தேர்தல்கள் சம்பந்தமாக சட்டங்களை வகுக்க அந்தச் சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் தொகுதிகளின் எல்லை, மேற்படி தொகுதிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள ஸ்தானங்கள் முதலியவற்றை ஆட்சேபித்து எந்தக் கோர்ட்டிலும் யாருக்கும் வழக்குத் தொடர உரிமையில்லை.

ஆங்கிலோ இந்தியர்கள்: 1947 ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதிக்கு முன் ரயில்வே, சுங்கம், தபால் தந்தி இலாகாக்களிலுள்ள உத்தியோகங்களிலே எந்த அடிப்படையில் ஆங்கிலோ இந்தியர்கள் நியமிக்கப்பட்டார்களோ, அதே அடிப்படையில் இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தபின் இரண்டு வருஷங்கள் வரையில் அவர்களுக்கு உத்தியோகங்கள் அளிக்கப்பட்டு வரவேண்டும். பிறகு, மேற்படி உத்தியோகங்களிலுள்ள ஆங்கிலோ-இந்தியர்களின் தொகை இரண்டு வருஷங்களுக்கு ஒரு தடவை பத்து சதவிகிதம் குறைக்கப்பட வேண்டும். இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பத்து வருஷங்களுக்குப் பிறகு ஆங்கிலோ-இந்தியர்களுக்கு உத்தியோகங்கள் ஒதுக்கி வைக்கப்படும் முறை அடியோடு நின்று விடவேண்டும்.

தகுந்த யோக்கியதையுள்ள ஆங்கிலோ இந்தியர்களை வேறு பதவிகளில் நியமிப்பதற்கு மேற்படி ஷரத்து எவ்விதத்திலும் தடையாக இராது.

1948 மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்கு முன் கல்வி விஷயமாக ஆங்கிலோ-இந்தியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த அதே மான்யத் தொகைகள் ('கிராண்ட்'), இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பின்னரும் மூன்று வருஷங்கள் வரையில் கொடுக்கப்பட்டு வரவேண்டும். அதன் பிறகு, அந்தத் தொகைகள் மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை பத்து சதவிகிதம் குறைக்கப்படும். இந்தத் திட்டம் அமுலுக்கு வந்த பத்து வருஷங்களுக்குப் பிறகு மேற்படி தொகைகளை அறவே நிறுத்திவிட வேண்டும்.


எனினும், நாற்பது சத விகிதம் மற்ற சமூகத்தினருக்கும் இடம் அளிக்கும் ஆங்கிலோ-இந்தியர்களின் கல்வி ஸ்தாபனங்களுக்கு மாத்திரமே பத்து வருஷங்கள் வரையில் கிராண்டுத் தொகைகள் அளிக்கப்பட்டு வரும்.

கல்வி முதலிய துறைகளில் பிற்போக்கான நிலையிலிருக்கும் சமூகங்களின் கஷ்டங்களை விசாரித்து அவை முன்னேறுவதற்குற்ற சிபார்சுகளைச் செய்வதற்காக ஒரு கமிஷனை நியமிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. அத்தகைய சமூகங்களின் முன்னேற்றத்துக்காக இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் எவ்வளவு மான்யத் தொகை அளிக்க வேண்டும் என்று சிபார்சு செய்யவும் அந்தக் கமிஷனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கமிஷனின் அறிக்கையையும், அதையொட்டிக் கைக்கொள்ளப்படும் நடவடிக்கை விவரங்களையும் குடியரசுத் தலைவர் பார்லிமெண்டில் சமர்ப்பிக்க வேண்டும்.

சரியான வாரிசு இல்லாத சொத்துக்களும் சர்க்காரால் பறிமுதல் செய்யப்படும் சொத்துக்களும் இந்திய சர்க்காருக்கே சொந்தமாகும்.

இந்தியாவை அடுத்து மூன்று மைல் தூரம் வரையில் கடல் பிரதேசம் எல்லாம் இந்திய சர்க்காரின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக இருக்கும். மாகாணங்களுக்கோ சமஸ்தானங்களுக்கோ அதில் எவ்வித உரிமையும் இல்லை. எனினும், அந்தந்த மாகாணத்தை அடுத்துள்ள கடல் பிரதேசத்தில் மீன் பிடிக்கும் அதிகாரம் மாத்திரம் அந்தந்த மாகாணத்தைச் சேர்ந்ததாகும்.



மதுரை ஜில்லா, காந்தி கிராமத்தைச் சேர்ந்த, கஸ்தூரிபாய் கிராம சேவிகை ஸ்ரீமதி கோ. அலங்காரத்தின் சகோதரன் சிரஞ்சீவி செ. ரா. ஸ்ரீனிவாசனுக்கும் சௌபாக்கியவதி கோதைநாயகி (ராஜத்து)க்கும் ஸ்ரீரங்கத்துக்கு அடுத்த திருவெள்ளறையில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. தம்பதிகளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன.
வாழ்க தம்பதிகள்!

வட்ட மேஜை

★ மந்திரிகளே! எம். எல். ஏ. க்களே!

தங்கள் ஜூலை 10-ஆ இதழில் வெளியிட்டுள்ள "வசிபோட வழி சொல்லுகிறோம்!" என்ற தலையங்கத்தை வாசித்தேன்.

இன்று கனம் கோபால் ரெட்டியார் கிராமங்களுக்குச் சென்றும் "இங்கிலீஷ்காரன் ஆட்சியிலாவது சோறு வயிறு நிறையப் போட்டான். காங்கிரஸ் ஆட்சியில் கஞ்சிக்கு வழியில்லை. இங்கிலீஷ்காரனாவது வரமாட்டானா!" என்று கலங்க அடிக்கக்கூடிய பேச்சைச் சாதாரணமாகக் கேட்கலாம். இது உண்மை என்றறிய "கைகாட்டி மர" எம். எல். ஏ.க்களும், மந்திரி பகவான்களும் கால் நடையாகக் கிராமங்கள் தோறும் சுற்றிவேண்டும். 'இங்கு திறப்பு விழா: அங்கு ஆண்டு விழா' என்று உதவாக்கரைச் சுற்றுப் பிரயாணங்கள் செய்வதை விட்டுக் கிராமங்களுக்குச் செல்லட்டும். மாட்டு வண்டியில் செல்லட்டும்; முதல் நரகமாகிய பஸ்ஸில் செல்லட்டும்; பாதாள நரகமாகிய மூன்றும் வகுப்பு ரயிலில் செல்லட்டும். இந்த அரங்கங்களில் கேட்கும் வாதங்களுக்குப் பதில் சொல்ல முடியுமா அவர்களால்?

கனம் கோபால் ரெட்டியார் புதிதாக இடும் அர்த்தமற்ற வரிகள் ஒவ்வொன்றும், அதை நியாயமானதென்று ஊர்ஜிதம் செய்ய அவர் கொடுக்கும் காரணங்களும், அடுத்த தேர்தலில் மஞ்சள் பெட்டிக்குப் படுதோல்வியைக் கொடுக்கும் என்பதை அறிவிக்கும் சாவுமணிகள். "இயந்திர மெஜாரிட்டி"யை வைத்துத் தன் பீற்றும் கொள்கைகளையும், திட்டங்களையும் நிறைவேற்றினால், அது மஞ்சள் பெட்டியை அவமதிப்பதாகும். இன்று எங்களைக் கலங்கச் செய்யும் இந்த எம். எல். ஏ. பிரபுக்களும் மந்திரி மகான்களும் எந்த முகத்தைக் கொண்டு, அடுத்த தேர்தலில் வோட்டைப் பெற வருவார்கள்?

ருஷ்ய போலீஸ் மந்திரி பேரியா "உக்ரைன் மக்கள் யாவரும் கொலை செய்யப்படுவது நம் கட்சியைப் பலப்படுத்துமானால், அதைச் செய்யத் தயங்கமாட்டேன்" என்று கூறினாராம். "என் வரித் திட்டங்களை நிறைவேற்ற யாரையும் இயந்திர மெஜாரிட்டியால் கொல்லுவேன்" என்று கூறக் கனம் கோபால் ரெட்டியார் சர்வாதிகார நாட்டில் ஆட்சி புரியவில்லை என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

"கடவுளுக்கும் கடுக்காய் கொடுப்பவன் அரசியல் வாதி" என்று ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். ஆனால் நடமாடும் தேவதைகளாகிய வாக்காளர்களுக்குக் கடுக்காய் கொடுக்க முடியாது. தேர்தலில், அவர்களை ஏமாற்றிய பிரபுக்களுக்கு, நாளை நடக்கவிருக்கும் தேர்தலில் வாக்காளர்கள் கடுக்காய் கொடுத்து விடுவார்கள்; கொடுப்பார்கள் என்பது ஞாபகம் இருக்கவேண்டும். ஆகவே காந்தி மகான் வளர்த்த காங்கிரஸ் அழிக்கப்பட வேண்டாம். ஆக்கத்தைத் தேடட்டும். பதவி மோகத்தை விட்டுப் பணி செய்ய வரட்டும். "உங்களில் எஜமானனாக விரும்பும் ஒவ்வொருவனும் ஊழியனாக இருக்கட்டும்" என்று ஏசுநாதர் கூறியிருக்கிறார். இதற்கு இன்று நம்மை ஆட்சி புரிபவர்கள் உதவவேண்டும். பொது மக்களுக்குச் செவி சாய்க்க வேண்டும். தேர்தலில் பிச்சை யெடுக்கத் தேவையில்லை. இன்று நடைபெறும் ஆட்சியைப்பற்றி ஸ்ரீமான் பொதுஜனம் நல்ல அபிப்ராயம் கொண்டிருந்தாரானால், அடுத்த தேர்தலில் "போதும் போதும்" என்று கூறும் வரை வோட்டைப் பொழிவார்கள். அதற்கு ஆவன செய்வார்களா நமது எம். எல். ஏ.க்களும் காங்கிரஸ் மந்திரிகளும்?

மதுரை
13—7—49 எம். மரிய ஜூரயிஸ்

○●○

நமது சங்கீதம்

26—6—49 'கல்கி' இதழில், வீணா கோபாலன் அவர்கள் எழுதிய 'லண்டனில் கர்நாடக சங்கீதம்' என்ற கட்டுரையைப் படித்ததும் நான் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவில்லை. ஒரு ஆங்கிலேயர், நம் கர்நாடக சங்கீதத்தின் நுட்பங்களை உணர்ந்து, அதை வெகு ஊக்கத்துடன் கற்றுக்கொண்டது நமக்கெல்லாம் பெருமை யளிக்கக்கூடிய விஷயம். ஒரு ஆங்கிலேயர் நம் புராதன கலைப் பொக்கிஷமான கர்நாடக சங்கீதத்தைக் கற்று, ஒரு மணி நேரம் கச்சேரியும் செய்தார் என்றால் அவருடைய கலை ஆர்வம் எத்தகையதாக இருக்க வேண்டும்! 'அதை ரேடியோவில் ஒலிபரப்பினால் என்ன?' என்று கூடக் கேட்கத் தோன்றுகிறது. வாழ்க, நம் கர்நாடக சங்கீதம்!

நாகபுரி
29—6—49 லக்ஷ்மி

○●○

மலாயா இந்தியர்

மலாயாவில் நடக்கும் விஷயங்கள் பற்றி இந்தியப் பத்திரிகைகள் சரியா உணர்ந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கொள்ளைக் கூட்டத்தார்போல் காட்டினுள் நுழைந்துகொண்டு, மிரட்டிப் பணம் பறித்தல், கொலை செய்தல், தோட்டக்காரர்கள், கடைக்காரர்கள் முதலியவர்களுக்கு பயமுறுத்தும் கடிதம் எழுதிப் பணம் வசூல் செய்தல் முதலிய அயோக்கியச் செயல்களைச் செய்யும் "கொள்ளைக் கூட்டத்தினர்களை" எவ்வகையில் தேசிய இயக்கத்தினருடன் இணைக்க முடியும்?

நேதாஜி சர்க்கார் மந்திரிகளில் ஒருவரும், தற்போது மலாயாவில் இந்திய சர்க்கார் பிரதிநிதியாக இருப்பவருமான ஸ்ரீ தீவியைப் பணக்காரரின் பொம்மை என்றும் தேசியக் கொடியைப் பணக்காரரின் கொடி என்றும் சொல்லித் திரியும் கூட்டத்தைச் சேர்ந்த இவர்களால் இந்தியர்கள் எத்தனையோ பேர் அல்லல்பட்டு வருகின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் எத்தனையோ பேர் இவர்கள் கையால் இறந்துள்ளனர். இந்தச் செய்திகள்

தங்களுக்குத் தெரியாமலா இருக்கும்? செட்டியார்கள் மலைக்காரரின் இவர்கள் மிரட்டலுக்குப் பயந்துதானே பணத்தைக் கொடுத்து அல்லல்பட்டனர்?

உண்மையைத் தெரிந்து எழுதவேண்டியது மிக மிக அவசியம். மலாயா இந்தியர்கள் காட்டினுள் இருக்கும் இந்தியர்களை வெறுக்கிறார்கள். ஆனால் அதிருஷ்டவசமாக இந்திய பத்திரிகைகள் இந்தக் கட்சிக்கு ஆதரவு காட்டி எழுதுவதால் காட்டுக் கட்சிக்குச் சில அரைக் கிறுக்கர்கள் ஓடுகிறார்கள்.

தொழிலாளர் நிலை இங்கு உயர்தரமானதென்று நான் சொல்லவில்லை; ஆனால் காட்டுக் கட்சி கொள்ளைக் கூட்டந்தான். அதை மக்கள் இயக்கம் எனக்கூறவேண்டாம்.

ஈப்போ
4—7—49 ம. ராமசாமி

○●○

கஸ்டம்ஸ் தொல்லை

கடல் கடந்து அயல்நாடுகளுக்குச் சென்றோர் தாய்நாட்டுக்குத் திரும்பும் பொழுது தாய்நாட்டின் கரையைத் தூரத்தே கண்டதும் அவர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்குவது இயற்கை.

ஆனால் இலங்கை வாழ் இந்தியரின் விஷயத்தில் இது எதிர் மாறாகவே உள்ளது. ஏனென்றால், கரை தெரிந்ததும் அங்கு இவர்களின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சிங்காரர்களை (கஸ்டம்ஸ் ஆபீஸர்களைத்தான் சொல்லுகிறேன்) நினைத்தே அவர்கள் கதிகலங்குகிறார்கள்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்குத் தனி ஒருவர் கொண்டு செல்ல அனுமதித்திருக்கும் ரூ. 75ல் தீர்வை கொடுத்த பின் எவ்வளவு மிஞ்சுமோ என்பதே அவர்கள் கவலை. அவர்கள் கொண்டு செல்லும் ரூ. 75ல் தம் மனைவி மக்களுக்கு வேண்டிய சாமான்களை இந்தியாவில் வாங்கினால், வாங்கிய பின் மிச்சமுள்ள பணம் அவர்கள் இந்தியாவில் இரண்டு வாரம் தங்குவதற்குக் கூடப் போதாது. அதற்காக இலங்கையில் உள்ள—அவர்கள் உழைத்துச் சேர்த்து வைத்திருக்கும்—பணத்தில் ஏதாவது சாமான்கள் வாங்கிச் சென்றால் கையோடு கொண்டு செல்ல அனுமதிக்கப் பட்டிருக்கும் ரூ. 75ஐயும் இந்திய கஸ்டம்ஸ் ஆபீஸர்கள் தீர்வை என்ற பெயரால் விழுங்கி விடுகின்றனர்.

சிலர் தங்களுடன் கொண்டு செல்லும் ரூ. 75ஐயும் தீர்வைக்காகக் கொடுத்தும் போதாமல் தம் சொந்த ஊர் சென்று பணம் கடன் வாங்கிக்கொண்டு வந்து பாக்கித் தீர்வையையும் கட்டிவிட்டுச் செல்லும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

நியாயமாகத் தீர்வை போட்டால் இதைப் பற்றிய பிரஸ்தாபத்துக்கே இடம் ஏற்படாது. ஆனால் தீர்வை போடத்தக்க சாமான்களில்லாவிட்டாலும் "மேற்கொண்டு உள்ளதற்கு" என்று அதையே குறைத்தது மூன்று தடவை எழுதி அதற்குத் தீர்வை போடுகிறார்கள். இலங்கையில் புதிது புதிதாகப் போடப்படும் சட்டங்களால் மனம் நொந்திருக்கும் இந்தியர்களை இவ்வாறு அநியாயமாகக் கசக்கிப் பிழிவது வருத்த மூட்டக் கூடியது.

இலங்கை
1—7—49 எம். சுந்தரன்

கொள்ளை போகவில்லை!

தென் இந்திய ரயில்வே பழனி செக்ஷனில் இந்த வருஷத்தில் 9 லட்சம் அடி ஜல்லிக்கல் உடைத்துச் சப்ளை செய்ய டெண்டர் கோரப்பட்டது. சென்ற வருடம் ஜல்லிக்கல் உடைத்து ரயில்வே உபயோகத்திற்குச் சப்ளை செய்ய ஆயிரம் அடிக்கு ரூ. 135 என்று ஒரு கண்டிராக்டரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இந்த வருடம் சென்ற வருடத்தைப் போலல்லாமல் ஆயிரம் அடிக்கு ரூ. 185 என்று கோரப்பட்டது. இதன்படி கண்டிராக்டருக்குச் சென்ற வருடத்தைவிட அதிக லாபம், சுமார் ரூ. 45,000 கிடைக்கும். எரிகிற வீட்டில் பிடுங்கினதே ஆதாயம் என்று நினைத்து ஆட்சி செய்துவந்த வெள்ளை ஏகாதிபத்யத்தின் காலங்களை கண்டிராக்டர்கள் இந்த வருடம் ஏமாந்து போனார்கள். ஏனென்றால் இவர்கள் எதிர்பார்த்து நாக்கைச் சப்பிக் கொண்டிருந்த ஜல்லி டெண்டர் ஏதோ சில காரணங்களால் ரத்தாகி விட்டதாகத் தெரிகிறது. ரயில்வேயின் நிதியிலிருந்து ரூ. 45,000 கொள்ளை போகாமல் தடுக்கப்பட்டது.


பழனி
29—6—49 வி. எஸ். மணி

○●○

கல்லூரியில் ஆங்கிலம்

1947-ம் ஆண்டு மார்ச்சு மாதம் நடந்த எஸ். எஸ். எல். ஸி. தேர்தலில் நல்ல மார்க்குகள் பெற்றுத் தேறினேன். எனக்கு ஆங்கிலத்தில் கிடைத்த மார்க் 55. அந்த ஆண்டு சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சிரமம் ஏதுமின்றி எனக்கு இடம் கிடைத்தது. கல்லூரியில் பிரவேசித்ததும் புத்தகங்களைக் கண்டு திடுக்கிட்டேன். எல்லாம் ஆங்கிலத்திலேயே படிக்க வேண்டியிருந்தது. உயர் நிலைப்பள்ளியில் யாவற்றையும் தமிழில் படித்தவன் நான்.

கவனிக்கவில்லை!



கணவன் :— உன்னை நான் கல்யாணம் செய்துகொண்டேனே, அப்போது என்னுடைய மூளை எப்படித் தானிருந்ததோ, தெரியவில்லை!

மனைவி :—கல்யாணச் சந்தடியில் நானும் அதைக் கவனிக்கவில்லை!

என் சுய முயற்சியால் பல புத்தகங்களை அல்லும் பகலும் படித்து ஆங்கில அறிவு பெற வேண்டியது அவசியமாயிற்று. பள்ளியில் ஒரு வரி விடையில் மார்க்குகள் பெற்றவன், கல்லூரியில் எல்லாம் கட்டுரை மயமாக எழுதி எடுக்க வேண்டியவனுனேன். எவ்வளவு சிரமப்பட்டு எழுதிய போதிலும் கல்லூரி ஆசிரியர்களின் திருக்கரங்கள் முப்பத்தைந்து நம்பருக்குமேல் செல்வது கடினமாக இருக்கிறது. இவ்வாண்டு நான் இன்டர் பரீக்ஷை எழுதினேன். என் துரதிருஷ்டவசமாக இரு முறை எழுத நேர்ந்தது. எல்லா வினக்களுக்கும் எனக்குத் தோன்றியமட்டில் நன்கு விடை எழுதினேன். ஆனால் இம்மாதம் 17-ம் தேதி முடிவைக் கண்டவுடன் என் இதயமே வெடிப்பது போலிருந்தது. ஆங்கில பாகத்திலே என் எண் இல்லை. ஆனால் மற்றிரு பாகங்களில் என்னுடைய எண் இருந்தது கம்பீரமாக. என் சகோதர அன்பர்களில் பலரும் ஆங்கிலத்திலேயே தோல்வி யுறுகின்றனர். உயர்நிலைப் பள்ளியில் மட்டும் ஆங்கிலம் வேண்டியதில்லை யென்று கூறி, கல்லூரியில் வைப்பது நீதியாகுமா? அப்படித்தான் வைக்கினும் கல்லூரி ஆங்கிலக் கல்வி முறையைத் தற்கால நிலைக்கேற்றவாறு மாற்றுதல் வேண்டுமென்பது சிறியேனின் எண்ணம்.

விழுப்புரம்
25—6—49 ஜா. ஜெயசேகரன்

○●○

முன் யோசனை வேண்டாமா?

நமது பாரத தேசத்தில், நாளுக்கு நாள் ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டு வருவதை நாம் கண்ணூல் பார்க்கிறோம். உணவு உற்பத்தி போதுமான அளவு இல்லாததினால் ஏழை ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்நிலையைத் தவிர்ப்பதற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் ஜனத்தொகை அதிகமாகும் விகிதத்தைப் பார்த்தால் உற்பத்தி பெருகும் விகிதத்தை விடப் பன்மடங்கு வேகத்தில் செல்வதாகத் தெரிகிறது.

இதைத் தடுக்கும் வழிதான் என்ன? மக்களின் முன் யோசனையே என்பேன். மனிதன் எப்பொழுதும் புத்திசாலியாய் இருக்க வேண்டும். தன் தேசத்திற்குக் கஷ்டம் வந்தால் அதைத் தன் கஷ்டமாகப் பாவித்து அதை நீக்கும் வழிகளில் ஒவ்வொருவனும் ஈடுபட வேண்டும். ஜனத் தொகையைக் கட்டுப்படுத்த, ஒரு நிலையில் நிறுத்த, மனிதனால் முடியும். எப்படி? அவனது பருவத்தினுள் நாள் கழித்து விவாகம் (Late Marriage), பிறப்பைத் தடுத்தல் (Birth Control) முதலிய வழிகளில் மனிதன் மனதைச் செலுத்தினால் தேசம் உய்ய வழி உண்டு. இல்லையேல், பஞ்சம் வியாதி இவைகளினால் மரண விகிதம் இயற்கையாகவே அதிகமாகி, நாட்டு மக்களின் மன நிம்மதியைப் பெரிதும் கெடுக்கும்.

பம்பாய்
28—6—49 கே. ஆர். கிருஷ்ணசாமி

○●○

பவானி சாகரம்

பவானி நதியை மறித்துக் கட்டப்படும் அணையைப் பற்றித் தாங்கள் எழுதிய இரண்டு கட்டுரைகளையும் ஆர்வத்துடன் படித்தேன்.

கட்டுரையைப் படித்த எனக்கு நானும் தங்கள் கோஷ்டியில் கூட வந்து சுற்றிய தாகவே தோன்றுகிறது.

பவானி நகர் வீதிகளில் தங்கள் கோஷ்டியுடன் போவது போலவும், திடீரென ஒரு ஆபீஸரின் வீட்டினுள் புகுந்து பார்த்து 'ஆஹா! எவ்வளவு வசதியான ஜாகை? என்ன கச்சிதமான ஏற்பாடுகள்? சுகாதார முறையில் 'செப்டிக் டாங்கி'யில் போய்விழும் 'பிளஷ் அவுட்' வசதிகள் என்ன?' என்று ஒவ்வொன்றாகப் பார்த்து 'நமக்கு இம்மாதிரியான ஒரு ஜாகை கிடைத்தால் ஆயுசு பூராவும் அங்கேயே நிம்மதியாகக் கழிக்கலாமே' என்ற நினைவு உண்டாகிறது. அடுத்தபடியாக ஒரு தொழிலாளியின் வீட்டினுள் நுழைந்து அவனுடைய வசதியான இருக்கையைக் கண்டு தங்களுடன் களிப்புறுகிறேன்.

பவானி சாகரத்தைப் பற்றிய தண்ணீர்த் தேக்கம், தண்ணீர்ப் பரப்பு, வாய்க்கால் நீளம், பயன்படுத்தக் கூடிய விஸ்தீரணம் முதலிய டெக்னிகல் விவரங்கள் உள்பட, எல்லா விவரங்களையும் எங்கள் மனக்கண் முன் கொண்டு நிறுத்தியதற்கு, நேரில் போய்ப் பார்க்க முடியாத அநேகரின் சார்பாக என் மனமார்ந்த நன்றி.

திருநெல்வேலி
1—7—49 அ. சங்கரசுவாமி

○●○

பொதுஜன மனோபாவம்

சென்ற இதழில் தாங்கள் எழுதிய ''வரி போட வழி சொல்லுகிறோம்'' என்ற தலையங்கம் வெகு அற்புதமாக இருக்கிறது. பொது ஜனங்கள் நம் மந்திரி சபையைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். இன்னொரு மகிழ்ச்சிகரமான விஷயம் என்னவென்றால் எல்லோரும் மறந்துவிட்ட நடுத்தர வகுப்பாரைப் பற்றித் தாங்கள் குறிப்பிட்டிருப்பதுதான். அவர்களுடைய கஷ்டங்களைத் தாங்கள்தான் உள்ளபடி உணர்ந்திருக்கிறீர்கள். இன்றையதினம் அதிகமாகக் கஷ்டப்படுகிறவர்கள் நடுத்தர வகுப்பார்தான். நம் மந்திரி சபையின் கண்மூடித்தனமான வரி விதிப்புக் கொள்கையை நேர்மையாகக் கண்டித்திருப்பது பொதுஜன மனோபாவத்தை நன்கு பிரதிபலிக்கிறது.

சேத்தூர்
11—7—49 நா. ரகுபதி

○●○

தேசக் கொடி

நேற்று அடுத்த வீட்டு மாமி என்னிடம் வந்து ஒரு பொட்டலத்தை நீட்டினாள். அதைப் பிரித்துப் பார்த்த என்னை அப்படியே தூக்கி வாரிப் போட்டது. அதற்குள்ளிருந்த ஒரு பட்டுப் புடவையில் உடல் பூராவும் தேசீயக் கொடியின் மூவர்ணத்திலும் கரை முழுவதும் தேசீயக் கொடியின் உருவத்திலும் இழைத்ததுதான் அதற்குக் காரணம்.

''என் மாமி இதைக் கட்டிக் கொள்ளவா வாங்கி இருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''இது என்ன கேள்வி, புடவையைக் கட்டிக் கொள்ளத்தானே வாங்குவார்கள்!'' என்றாள் அந்த மாமி. ''புடவை தேவலை'' என்று

சொல்லி அந்த மாமியை அனுப்பி வைத்தேன். இப்படியாகத் தற்காலத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே தேசியக் கொடி மயமாகவே இருக்கிறது. எந்தப் பொருளை எடுத்தாலும் அது ஒரு தேசியக் கொடியின் உருவத்துடனேயோ அல்லது மூவர்ணக் கொடியின் மூவர்ணத்திலேயோ திகழ்வதைக் காணலாம். புடவைகளின் பார்டரில், பையின் மேல், மூக்குப் பொடி டப்பா, கையில் போட்டுக் கொள்ளும் வளைகள், தலையில் வைத்துக் கொள்ளும் ரிப்பன் இதே மாதிரியாக எந்தப் பொருளை எடுத்தாலும் மூவர்ணக் கொடியின் நிறமாகவே இருக்கிறது.

பாரதத் தாயின் தெய்வச் சின்னமாக வைத்துப் பூஜிக்கவேண்டிய ஒரு உயர்ந்த பொருளை நாம் உபயோகிக்கும் அற்பப் பொருள்களுக்கெல்லாம் உபயோகிப்பதுதான் நாம் நம் தாய்நாட்டுக்குச் செலுத்தும் மரியாதையா? நம் தாயின் மணிக் கொடிக்குச் செலுத்தும் வணக்கமா? எதற்கெடுத்தாலும் சட்டங்களைப் போட்டுத் தள்ளும் சர்க்கார் ஏன் இந்த மாதிரி தவறு இனிமேல் நடக்காதிருக்கும் பொருட்டு ஒரு உத்தரவு போடக்கூடாது?

தெய்வமெனக் கருதி அதை வைத்துப் பூஜிக்காவிட்டாலும் கண்டபடி யெல்லாம் அதை உபயோகித்து இழிவு படுத்தாமல் இருந்தால் அதுவே நலம்.

சென்னை
5—7—49 சாவித்திரி ரமணி

○●○

★ வள்ளுவர் வழி

ஜூலை 10உ இதழில் எழுதியிருந்த 'வரி போட வழி சொல்லுகிறோம்' என்ற தலையங்கத்தைப் படிக்க நேரிட்டது. தங்களுடைய கருத்துக்களெல்லாம் வள்ளுவரது பல குறட்பாக்களை அணி செய்வனவாகவே அமைந்திருக்கக் கண்டு அளவிலா ஆனந்தமடைந்தேன்.

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்

என்றார் வள்ளுவர்.

ஆனால் நீங்கள் எழுதியுள்ளபடி, அபத்தமான-அர்த்தமற்ற-வரிப் பிரேரணைகளைத் திர ஆலோசியாமல் சட்ட சபையில் கொண்டு வந்து, காங்கிரஸுக்கு எதிராக மூன்று மாதப் பிரசாரத்துக்கு இடமளித்து, பின்பு அவைகளை வாபஸ் வாங்கிக் கொண்டு காங்கிரஸின் செல்வாக்காகிய முதலையும் இழந்து விட்டார் அறிவுடை அமைச்சர் கனம் கோபால ரெட்டியார்! இதை எண்ணும்போது நமக்கு வருத்தமாகத்தா னிருக்கிறது.

'கை காட்டிமர' எம். எல். ஏ.க்கள் அவரை எதற்கும் ஆதரித்து விடுவர்; வாதங்கள் எல்லாம் தமக்கு எதிரானவைகளாக இருந்தாலும் தீர்ப்பு மட்டும் தம் சார்பாகவே இருக்கும் என்று எண்ணினார் அமைச்சர். செலக்ட் கமிட்டியாரோ 'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்பதை உணர்ந்து இப் பிரேரணைகளால் பிற்காலத்தில் தமக்கும் காங்கிரஸுக்கும் ஏற்படப் போகும் இழிவை எண்ணி 'அஞ்சுவது அஞ்சியதால்' முக்கால் பகுதிப் பிரேரணைகளும் அடிபட்டுப்போயின.

எண்ணித் துணிக கருமம்: துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு

என்பதைக் கனம் கோபாலர் இப்போதாவது உணர்ந்திருக்க வேண்டும்.

கருவியும், காலமும், செய்கையும், செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு

என்று கூறுங்கால் வள்ளுவர் கூறும், செய்யுங்கால் வேண்டும் கருவிகளாகிய பொது மக்களது ஆதரவும், அதற்கேற்ற காலமாகிய சுயராஜ்யத்துக்குப் பின் ஐந்தாண்டுகளாவது கழிதலும், செய்யும் வழியாகிய ஏழை, நடுத்தர வகுப்பாரை ஒழித்துப் பணக்காரர்களுக்கும், முதலாளிகளுக்கும் கள்ள மார்க்கெட்காரர்களுக்கும், அகவிலை உயர்வினால் அமோக லாபமடைந்த லட்சாதிகாரிகளுக்கும் நேரடியாக (இவர்களெல்லாரும் வரிகளை ஏழைகளின் தலையில் கட்டிவிட முடியாதவாறு) வரி போடுதலும் ஆகிய இவற்றை எண்ணிப் பார்க்கும் ஆற்றலமைந்த அறிவாளியே அமைச்சன் என்பதை உணரவேண்டும் கனம் கோபால ரெட்டியார்.

செவி கைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு

எனும்போது 'தமது செவிகள் கசக்குமாறு சொல்லப்படுகின்ற சொற்களைப் பொறுத்து அவற்றில் உள்ள உண்மைகளை உணரும் வேந்தனது கவிகையின் கீழ் உலகம் உள்ள அமைதியுடன் தங்கும் என்பதை மந்திரியார் உணர்ந்து பொது மக்களது கருத்துக்களுக்கு இடமளித்துச் செய்யும் செயல்களைச் செம்மையுறச் செய்யட்டும்.

பிறர் கூறும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் பண்புதான் நமது வரவுசெலவு மந்திரியாரிடம் இல்லையே! ஆகவே, நாட்டிலே சமதர்மக் கருத்துடைய தேசிய மந்திரி சபை ஏற்பட்டால்தான் ஏழை மக்களும், நடுத்தர வகுப்பினரும் சுதந்திரக் கனியின் இன்சுவையைத் துய்த்து மகிழ முடியும்.

கோவை
11—7—49 ந. மாதவன்

பிழைத்த விதம்



"ஓங்கோலில் நடந்த பயங்கர ரயில் விபத்தைப் பற்றித் தெரியுமல்லவா?"

"ஆமாம்."

"அந்த விபத்தில் நான் ஒருவன்தான் தப்பிப் பிழைத்தேன்."

"எப்படிப் பிழைத்தீர்?"

"எனக்கு அன்று ரயில் தப்பி விட்டது. நானும் தப்பி விட்டேன்."

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "மந்திரிகளே! எம். எல். ஏ.க்களே!" என்ற கடிதம் எழுதிய மதுரை ஸ்ரீ எம். மரியதாஸுக்கும், "வள்ளுவர் வழி" என்ற கடிதம் எழுதிய கோவை ஸ்ரீ ந. மாதவனுக்கும் ரூ. 12-8-0 விதம் பிரித்து வழங்கப்பட்டது.

Glaxo

க்ளாக்ஸோ

குழந்தை ஆகாரம்

உறுதியான பற்கள்...
வலுவான தேகக்கட்டு...
தளராத வளர்ச்சி...
சுத்தத்திற்கு உத்தரவாதமும்
பாதுகாப்புமுள்ள இயற்கைப்
பாலுணவான க்ளாக்ஸோ
சாப்பிடுவதால் கிடைக்கிறது...






"உணவு ஊட்ட ஆரம்பிக்கும்போது"


நாளடைவில் குழந்தைக்கு திட உணவு அவசியமாகும். வளர்ச்சிக்கு சுலபமானதும் சுவையானதுமான பாக்ஸைவிட நல்லதும் வெகு திருப்திகரமானதுமான உணவு வேறில்லை. திட உணவு கொடுக்க ஆரம்பிக்கும் போது சிறிய ஸ்பூன் அளவில் கொஞ்சம் கொஞ்சமாக பாக்ஸைக் கொடுங்கள். பாக்ஸைக் காய்ச்ச வேண்டாம். — சூடான பாலும் சர்க்கரையும் கலந்தால் போதும்.


இந்தியாவில் கட்டுநரவாளர்கள் :
எச். ஜே. பாஸ்டர் & கோ., லிமிடெட், பம்பாய் - கல்கத்தா - மதராஸ்


காஷ்மீரத்தின் நறுமணம் நிறைந்த காற்று....
....அங்குள்ள அழகான பள்ளத் தாக்குகளை விஜயம் செய்யும் ஜனங்களுக்கு ஆறுதல் அளிக்கிறது. இப்பெரும் பாக்கியத்தை கனவாய்களில் வசிக்கும் ஒரு சிலரே அநுபவிக்கக் கூடும். ஆனால் உங்களில் பெரும்பாலோர் ஓர் 'ஓரியண்ட்' விசிறியை அமைப்பின், கடுமையான கோடைக்காலத்திலகூட சுகமாக வேலை செய்து இளைப்பாற முடியும். மேலும் "ஓரியண்ட்" விசிறி குறைந்த மின்சார விலையில் நன்றாக உழைப்பதால், அவை மிகவும் மலிவானவை.
ஓரியண்ட்
ஏ.ஸி, டி.ஸி.
விசிறிகள்
● ஸீலிங் விசிறிகளும், டேபிள் விசிறிகளும்
● மின்சார பம்புகளும், கை பம்புகளும்
● மின்சார மோட்டார்கள்.
தி கல்கத்தா எலெக்ட்ரிகல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
4, ஸ்டிரிங்கர் தெரு, மதராஸ்.
இதர ஆபீஸ்கள்: கல்கத்தா, பம்பாய், டெல்லி, கான்பூர், பாட்னா

நிம்மதியாகத் தூங்குங்கள்...

சுறுசுறுப்பாக எழுந்திருங்கள்!





பேவர் - லூபா உதவியால்

JAZ

உங்கள் ஜாஸ் அலாரம் உங்களை நிச்சயம் எழுப்பிவிடும் என்ற நம்பிக்கையுடன் நிம்மதியாகத் தூங்குங்கள். இப் பிரபல கடிகாரத்தின் இனிமையான ஆனால் நீடித்தெழும் ஸ்வரங்களின் இசைக்கு எழுந்துக் கொள்ளுங்கள் தெ. 8445. பிளெயின் டயல் ரூ. 24/8- தெ. 8445. ரேடியம் டயல் ரூ. 26/- ரூ. 32/- முதல் 72/- வரை இன்னும் அநேகவித மாடல்களிலும் கிடைக்கும். படங்களுடன் கூடிய விவரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.

★ எல்லா ஜாஸ் டைம்பீஸ்களிலும் பறவை டிரேட் மார்க் இருக்கிறது. இவைகள், பேவர் - லூபா கம்பெனியாரால் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டு அவர்களது ஷோ-ரூமிலும், அத்தாக்ஷி பெற்ற டீலர்களிடமும் விற்பனையாகின்றன.

FAVRE-LEUBA

பேவர் - லூபா & கோ., லிட்., பம்பாய் & கல்கத்தா

எக்ஸிமா

"உடனேயே நிவாரணமடைகிறது"

என்ஜினியர் கெமிஸ்டு




"கால்களில் எரிச்சலளித்து வந்த எக்ஸிமாவை உங்கள் அற்புதமான தயாரிப்புதான் உடனே நிவாரண மளித்தது என்று கூற முன் வருகிறேன். தடிப்பான தோலை மென்மையாக்கவும், ஏற்பட்ட எரிச்சலைப் போக்கவும் ஒரே ஒரு பாட்டில் வெல்டர்மா சரியாக இருந்தது. இதே சரும நோயினாலோ அல்லது இதைப்போல வேறுவித சரும நோயினாலோ அல்லல் படுகிறவர்களுக்கு வெல்டர்மாவைத்தான் சிபார்சு செய்ய வேண்டும் என்று கூறத் தேவையில்லை." — CL.

வைத்தியர்களும் வற்புறுத்துவது:

எக்ஸிமா, கொப்புளங்கள், சிராய்ப்பு பருக்கள் முதலிய சகல சரும நோய்களும் வெல்டர்மாவிலுள்ள 'கிருமி நாசன சக்திகளிரண்டுக்கும்' அடங்கி குணமாகி விடுகின்றன. இந்த நவீன மருந்து முற்றிலும் விநோதமானது. 'நீரில் எண்ணெய் சேர்க்கை' என்னும் ஆதாரம் வைத்திய ஆராய்ச்சியிலேயே மிகவும் அபூர்வம். முதலாவதாக நோய்ப்பட்ட இடத்திலுள்ள விஷத்தை வெளியேற்ற உதவுகிறது. நோய் தொத்தி விடுமென்ற அபாயமே இல்லை. இரண்டாவதாக வெல்டர்மாவின் இருவித கிருமி நாசன சக்திகளும் (ஒவ்வொன்றும் வெவ்வேறு வித விஷக் கிருமிகளுக்குச் சத்துரு) போட்ட மாத்திரத்திலேயே வியாதி தொத்தியிருக்கும் மூலஸ்தானத்திற்கு சென்று விடும். எரிச்சல் அடங்கி விச்ராந்தி ஏற்படுகிறது. ஆனால், வெல்டர்மாவை முதல் தடவையாக உபயோகிக்கும்போது சற்று விரு விருப்பை உண்டாக்கும். வெல்டர்மாவிலுள்ள இருவித கிருமிநாசன சக்திகளும் வேலை செய்யத் தொடங்கி விட்டன என்பதற்கு இதுதான் அறிகுறி.

கிருமிகளைக் கொல்ல கார்பாலிக் களிம்பைவிட பத்து மடங்கு அதிக சக்தி வாய்ந்தது. இருந்தாலும் ஆறுதல் தரும். வெகு மோசமான சரும நோய்களுக்கெல்லாம் வெல்டர்மாவைத்தான் சரும வைத்திய நிபுணர்கள் வற்புறுத்துகிறார்கள். வைத்திய சாலைகளிலும் ஆராய்ச்சி சாலைகளிலும் பரிசீலனை செய்யப்பட்டது. தூய வெண்மையானது. கறை படாது. வழு வழுப்பானது, ஆனாலும் பிசுக்கற்றது. உபயோகிக்கத் தகுந்தது. வெட்டுக்காயங்களையும் சிராய்ப்புகளையும் விரைவில் ஆற்றி விடுகிறது.

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா — டில்லி — மதராஸ்



DOUBLE-ANTISEPTIC
Valderma
THE *Non-Greasy* BALM

No. 2

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஜூலை 24, 1949 4 அணா

REGD. No. M. 4392



LTS 197-172 TM.